
TG431

# கர்நாடக சங்கீதம்

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

## தரம் - 6



அழகியல் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

# கர்நாடக சங்கீதம்
# ஆசிரியர் அறிவுரைப்பு
# வழிகாட்டி

## தரம் - 6

அழகியல் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
2007

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

**கர்நாடக சங்கீதம்**
**ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி**
**தரம் - 6**

**முதலாம் பதிப்பு - 2007**
**மீள்பதிப்பு - 2009**

வெளியீடு
கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்காக
“நனிலா பப்லிகேஷன் (பிரைவேட்) லிமிட்டடினால்”
அச்சிடப்பட்டு வெளியிடபட்டது.

# பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

தற்போதைய ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது ஆசிரியர்கள் தமது பாடங்களைக் கற்பிப்பதற்குப் பின்பற்ற வேண்டிய அவசியமான கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகளை மேற்கொள்வதற்கு சிறந்த ஒரு வழியாட்டியாகும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது நீங்கள், உங்கள் வகுப்பறைச் செயற்பாடுகளை மாணவர் - மையக் கற்றலுக்கு ஏற்ற வகையில் ஒழுங்கமைப்பதற்கான வழிகாட்டலை வழங்குகின்றது. இன்றைய வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை மாணவர் மையமாக ஒழுங்கமைப்பதென்பது எமது இலங்கை ஆசிரியருக்கும் வகுப்பறைக்கும் ஒரு புதிய அனுபவமன்று. எவ்வாறாயினும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி மூலம் மாணவர் மையக் கற்றல் - கற்பித்தல் முறைமையியலுக்கு ஒரு புதிய பண்புக் கூறு கிடைக்கிறது.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது மாணவர்களின் பங்குபற்றுதலை உறுதிப்படுத்தும் வகையில் பாடத்தைத் திட்டமிடுவதற்கு அவசியமான பாதையை வழங்குவதோடு மட்டுமல்லாது அதற்கு அவசியமான சூழலை மதிநுட்பத்துடன் கட்டியெழுப்பவும் உதவுகிறது.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் உள்ளார்ந்த அடிப்படையானது ஆசிரியர் என்பவர் வெறுமனே அறிவை ஊடுகடத்துபவராக அல்லாது அறிவில் மாற்றத்தை ஏற்படுத்துபவராகவும் இருக்க வேண்டும் என்னும் தத்துவத்தைக் கொண்டுள்ளது. இச்செயற்பாடானது மாணவரை கற்பவர் என்னும் நிலையிலிருந்து அறிவைத் தேடுபவர் என்னும் நிலையை அடைவதற்கும், இதன் மூலம் புதிய அறிவை உருவாக்கவும் உதவுகின்றது. ஆகவே, ஆசிரியர் என்பவர் மாணவருக்கு புதிய அறிவை ஆய்ந்தறிந்து கண்டுபிடிப்பதற்கான வழிகாட்டியாகவும் தூண்டியாகவும் செயற்பட வேண்டும்.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் உள்ளார்ந்த தத்துவமும் செயற்பாட்டு வடிவமைப்பும் பழமையான கற்பித்தல் முறைமையியலையும் சிந்தனைகளால் உண்டாகும் தடைகளையும் தகர்த்தெறிய ஆசிரியர்களைத் தூண்டும் என நம்பப்படுகின்றது. எனவே, ஆசிரியர்கள் புதிய கற்பித்தல் அணுகுமுறைகளையும் கற்பித்தல் முறைகளையும் அவசியம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். புதிய ஆயிரமாம் ஆண்டானது மிகப் பரந்த எல்லையற்ற புதிய அறிவின் தோற்றத்தையும் உருவாக்கத்தையும் கண்டுள்ளது. ஆகவே, ஒவ்வொருவரும் தமது புதிய செயற்பாடுகளை ஒரு முகப்படுத்தித் திட்டமிடுவதற்குப் பழைய முறைகளை மாற்றியமைக்க வேண்டிய தேவையுள்ளது.

ஆசிரியர் தனது கற்பித்தல் பணியில் பயன்படுத்தக்கூடிய அடிப்படையான அறிவுறுத்தல்களை வழங்குவதுடன் உயர் அணுகுமுறைகளை நோக்கி அவரை வழிநடத்துவதும் இவ்வகையான ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களின் ஊடாக எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் ஆசிரியர், இவ் அறிவுரைப்பு வழிகாட்டியை உரிய முறையில் கற்று அதனுடைய நோக்கங்களைக் கொண்டு வகுப்பறையில் உச்ச பயனைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம், வகுப்பறையை வினைத்திறன் மிக்கதும் தரமானதுமாக்குவதுடன் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை உயர்வடையச் செய்வதற்கும் ஆசிரியர் பெரும் முயற்சி மேற்கொள்ளுவார் என்பது எனது நம்பிக்கையாகும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் திறம்படத் தயாரித்து வெளியிடுவதற்கு தமது நேரத்தையும் சிறப்புத் திறமைகளையும் பங்களிப்பு செய்த தேசிய கல்வி நிறுவகத்தைச் சேர்ந்த பாட நிபுணத்துவர்களுக்கும் வெளி வளவாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

**பேராசிரியர் லால் பெரேரா**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

# கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி

யாவருக்கும் கல்வி என்னும் நோக்கத்தை மையமாகக் கொண்டு எமது அரசு நாட்டிலுள்ள சகல பாடசாலை மாணவர்களுக்கும் இலவசமாகப் பாடநூல்களை வழங்கி வருகின்றது. அத்துடன் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளை ஆக்கி வழங்குவதானது கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் பண்புத்தர விருத்தியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வகுப்பறைக்குள்ளும் அதற்கு வெளியேயும் மாணவர்களின் அறிவுவிருத்திச் செயற்பாட்டுக்கு வழிகாட்டுவோர் ஆசிரியர்களே. மேலும், பாடத்திட்டத்தால் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டங்களை நோக்கி மாணவர்களை வழிநடாத்தும் முக்கிய நபரும் ஆசிரியரேயாவார். இந் நோக்கத்தை அடைவதற்கு இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்குக் கைகொடுக்கும். இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களைக் கற்றுப் பின்பற்றுவதன் மூலம் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை அதிக பயனுறுதியுடையதாக மாணவர்களுக்கு வழங்கும் பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களைச் சார்ந்ததாகும். இப் பொறுப்பை உணர்ந்து செயற்படும் நீங்கள் பெறுமதிமிக்க ஒரு வளம் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

அறிவு, திறன்கள், மனப்பாங்குகள், தேர்ச்சிகள் என்பவற்றையும் வலிமையான சமூக மற்றும் உள்ளார்ந்த திறன்களையும் கொண்ட முழுமையான பிரசைகளை சமூகத்திற்கு வழங்கும் பொறுப்பு உங்களுடையதே. தற்கால உலகின் சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய எதிர்கால சந்ததியை நீங்கள் உருவாக்குவீர்கள் என்பதே என் எதிர்பார்ப்பாகும். உங்கள் ஆற்றலை உறுதியாக்குவதன் மூலம் அவ் எதிர்பார்ப்பை வெற்றிகரமாக்குவதற்கு இவ் அறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்கு உதவும் என உறுதியாக நம்புகின்றேன்.

**டபிள்யு.எம்.என்.ஜே புஸ்பகுமார**

கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்

'இசுருபாய'

பத்தரமுல்ல

12-11-2009

# உதவிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

இலங்கையின் கலைத்திட்டக் கொள்கையில் பாடசாலைக் கலைத்திட்டமானது, எட்டு வருடங்களுக்கு ஒருமுறை காலத்திற்கு இயைந்ததாகத் திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றது. அதற்கேற்ப 2007 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வருகின்ற கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் இப்பாடத்திட்டம் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலும் அறிமுகஞ் செய்யப்படுகின்றன.

இதுவரை நடைமுறையில் இருந்த பாடத்திட்டங்களில் குறித்த பாடத்துடன் தொடர்பான விடயத் தலைப்புகளும் அவற்றின் உள்ளடக்கமும் அமைந்திருந்தமையால், அவற்றைக் கற்பிக்கும் பணி ஆசிரியரின் மீது சுமத்தப்பட்டிருந்தது. இச்செயற்பாடுகள் மூலம் ஏராளமான தகவல்களை மாத்திரம் அறிந்த மாணவர் பரம்பரையொன்று உருவானது.

புதிய கலைத்திட்டச் சீர்திருத்தத்தின் கீழ் அறிமுகஞ் செய்யப்படுகின்ற பாடத்திட்டங்களில் அவ்வவ் பாடங்களில் மாணவர் அடைந்து கொள்ளவேண்டிய தேர்ச்சிகள் பல இனங்காப்படடுள்ளன. இந்தப் புதிய பிரவேசத்தின் மூலம் அதிகமான விடயங்களைக் கற்ற, அதே நேரம் அவற்றை நடைமுறையில் செயற்படுத்துகின்ற, தேர்ச்சி கொண்ட மாணவர் பரம்பரை ஒன்றை உருவாக்குவது எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால், புதிய பாடத்திட்டத்தைக் கையாள்கின்ற ஆசிரியர்கள் இவ்வேறுபாட்டைச் சரியாகப் பரிந்து கொள்வதுடன், அதில் விஷேட கனம் செலுத்த வேண்டும்.

இந்நூலின் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிப் பகுதியில், புதிய கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு விதந்துரைக்கப்பட்டுள்ளது. இச்செயலொழுங்கின் கீழ் மாணவன் நூலகத்தைப் பயன்படுத்துதல், நூல்களை வாசித்தல், சுற்றாடலை அவதானித்தல், தகவல் அறிந்தோரைச் சந்தித்து விடயங்களைச் சேகரித்தல், தமது சகபாடிகளிடமிருந்து பல்வேறு விடயங்களைக் கற்றல், தாம் அறிந்தவற்றை அவர்களுடன் பரிமாறிக் கொள்ளல், இயலுமெனில் இணையத்தளம் மூலம் தகவல் திரட்டல் முதலான கண்டறிதல் மூலமான கற்றல் கலாசாரம் ஒன்றைக் காணமுடியும். இதற்கு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள பாடநூலை உசாத்துணை நூலாகப் பயன்படுத்தலாம். இவ்வாறு கண்டறியப்படுகின்ற தகவல்கள் மிகச் சரியாகவும் ஒழுங்குபடுத்தப்பட்டும் முழுமையாகவும் மாணவர்களை அடையச் செய்வதே ஆசிரியர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகின்ற பணியாகும். இந்தவகையில் ஆசிரியரின் வகிபாகம் புதிய அறிவுரைகள் மூலம் போசிக்கப்படுவது அவசியமாகும். இங்கு மாணவர் ஏராளமான விடயங்களைக் கண்டறிந்து, பல்வேறு அம்சங்களையும் தெரிந்தவர்களாக மாறகின்றனர். இத்தகைய செயற்பாட்டுக் கற்றற் சூழலானது மாணவர்களைப் பெரிதும் கவர்வதாக அமையும்.

இதற்காக, இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலில் விதந்துரைக்கப்படட மாதிரிச் செயற்பாடுகளைக் கையாண்டு, இன்னும் பல்வேறு செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வதற்கும் இந்நூலை ஒரு வழிகாட்டியாகக் கொள்ளுங்கள். இதனூடாக, புத்தாக்க திறனுடைய ஓர் ஆசிரியாக இருந்து பல்வேறு புதிய செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வீர்களென எதிர்பார்க்கின்றோம்.

இந்த புதிய வகுப்பறைக் கற்றல் கற்பித்தற் செயலொழுங்கின் போது, மாணவர் எப்பொழுதும் செயற்படுபவர்களாகக் காணப்படுவர். அதனால், அவர்களது திறமைகள், ஆற்றல்கள் வெளிக்கொணரப்படும். அவற்றுக்கு நீங்கள் மதிப்பளியுங்கள். அவர்களை உற்சாகப்படுத்துங்கள். இன்னும் சில சந்தர்ப்பங்களில் மாணவர எதிர்கொள்ளும் கஷ்டங்கள், இடையூறுகள் என்பவற்றை உங்களால் அவதானிக்க முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் நீங்கள் உதவி செய்யுங்கள். அயலில் உள்ள சகபாடிக்கு உதவி செய்ய மாணவரை வழிப்படுத்துங்கள். இவ்வாறு செயற்பாட்டின் போது இடம்பெறுகின்ற கணிப்பீட்ச் செயலொழுங்கானது சிறந்ததொரு கற்றலுக்கு உதவியாக அமையும்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலில் குறிப்பிடப்பட்டுள்ள கற்றல் கற்பித்தற் செயற்பாட்டினை நீடிப்பதற்கான உபகரணமானது ஒப்படையாக அல்லது பயிற்சியாக மாணவர் கற்றவற்றை, மேலும் பலப்படுத்தக் கூடிய விதத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதனைச் செயற்படுத்துவதில் உங்களது அவதானத்தைச் செலுத்துங்கள். இதனை மாணவரை மதிப்பீடு செய்வதற்கான சந்தர்ப்பமாகவும் ஆக்கிக் கொள்ளுங்கள். இவ்வாறான கற்றல் கற்பித்தலை நீடிக்கும் உபகரணங்களைத் தயாரித்து, பல்வேறு பயிற்சிகளில் மாணவரை ஈடுபடுத்துவதில் உங்களது கவனத்தைச் செலுத்துங்கள்.

இதனூடாக, புதிய உலகிற்குப் பொருத்தமான தேர்ச்சிகளுடன் கூடிய மாணவர் பரம்பரையொன்றை உருவாக்குவதும் அதற்குப் பொருத்தமான ஆசிரியர் வகிபாகம், வகுப்பறை, புதிய கற்றல் கலாசாரத்திற்கு ஏற்ப உருவாக வேண்டுமென எதிர்பார்க்கின்றேன்.

**விமல் சியம்பலாகொட**
மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

| | | |
|---|---|---|
| பணிப்பு | - | பேராசிரியர் J.W.விக்கிரமசிங்க.<br>பணிப்பாளர் நாயகம்<br>தேசிய கல்வி நிறுவகம். |
| மேற்பார்வையும் வழிகாட்டலும் | - | திரு. விமல் சியம்பளாகொட<br>உதவிப்பணிப்பாளர் நாயகம்<br>மொழிகள், மனிதவியல், சமூக விஞ்ஞானபீடம்<br>தேசிய கல்வி நிறுவகம்.<br><br>திரு.சுதத் சமரசிங்க<br>பணிப்பாளர் - அழகியல் கல்வித் துறை<br>தேசிய கல்வி நிறுவகம்<br><br>திரு.து.இராசேந்திரம்<br>சிரேஷ்ட விரிவுரையாளர் - கல்வித்துறை<br>இலங்கை திறந்த பல்கலைக்கழகம். |
| ஆக்கியோர் | - | திருமதி.சுனேத்ரா அன்ரோனீனா ஜோண் ஜெஸ்லி<br>செயற்றிட்ட அதிகாரி<br>(செயற்றிட்டத்தலைவர்-தமிழ் மொழி மூல அழகியல் பாடநெறிகள்)<br>அழகியல் கல்வித் துறை<br>தேசிய கல்வி நிறுவகம்.<br><br>திருமதி. தேவிகராணி முருகுப்பிள்ளை<br>பிரதிக்கல்விப் பணிப்பாளர் (இளைப்பாறிய)<br>திருகோணமலை.<br><br>திருமதி.ய.பாலேஸ்வரன்<br>ஆசிரிய ஆலோசகர் - கொழும்பு<br><br>திரு.வை.கணேசலிங்கம்<br>ஆசிரிய ஆலோசகர் - களுத்துறை<br><br>செல்வி.ரஜனி நடராஜா<br>உதவிக்கல்விப் பணிப்பாளர் - மட்டக்களப்பு<br><br>திருமதி.கமலராணி ஜெயபாலசிங்கம்<br>ஆசிரிய ஆலோசகர் - யாழ்ப்பாணம்<br><br>திருமதி. C.C வினித்தா யேசுரட்ணம்<br>ஆசிரியை, புனித அன்னம்மாள் ம.ம.வி. வத்தளை<br><br>திருமதி. பரிமளா முருகேசு<br>ஆசிரியை, சரஸ்வதி ம.வி.பண்டாரவளை |
| பதிப்பாசிரியர் | - | திருமதி.சுனேத்ரா அன்ரோனீனா ஜோண் ஜெஸ்லி<br>செயற்றிட்ட அதிகாரி<br>(செயற்றிட்டத்தலைவர்-தமிழ் மொழி மூல அழகியல் பாடநெறிகள்)<br>அழகியல் கல்வித் துறை<br>தேசிய கல்வி நிறுவகம் |

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 1. அறிமுகம் | 03 |
| 2. பாடத்திட்டம் | 05 |
| 3. செயற்பாடுகளின் தொடரகம் | 19 |
| 4. கணிப்பீடும் மதிப்பீடும் (கற்றல்-கற்பித்தலை மேலும் விரிவுபடுத்துவதற்கான கருவிகள்) | 123 |

பகுதி I

# விரிவான பாடத்திட்டம்
# தரம் - 6

# அறிமுகம்

தேசிய கல்வி நிறுவகத்தினால் வழங்கப்பட்டுள்ள ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி மூன்று பகுதிகளை கொண்டது. அவையாவன:-

* விரிவான பாடத்திட்டம்
* செயற்பாடுகளின் தொடரகம்
* கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை மேலும் விரிவுபடுத்துவதற்கான கருவிகள்

கர்நாடக சங்கீதம் கற்பிப்பதற்குரிய நோக்கங்களை அடையும் வகையில் இரசித்தல், ஆக்கத்திறன், செயன்முறை, அறிமுறை, கலாசாரப் பின்னணி, ஆகியவற்றின் அடிப்படையில் தேர்ச்சிகளையும், தேர்ச்சி மட்டங்களையும் உள்ளடக்கிப் பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டே இவ்வாசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூல் எழுதப்பட்டுள்ளது. மாணவர்களினால் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய தேர்ச்சி மட்டங்கள் தொடர்பான பாட உள்ளடக்கம் குறிப்பிடப்பட்டிருத்தல் இந்நூலின் சிறப்பம்சமாகும். கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுக்கு உதவும் பொருட்கள் / தர உள்ளீடுகள் கொடுக்கப்பட்டிருப்பதால் ஏற்கனவே கேட்டு அவற்றை உரிய நேரத்திற்குப் பெற்றுக் கொள்வதற்கு இதன் மூலம் வாய்ப்புக் கிடைக்கின்றது. பாடத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் விளைவுகளை உறுதி செய்து கொள்வதற்குரிய பெறுமதிமிக்க ஆலோசனைகள் பல கணிப்பீடும், மதிப்பீடும் என்ற பகுதியிலே உள்ளடக்கப்பட்டுள்ளன. "பாடசாலைக் கொள்கைகளும் நிகழ்ச்சித் திட்டங்களும்" என்ற பகுதியை பாடசாலைக் கல்வியோடு சார்ந்த அனைவரும் முறையாக வாசித்து விளங்கவேண்டியது அவசியமாகும். ஆசிரியருக்கு கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஒப்படைக்கும் போதும், ஆசிரியர் பணிகளை மேற்பார்வை செய்யும்போதும், உரியவாறு நேரத்தை ஒதுக்கிக் கொள்வதற்குப் பாடசாலை முகாமைத்துவத்திலுள்ளவர்களுக்கு இது தேவையான விளக்கத்தையளிக்கிறது.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் இரண்டாம் பகுதியிலே பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய செயற்பாட்டுத் தொடரகம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இச் செயற்பாடுகளை அவ்வாறே ஆசிரியர்கள் செயற்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படவில்லை. தமது ஆக்கபூர்வமான ஆற்றல்களுக்கும், ஆராய்வுச் சிந்தனையாற்றல்களுக்கும் ஏற்ப செயற்பாடுகளை ஏற்ற விதமாக ஒழுங்குபடுத்திக் கொள்வது ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக மூன்று குழுக்களை அமைக்க வேண்டும் எனக் கூறியிருப்பினும் வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப அதை மாற்றம் செய்து கொள்வதற்கு ஆசிரியருக்கு முடியும். குழுச் செயற்பாடுகளுக்குச் சந்தர்ப்பத்தை அளிக்கும் விதமாக உரியதீர்மானங்களை எடுக்கும் போது ஆசிரியர் சாதுரியமாக நடந்துகொள்ளுதல் வேண்டும். உரிய தேர்ச்சிமட்டம் நிறைவு பெறும் விதமாக செயற்பாடுகளுக்கு உரிய நேரம் வேறாக்கப்பட்டுள்ளது. 40 நிமிட பாடவேளைக்கு அப்பால் செல்வதற்கு ஆசிரியருக்கு நேரிடலாம். ஒவ்வொரு தேர்ச்சி மட்டத்தையும் நிறைவேற்றிக் கொள்வதற்குப் போதியளவு நேரம் அந்தந்தச் செயற்பாடுகளுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதோடு நேரசூசியில் வழங்கப்பட்டுள்ள தனிப்பாடவேளை, இரு பாடவேளைகளுக்கு ஏற்றவாறு இச் செயற்பாடுகளைப் பகுதிகளாகச் செய்து கொள்ள வேண்டியது ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. முன்னைய நாள் ஆரம்பித்த செயற்பாடொன்றை மேலும் தொடர்ந்து மறுநாள் செய்யும்போது முதல்நாள் நிறைவு செய்தவற்றை மேலும் அறிமுகம் செய்து தொடரவேண்டும் என்பதும் உங்களிடம் எதிர்பார்க்கப்படுகிறது.

யாதேனும் ஒரு தேர்ச்சி மட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு வெவ்வேறான செயற்பாடுகளை அமைத்துக் கொள்ளவேண்டும். என்பதை நீங்கள் அறிவீர்கள். அதன்படி உத்தேச செயற்பாடானது அவ்வாறே நடைமுறைப்படுத்த வேண்டும் என உங்களிடம் ஒருபோதும் எதிர்பார்க்கப்படமாட்டாது. மிகவும் சிறந்த பிரவேசத்துடன் கூடிய ஆய்வுகளைக் கொண்ட கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை விரிவுபடுத்தக்கூடிய வெவ்வேறு உபகரணங்களைப் பயன்படுத்திச் சிறந்த கற்றல் ஒன்றையே நாம் உங்களிடம் எதிர்பார்க்கின்றோம். புது விடயங்களை அறிமுகப்படுத்தும்போது உங்களின் வினைத்திறனையும், விளைத்திறனையும் மேம்படுத்தும் நோக்கில் இவ் வழிகாட்டி நூலைத் தேசிய கல்வி நிறுவகம் வழங்கியுள்ளது.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் மூன்றாம் பகுதியிலே கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு உதவும் உபகரணத் தொகுதிகள் (கருவிகள்) அடங்குகின்றன. செயற்பாட்டுத் தொகுதி ஒன்றை மையமாகக் கொண்டு வழங்கப்படும் இவ்வுபகரணங்கள் வகுப்பறைக்கு வெளியேயும் தொடர்ச்சியாக மாணவர்கள் கற்பதற்குத் துணைபுரியும். இவ்வுபகரணங்களைப் பயன்படுத்தி மாணவர்களின் கற்றலைப் பரிசீலனை செய்து உரிய மீளவலியுறுத்தல்களைச் செய்வது உங்களது பணியாகும். கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் வெற்றிக்கு மதிப்பீட்டு முறைகளில் பாரிய மாற்றங்கள் தேவைப்படுகின்றன. மாணவர்களின் சிந்திக்கும் ஆற்றல், சமூகத்திறன்கள், தனியாள்திறன்கள் என்பவற்றை விருத்திசெய்யும் வகையில் பயனுள்ள கற்பித்தலில் ஈடுபடுவீர்கள் என்பது எமது நம்பிக்கையாகும்.

# கர்நாடக சங்கீதம்

## பாடத்திட்டம்

## தரம் 6

அழகியல் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
2007

# 01. அறிமுகம்

சமூகமாற்றத்தோடு கலைத்திட்டமாற்றம் ஏற்படுவது இன்றியமையாததொன்றாகும். சமூகத்தேவைகள் மாறுவதற்கமைய கலைத்திட்டத்திலும் மாற்றங்கள் காலத்திற்குக் காலம் செய்யப்படுவதுண்டு. இதனை அடிப்படையாகக் கொண்டு பாடசாலைக் கலைத்திட்டமானது தற்காலத் தேவைகட்கமைய அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்பது கல்வியியலாளர்களின் ஏகோபித்த கருத்தாகும்.

நாதத்தை அடிப்படையாகக்கொண்ட இசைக்கலையானது எமது பாடசாலைக் கலைத் திட்டத்தில் ஒரு பாடமாக இடம்பெற்றுவருகிறது. இசையைக் கற்பதால் மாணவரிடையே இயல்பாகக் காணப்படும் இரசித்தல்திறன், ஆக்கத்திறன், விமர்சிக்கும்திறன் என்பன வெளிக்கொணரப்படுகின்றன. ஒருவரின் சமநிலையான ஆளுமை வளர்ச்சிக்கு இத்திறன்கள் யாவும் விருத்தி செய்யப்படல் அவசியமாகும். அத்துடன் அன்பு, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, பிறரதுகருத்துக்களை மதித்தல் ஆகிய நற்பண்புகளைக் கொண்ட பிரஜைகளை உருவாக்குவதில் இசை முக்கிய பங்கை வகிக்கின்றது.

கனிஷ்ட இடைநிலைப்பிரிவின் முதலாவது ஆண்டாகக் கணிக்கப்படும் ஆறாம் தர கர்நாடக சங்கீத பாடத்திற்கான இப்புதிய கலைத்திட்டமானது 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்படுகின்றது. இரசித்தல், ஆக்கத்திறன், செயன்முறை, அறிமுறை, கலாசாரப்பின்னணி ஆகியவற்றின் அடிப்படையில் கற்றல் தேர்ச்சிகள் தீர்மானிக்கப்பட்டு அவற்றிற்கமைய இக்கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இத்தேர்ச்சி மட்டப் பாடத்திட்டமானது மாணவர்கள் விடயங்களைக் கண்டுபிடிக்கும் சந்தர்ப்பங்களை அதிகரிப்பதற்கும், கற்றலானது கூடியளவு மாணவர் மையமாக்கப்படுவதற்கும் கற்றல் - கற்பித்தல் குறிக்கோள்களை மிகத்தெளிவாகவும், மாணவர்கள் கற்றலுக்கு விருப்பத்தோடு ஈடுபடுவதற்கும் ஏற்றவகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் பாடவிடயங்கள் தொடர்பாகத் தம்மை தற்காலப்படுத்துவதோடு அறிமுகஞ்செய்யப்பட்டுள்ள தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்கள் என்பனவற்றை விளங்கிக்கொண்டு மாணவர்களிடம் இயல்பாகவுள்ள திறன்களை உபயோகித்து தாமே தொழிற்பட்டு முன்னேறும் வகையில் அவர்களுக்கு கற்றல் அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற வகையில் திட்டங்களை வகுக்கக்கூடிய திறன்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

## 02. பாடத்திற்கான தேர்ச்சிகள்

01. கர்நாடக சங்கீதத்தின் அறிமுறை சார்ந்த அறிவினை விருத்தி செய்வதன் மூலம் பாடும் திறன் இரசனை, விமர்சிக்கும் திறன் ஆகியவற்றை வளர்த்தல்.

02. கர்நாடக சங்கீதத்தின் செய்ம்முறைத்திறனை விருத்தி செய்வதன் மூலம் ஆற்றுகைத்திறன், உருப்படிகளைப் பாடுதல், இசையமைத்தல் ஆகியவற்றை விருத்தி செய்தல்.

03. கர்நாடக இசையை இரசித்து அனுபவிக்கும் திறனை விருத்தி செய்தல், ஏனைய இசை வகைகளை மதித்தலும் இரசித்தலும்.

04. கர்நாடக இசையின் தோற்றம், வளர்ச்சி, அதன் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தோர் என்பவற்றை அறிந்து, சமூகக் கலாசார விழுமியங்களைப் பேணவும், ஆய்வுகளை மேற்கொள்ளவும் ஊக்குவித்தல்.

05. அறிவு, திறன், மனப்பாங்கு, விழுமியங்கள் என்பன அமையப்பெற்று சமநிலை ஆளுமையை விருத்தி செய்தல்.

06. இசை மூலம் தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம், புரிந்துணர்வு என்பவற்றை மேம்படுத்தல்.

## 03. வகுப்பிற்குரிய தேர்ச்சிகள்

01. வாழ்க்கையோடு தொடர்புடைய இசையை இரசிப்பார். (சூழலிற்கேட்கப்படும் இசை, சிறுவர்பாடல், வாழ்க்கைச்சம்பவங்களோடு தொடர்புடைய இசை)

02. இசைநிகழ்ச்சிகளிலும், கலாசார நிகழ்ச்சிகளிலும் இரசித்தவற்றை வெளிப்படுத்துவார். (வெகுசனத்தொடர்பு ஊடகங்களின் மூலம் காட்டப்படும் சிறுவர் அழகியற்கலை ஆக்கங்கள் - இசை, நடனம், நாடகம், வில்லுப்பாட்டு, சிறுவர் நிகழ்ச்சிகள்)

03. இசை தொடர்பான ஆக்கங்களை வெளிக்கொணர்வார். (பாடலுக்கேற்ப அபிநயம், புத்தளிப்புக்கருவிகள், இசை தொடர்பான வெளிக்களப்புத்தகம், மாணவர் ஆக்கங்களைக்கொண்ட நிகழ்ச்சிகள்)

04. இசை உருப்படிகளையும், நாட்டார் பாடல்களையும், சுருதி, இராக, தாளத்துடன் பாடிக்காட்டுவார்.

05. கர்நாடக இசை பற்றிய அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

06. இசையை அடிப்படையாகக் கொண்டு, சமூக, கலாசாரப் பாரம்பரியப் பண்புகளை வெளிப்படுத்துவார்.

## 04. பாடசாலைக் கொள்கைகளும் நிகழ்ச்சித்திட்டங்களும்

கர்நாடகசங்கீத பாடங்களை வகுப்பறையில் கற்பிப்பதுடன் வகுப்பறைக்கு வெளியேயும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை உள்ளடக்கும் வகையில் பாடசாலைக் கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் வகுத்துக் கொள்ளல் விரும்பத்தக்கதாகும். குறிப்பாகக் கர்நாடகசங்கீதத்திற்கு வாரத்திற்கு 03 பாடவேளைகளே ஒதுக்கப்பட்டிருப்பதால் இத்தகைய இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை ஒழுங்கு செய்வதன் மூலம் நாம் ஏற்கனவே குறிப்பிட்ட குறிக்கோள்களையும் தேர்ச்சிகளையும் அடையக்கூடியதாக இருக்கும்.

இவ்வாறு பாடசாலைக் கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் திட்டமிடும்பொழுது பாடசாலையில் உள்ள வளங்களும், மாணவர்களிடையே காணப்படும் தனியாள் வேறுபாடுகளும் கருத்திற்கொள்ளப்படுதல் வேண்டும்.

### நேரசூசி

கர்நாடகசங்கீதம் அறிமுறையும், செய்ம்முறையும் இணைந்த ஒரு பாடமாகும். அறிமுறை அறிவில் மட்டும் தேர்ச்சி பெறல் பயனளிக்காது. மாணவர் செய்ம்முறையில் உயர் தேர்ச்சி மட்டத்தை அடையவேண்டும் என்பதால் நேரசூசியில் அதிக பாடவேளைகள் செய்ம்முறைப் பயிற்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. பாடசாலையில் உள்ள வசதிக்கேற்ப செய்ம்முறைப் பயிற்சிக்காக இரு பாடவேளைகள் தொடர்ச்சியாகவும் வழங்கப்படலாம்.

### ஆசிரியர் தகைமைகள்

கர்நாடகசங்கீத பாடத்தைக் கற்பிப்பதற்கு இத்துறையில் முறைப்படி பயிற்சி பெற்றவர்களே பொருத்தமானவர்களாவர். பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாத பட்சத்தில் இப்பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர், கர்நாடகசங்கீதத்துறையில் நிபுணத்துவம் பெற்ற மற்றொரு ஆசிரியரது உதவியைப் பெறல் இன்றியமையாததாகும்.

### அதிபரின் கற்பித்தல் தலைமைத்துவப்பங்கு

பாடசாலை அதிபர் ஒருவர் முகாமைத்துவத் தலைமைத்துவத்தோடு கற்பித்தல் தலைமைத்துவம் உடையவராகவும் இருத்தல் வேண்டும். எனவே கர்நாடக சங்கீதத்தினைக் கற்பிப்பதற்கு பயிற்சிபெற்ற ஆசிரியர் ஒருவரைப் பெற்றுக்கொள்ளல், இப்பாடத்தைக் கற்பிப்பதற்கென தனியான ஓர் அறையை ஒழுங்கு செய்தல், தேவைப்படும் தரஉள்ளீடுகள், பாடத்திட்டம், வழிகாட்டி நூல்கள் முதலியவற்றைப் பெற்றுக் கொடுத்தல் அவருடைய கடமையாகும்.

## இணைப்பாட விதானச் செயற்பாடுகள்

இவை தொடர்பான சில ஆலோசனைகள் இங்கு தரப்படுகின்றன.

01. பாடசாலை நாளாந்த செயற்பாடுகளுடன் பொருத்தமான இடங்களில் இசையையும் சேர்த்துக் கொள்வதற்கான செயற்றிட்டங்கள் அதிபரால் உருவாக்கப்படுதல்.
உதாரணமாகப் பாடசாலைக்கீதம், தேசிய கீதம், தமிழ்மொழி வாழ்த்து, பிரார்த்தனை பாடல்கள்.

02. பாடல்களைக் கற்பிக்கும்போது ஒன்றிணைந்த தன்மை பேணப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்படுவதால் சங்கீத ஆசிரியருக்கும் ஏனைய ஆசிரியர்கட்கும் இடையே தொடர்பிருப்பது இன்றியமையாதது ஆகும். இதற்கான ஏற்பாடுகள் அதிபரின் ஊடாக செய்யப்படுதல் வேண்டும்.
உதாரணம்: தமிழ்மொழி ஆசிரியர் செய்யுள் கற்பிப்பதற்கு இசை ஆசிரியரின் உதவியைப் பெறலாம். இதுபோன்று ஏனைய பாட ஆசிரியர்களின் உதவியை இசை ஆசிரியர் பெறலாம்.

03. வருடத்தொடக்கத்திலேயே இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுக்கான திட்டம் வகுக்கப்படல். இலக்கிய மன்றங்கள், வகுப்பறை மாணவர் மன்றங்கள், இசை மன்றங்கள் போன்றவற்றை உருவாக்கி இசை நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் வழங்குதல்.

04. இவை தவிர வருடாந்த பாடசாலை வைபவங்களாகக் கொண்டாடப்படும் பரிசளிப்பு விழா, கலைவிழா, தமிழ்மொழித்தினவிழா, இலக்கியவிழா, சமயவிழாக்கள், இசை மன்றத்தின் இசைப்போட்டிகள் முதலானவற்றில் மாணவர் பங்குபற்றுவதற்கு மட்டுமன்றி தாமே சுயமாக இசை நிகழ்ச்சிகளை ஆக்கிக் கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படுதல்.

05. சமுதாயத்தைப் பாடசாலைக்குள் கொண்டு வருவதற்கும் பாடசாலையை சமுதாயத்திற்குள் கொண்டு செல்வதற்கும் கலை, கலாசார நிகழ்ச்சிகள் ஊடகமாகக் கருதப்படுகின்றன. எனவே இத்தகைய நிகழ்ச்சிகளில் மாணவர் பங்களிப்புச் செய்வதற்கு வசதியும் வாய்ப்புகளும் வழங்கப்படுதல்.

06. இசை தொடர்பான கண்காட்சி ஒழுங்கு செய்யப்படுதல் மாணவர்களுடைய ஆக்கத்திறன் விருத்திக்கும் நயக்கும் திறனுக்கும் துணைபுரியும்.

07. நாடக இசை, நாட்டார் இசை போன்றவற்றை கற்பிக்கும் போது பாடசாலைச் சூழலில் உள்ள இசைக்கலைஞர்களின் உதவியை நாடுதல்.

08. சங்கீத வாக்கேயகாரர்களின் தினத்தைக் கொண்டாடுதல்.

09. வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் மாணவர் பங்குபற்றக் களம் அமைத்துக் கொடுத்தல்.

## 05. தர உள்ளீடுகள் (கற்பித்தல் உபகரணங்கள்)

கர்நாடக சங்கீதப்பாடக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின்போது கீழ்க்காணப்படுகின்ற தர உள்ளீடுகளைப் பயன்படுத்துவது விரும்பத்தக்கதாகும்.

- சுருதிப்பெட்டி அல்லது தம்புரா
- ஹார்மோனியம் அல்லது ஆர்கன் (Organ)
- ஒலிப்பதிவுக்கருவி
- ஒலிப்பதிவு நாடா (அழகியற்கலை, இசை, நடனம், நாடகம், வில்லுப்பாட்டு, வாத்திய இசை, இசைக்கச்சேரி, இசை உருப்படிகள், வெவ்வேறு சமயப் பாடல்கள், இசைநாடகம், நாட்டிய நாடகம், நாட்டுக்கூத்து)
- வானொலி
- இசைக்கருவிகள் (தோல், துளை, நரம்பு, கஞ்சற் கருவிகள்)
- இசை வெளியீடுகள் (நூல்கள், சஞ்சிகைகள்)
- பிரிஸ்டல் அட்டைகள் (விளக்கப்படங்கள் விளக்க அட்டைகள் தயாரித்தல்)
- டிமை தாள்கள்
- நிறப்பேனைகள்
- தட்டச்சுக் கடதாசி (Typing Sheet)
- அச்சுப்பிரதிக் கடதாசி (Photocopy paper)
- கத்தரிக்கோல்
- பெயர்ப்பலகை
- மேல் தலைஎறியி (OHP)
- ஒளி ஊடுகடத்தும் கடதாசி
- தொலைக்காட்சிப்பெட்டி
- ஒளிப்பதிவுக்கருவி
- ஒளிப்பதிவு நாடா (அழகியற்கலை, இசை, நடனம், நாடகம், வில்லுப்பாட்டு, வாத்திய இசை, இசைக்கச்சேரி, இசை உருப்படிகள், வெவ்வேறு சமயப் பாடல்கள், இசைநாடகம், நாட்டிய நாடகம், நாட்டுக்கூத்து)
- கணினி
- இணையம்

## 06. கற்றல் - கற்பித்தலுக்கான நேர ஒதுக்கீடு

### தரம் - 06
### பாடத்திட்டம்

| பிரதான தேர்ச்சிகள் | பாடவேளைகள் |
|---|---|
| 1. தேர்ச்சி 1.0, 2.0 - (இரசித்தல்) | 10 |
| 2. தேர்ச்சி 3.0 - (ஆக்கத்திறன்) | 09 |
| 3. தேர்ச்சி 4.0 - (செயம்முறை) | 45 |
| 4. தேர்ச்சி 5.0 - (அறிமுறை) | 20 |
| 5. தேர்ச்சி 6.0 - (கலாசாரப்பின்னணி) | 06 |
| மொத்தம் | 90 |

# பாடத்திட்டம் - தரம் 6

| தேர்ச்சி / தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|
| 1.0 வாழ்க்கையோடு தொடர்புடைய இசையை இரசிப்பார். | | |
| 1.1 அன்றாட வாழ்வில் நாம் கேட்கும் இசையை இனங்காண்பர். | ● சூழலில் கேட்கப்படும் இசை<br>- வீட்டுச் சூழல்<br>- பாடசாலைச் சூழல்<br>- பறவைகள், மிருகங்களின் ஒலி<br>- இயற்கை ஒலிகள்.<br>உ-ம்: அருவி ஓசை, காற்று, மழை...<br><br>● சிறுவர் பாடல்<br>- சிறுவர் பாடலுக்குரிய அம்சங்கள்<br>உ-ம்: * இசை / மெட்டு<br>* கருத்து...<br>* தாளம் | 02 |
| 1.2 வாழ்க்கைச் சம்பவங்களோடு இசையைத் தொடர்புபடுத்துவார். | ● வாழ்க்கைச் சம்பவங்களோடு தொடர்புடைய இசை<br>- மருத்துவிச்சி வாழ்த்து<br>- தாலாட்டு<br>- விளையாட்டுப்பாடல்<br>- தொழிற்பாடல்<br>- நலுங்கு<br>- ஊஞ்சல்<br>- ஒப்பாரி | 02 |
| 1.3 வாழ்க்கையோடு தொடர்புடைய இசையின் தனித்துவத்தைக் குறிப்பிடுவார். | ● மருத்துவிச்சி வாழ்த்து, தாலாட்டு, விளையாட்டுப்பாடல், தொழிற்பாடல், நலுங்கு, ஊஞ்சல், ஒப்பாரி இவற்றின் தனித்துவமான அம்சங்கள்.<br>* சந்தர்ப்பம்<br>* இசை<br>* கருத்து<br>* சொற்பிரயோகம்<br>* தாளம் | 02 |

| தேர்ச்சி / தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|
| 2.0 இசை நிகழ்ச்சிகளிலும், கலாசார நிகழ்ச்சிகளிளும் இரசித்தவற்றை வெளிப்படுத்துவார். | | |
| 2.1 வெவ்வேறு இசைநிகழ்ச்சிகளையும் கலாசார நிகழ்ச்சிகளையும் இனங் கண்டு அவற்றின் தனித்துவமான அம்சங்களை குறிப்பிடுவார். | ● வெகுசனத் தொடர்பு ஊடகங்களின் மூலம் காட்டப்படும் சிறுவர் அழகியற் கலை ஆக்கங்கள்.<br>- இசை<br>- நடனம்<br>- நாடகம்<br>- வில்லுப்பாட்டு இவற்றின் தனித்துவமான அம்சங்கள்.<br>உ-ம்: * இசை<br>* தாளம்<br>* வாத்தியப்பயன்பாடு<br>* அபிநயம்<br>* ஒப்பனை / உடை | 02 |
| 2.2 இசை நிகழ்ச்சிகளையும், கலாசார நிகழ்ச்சிகளையும் இரசிப்பதன் மூலம் பிறரது ஆற்றுகைத்திறனை மதிக்கும் மனப்பாங்கினை வெளிப்படுத்துவார். | ● ஊடகங்களின் மூலம் காண்பிக்கப்படும் சிறுவர் கலை நிகழ்ச்சிகள் / மேடை நிகழ்ச்சிகள்<br>- இசை<br>- நடனம்<br>- நாடகம்<br>- வில்லுப்பாட்டு<br>* வேறுபட்ட சிறுவர் நிகழ்ச்சிகள்<br>* பிறரது ஆற்றுகைத்திறன், பண்பாடு கலாசாரம். | 02 |
| 3.0 இசை தொடர்பான ஆக்கங்களை வெளிக்கொணர்வார். | | |
| 3.1 தத்தம் இயல்பிற்கேற்ப பாடல்களை ஆக்கி அபிநயிப்பார் | ● பாடலுக்கு ஏற்ப அபிநயம் செய்தல்<br>* பொருள் நயம் / கருத்து<br>* இசையமைப்பு<br>* அபிநயம் | 02 |
| 3.2 இசைக்குப் பயன்படுத்தக்கூடிய புத்தளிப்புக்கருவிகளை ஆக்குவார். | ● புத்தளிப்புக் கருவிகள்<br>- சல்லாரி<br>- மேளம்<br>* பொருள்கள் சேகரித்தல்<br>* கருவிகளை ஆக்குதல் | 02 |

| தேர்ச்சி / தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|
| 3.3 புத்தளிப்புக்கருவிகளை இசைப்பார். | ● புத்தளிப்புக் கருவிகளின் இசை<br>- சல்லாரி<br>- மேளம் ஆகிய புத்தளிப்புக் கருவிகளை இசைத்தல்.<br>* தாளத்திற்கு ஏற்ப இசைத்தல். | 01 |
| 3.4 சுய ஆக்கங்களைத் தயாரித்து அளிப்பார். | ● இசை தொடர்பான வெளிக்களப் புத்தகம் தயாரித்தல்.<br>● வருட இறுதியில் மாணவர்களின் ஆக்கங்களைக் கொண்ட நிகழ்ச்சி (மேடை நிகழ்ச்சி)<br>* திட்டமிடல் (நிகழ்ச்சி)<br>* பயிற்சி<br>* மேடையேற்றல் | 04 |
| 4.0 இசை உருப்படிகளையும், நாட்டார் பாடல்களையும் சுருதி, இராக தாளத்துடன் பாடிக்காட்டுவார். | | |
| 4.1 ஸ்வரஸ்தானங்களை சுருதி சுத்தத்துடன் பாடுவார். | ● சிறுவர் பாடல்கள்<br>- குருவி ஒன்று மரத்திலே<br>- கண்ணன் புரிந்தலீலை<br>* இராகம்<br>* தாளம்<br>* ஸாகித்யம்<br><br>● சங்கராபரண ஸ்வரங்கள் தொடர்பான பாடல்<br>* பூமகளின் புன்னகை<br>* இராகம்<br>* தாளம்<br>* ஸ்வரம்<br>* ஸாகித்யம் | 16 |
| 4.2 உருப்படிகளை இராக, தாளத் துடன் பாடுவார். | ● தேசிய கீதம்<br>● பாடசாலைக் கீதம்<br>● தேவாரம் - சொற்றுணைவேதியன்<br>● தமிழ்மொழி வாழ்த்து<br>* இராகம் / சுருதிசுத்தம்<br>* தாளம்<br>* பண் - தேவாரம் | 19 |
| 4.3 நாட்டார்பாடல்களை இராக, தாளத்துடன் பாடுவார். | ● மண்ணை நம்பி<br>● மாவு இடித்தற்பாடல்<br>* இராகம் / மெட்டு<br>* தாளம் | 10 |

| தேர்ச்சி / தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|
| 5.0 கர்நாடக இசை பற்றிய அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார். | | |
| 5.1 இசையின் அடிப்படை அம்சங்களை விளக்குவார். | ● கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்கள்.<br>- சங்கீதம்<br>- நாதம் (இரண்டு பிரிவுகள்)<br>- சுருதி (இரண்டு பிரிவுகள்)<br>- ஸ்வரம் (எண்ணிக்கை, பெயர்கள், தமிழிசைப் பெயர்கள்)<br>- ஆரோகண, அவரோகணம்<br>- தாளம்<br>- திஸ்ர, சதுஸ்ர நடைகள் | 20 |
| 6.0 இசையை அடிப்படையாகக் கொண்டு சமூக கலாசாரப் பாரம்பரியப் பண்புகளை வெளிப்படுத்துவார். | | |
| 6.1 மனித வாழ்க்கையில் பிறப்பு முதல் இறப்பு வரை இசை பின்னிப் பிணைந்துள்ளமை பற்றி விளக்குவார். | ● சங்கீதக் கலையின் ஆரம்பம் | 02 |
| 6.2 சமய கலாசார நிகழ்ச்சிகள் தொடர்பான கலை அம்சத்தை வெளிக்கொணர்வார். | ● தைப்பொங்கல்<br>● வெசாக்<br>● றம்ழான்<br>● நத்தார்<br>இவ்விழாக்கள் தொடர்பான<br>* இசை<br>* நடனம்<br>* நாடகம்<br>* சித்திரம் | 04 |

| தரம் - 6 | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 1ஆம் தவணை | பாட வேளை | 2ஆம் தவணை | பாட வேளை | 3ஆம் தவணை | பாட வேளை |
| நயத்தல் | 6.1.1 சூழலில் கேட்கப்படும் இசையை இரசித்தல்<br>6.1.1 சிறுவர் பாடல்களை இரசித்தல் | 01<br>01 | 6.1.2 வாழ்க்கைச் சம்பவங்களோடு இசையைத் தொடர்புபடுத்தி இரசித்தல்<br>6.1.3 வாழ்க்கையோடு தொடர்புடைய இசையின் தனித்துவத்தை இனங்கண்டு இரசித்தல். | 02<br>02 | 6.2.1வெகுசனத்தொடர்பு ஊடகங்களின் மூலம் காட்டப்படும் சிறுவர் அழகிய ற்கலை ஆக்கங்களின் தனித்துவத்தை இனங்கண்டு இரசித்தல்.<br>6.2.2 ஊடகங்களின் மூலம் காண்பிக்கப்படும் சிறுவர் கலை நிகழ்ச்சிகளை இரசித்தல். | 02<br>02 |
| ஆக்கத்திறன்களை வளர்த்தல் | 6.3.1 பாடலுக்கேற்ப அபிநயம் செய்தல் | 02 | 6.3.2 புத்தளிப்புக் கருவிகளை ஆக்குதல்<br>6.3.3 புத்தளிப்புக் கருவிகளை இசைத்தல் | 02<br>01 | 6.3.4 இசை தொடர்பான வெளிக்களப் புத்தகம் தயாரித்தல்<br>6.3.4 வருட இறுதியில் மாணவர் ஆக்கங்களைக் கொண்ட நிகழ்ச்சிகள் தயாரித்தல் | 02<br>02 |
| செய்முறை | 6.4.1 சிறுவர் பாடல் (குருவி ஒன்று மரத்திலே)<br>6.4.2 தேசிய கீதம்<br>6.4.3 நாட்டார் பாடல் (மண்ணை நம்பி) | 05<br>05<br>05 | 6.4.1 சிறுவர் பாடல் (கண்ணன் புரிந்த லீலை)<br>6.4.2 பாடசாலைக் கீதம்<br>6.4.3 தேவாரம் (சொற்றுணை வேதியன்) | 05<br>05<br>04 | 6.4.1 சங்கராபரண ஸ்வரங்களைப் பாடல் மூலம் அறிதல். (பூமகளின் புன்னகை)<br>6.4.2 தமிழ் மொழி வாழ்த்து<br>6.4.3 நாட்டார் பாடல்கள் (உலக்கைப் பாடல்) | 06<br>05<br>05 |
| அறிமுறை | 6.5.1 சங்கீதம்<br>நாதம்<br>சுருதி | 03<br>03<br>03 | 6.5.1 ஸ்வரம்<br>ஆரோகண அவரோகணம் | 03<br>03 | 6.5.1 தாளம்<br>திஸ்ர, சதுஸ்ர நடைகள் | 02<br>03 |
| கலாசாரப் பின்னணி | 6.6.2 தைப்பொங்கல் | 01 | 6.6.1 சங்கீதக் கலையின் ஆரம்பம்<br>6.6.2 வெசாக், ரமழான் | 02<br>02 | 6.6.2 நத்தார் | 01 |
| | | 29 | | 31 | | 30 |

# பகுதி II

# செயற்பாடுகளின் தொடரகம்

## 07. கற்றல் - கற்பித்தல் முறைமை

7.1 இப்பாடத்திட்டத்திற்கு ஏற்ப கற்றல் - கற்பித்தல் முறைமைகளைத் தீர்மானிக்கும்போது ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டதாக மாணவர்களிடத்தில் தேர்ச்சிகளை உருவாக்குவதற்கு ஏற்ற வகையில் கற்றல் - கற்பித்தற் செய்கைகளைத் திட்டமிடுவது தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தேர்ச்சி மட்டக் கல்விக்கு ஆயத்தம் ஆகும்போது ஆசிரியர் பங்கில் தெளிவான மாற்றம் எதிர்பார்க்கப்படுகிறது.

எமது வகுப்பறைகளில் கடந்த காலங்களில் பரவலாகச் செயற்படுத்தப்பட்டு வந்த 'ஊடு கடத்தும் பங்களிப்பு' (Transmission Role), பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட 'கொடுக்கல் வாங்கல் பங்களிப்பு' (Transaction Role) என்பன வகுப்பறையில் இப்போதும் காணப்படுகின்றன. பாடசாலையை விட்டு விலகிச் செல்லும் பிள்ளைகளிடத்தில் காணப்படும் சிந்தனைத் திறன்கள், தனியாள் திறன்கள், சமூகத் திறன்கள் போன்றவற்றிலுள்ள குறைபாடுகளை கருத்திற் கொள்வதன் மூலம் கற்றல் - கற்பித்தல் முறைமைகளில் செய்ய வேண்டிய அபிவிருத்தி மாற்றங்களையும், அவை எவ்வாறு செய்யப்படல் வேண்டுமென்பதையும் இனங்காண்பது கடினமன்று.

ஊடுகடத்தும் பங்களிப்பில், கற்பிக்கப்பட வேண்டிய விடயங்கள் யாவற்றையும் ஆசிரியர் தான் தெரிந்துள்ளதாக எடுத்துக் கொண்டு, மாணவர்கள் இவ்விடயங்கள் தொடர்பாக ஒன்றுமே அறிந்திராதவர் எனக் கருதிக் கொண்டு விடய அறிவை மாணவர்களுக்குச் செலுத்தும் ஒருவராகவே ஆசிரியர் மாறியுள்ளார். இம்முறையில் ஆசிரியர் விரிவுரையாளர் போலத் தொழிற்படுவதோடு, மாணவர்களின் சிந்தனையைத் தூண்டுவதற்கோ, மாணவர்களின் தனியாள் திறன்களை, சமூகத் திறன்களை விருத்தி செய்வதற்கோ செய்யும் பங்களிப்பு போதுமானதல்ல.

ஆசிரியர் வகுப்பறையில் மாணவர்களுடன் கலந்துரையாடுவது, கொடுக்கல் வாங்கல் பங்களிப்பின் ஆரம்பக் கட்டமாக அமைகிறது. இதன்போது ஆசிரியரிடமிருந்து மாணவர்களுக்கும், மாணவர்களிடமிருந்து ஆசிரியருக்கும் கருத்துக்கள் பரிமாறப்படுவதோடு, அதைத் தொடர்ந்து மாணவர் - மாணவர் இடைத்தொடர்பும் ஏற்படுத்தப்பட்டு அவர்களுக்கிடையிலும் கருத்துப் பரிமாறல் நடைபெறுவதோடு, அது தர்க்கரீதியான கலந்துரையாடலாக மாறும். தெரிந்ததிலிருந்து தெரியாததற்கும், எளியதிலிருந்து சிக்கலானதற்கும், தூல விடயத்திலிருந்து கேவல (கருத்துநிலை) விடயத்திற்கும் மாணவர்களைக் கொண்டு செல்லும் வகையில் ஆசிரியர் தொடர்ந்து வினாக்களைத் தொடுப்பதில் ஈடுபடல் வேண்டும்.

தேர்ச்சி மட்டக் கல்வியில் மாணவர் செயற்பாடுகள் வலுவான இடத்தைப் பெறுவதோடு, வகுப்பிலுள்ள ஒவ்வொரு பிள்ளையும் அந்தந்தத் தேர்ச்சி மட்டங்கள் தொடர்பாகக் குறைந்தது அண்மிய தேர்ச்சிமட்டங்களையாவது பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் ஒரு வளவாளராக (Resource Person) மாறுகிறார். கற்றலுக்குத் தேவையான உபகரணங்களும் மற்றும் வசதிகளும் கொண்ட கற்றற் சூழலொன்றைத் திட்டமிடுதல், மாணவர்கள் கற்கும் விதத்தை அருகிலிருந்து அவதானித்தல், மாணவர்களின் இயலும், இயலாமை என்பவற்றை இனங்காணுதல், தேவையான முன்னூட்டல், பின்னூட்டல் என்பவற்றை வழங்கல் மூலம் கற்றலை விருத்தி செய்வதோடு வகுப்பறைக்கு வெளியிலும் மாணவர்கள் கற்பதற்கும், கற்பதைத் தூண்டுவதற்கும் உரியவாறு கற்றல் உபகரணங்களைத் திட்டமிடுவதும் ஆசிரியரின் அடிப்படைக் கடமைகளாகும். இவ்வாறான ஆசிரியர் பங்களிப்பு 'உருமாற்றப் பங்களிப்பு' (Transformation Role) எனப்படும்.

ஆசிரியர் வழிகாட்டியின் முதற்பகுதியாக இங்கு அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள பாடத்திட்டமும், அதனை அமுல்படுத்தும்போது பயன்படுத்தக்கூடிய செயற்பாடுகளின் தொடரகம் இரண்டாம் பகுதியாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இச் செயற்பாடுகள் ஒவ்வொன்றும் குறைந்தது மூன்று படிகளைக் கொண்டதாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. செயற்பாட்டின் முதற்படியில் மாணவர்களைக் கற்றலுக்குத் தயார் செய்வதில் ஈடுபடுத்திக் கொள்வது எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறு மாணவர்களைத் தயார் செய்து கொள்ளும்படி 'ஈடுபடுத்தும்படி' (Engagement Step) எனப்படும். இப்படியில் ஆரம்பத்தில் ஆசிரியர் கொடுக்கல் வாங்கல் பங்களிப்பின் மூலம் மாணவர்களுடன்

கலந்துரையாடலை ஆரம்பிப்பார். பின்னர் மாணவர்கள் விடயங்களை நன்கு ஆராய்ந்து செயற்படுத்துவதற்குத் தேவையான முன்னறிவை மீட்கும் வகையிலும், செயற்பாட்டுக்குத் தேவையான சாடைகளைக் கொடுக்கும் வகையிலும் கலந்துரையாடலை விரிவுபடுத்திக் கொள்க. இக்கலந்துரையாடலில் கருத்துப் பரிமாறலுக்குப் பயன்படுத்தக்கூடிய நுட்பங்கள் ஆசிரியரிடம் இருத்தல் வேண்டும். வினாக்களை முன்வைத்தல் / படங்கள், பத்திரிகை விளம்பரங்கள், அறிவித்தல்கள், காட்சி அட்டைகள் (Flash Cards) போன்ற ஆர்வம் ஊட்டுவனவற்றைப் பயன்படுத்தல் / பிரசினங்கள், புதிர்கள், விடய ஆய்வுகள் / கலந்துரையாடல், நடித்தல், கவிதைகள், பாடல்கள், செய்துகாட்டல்கள் (Demonstrations), கட்புல, செவிப்புல சாதனங்கள் போன்றன பயன்படுத்துவதும் இங்கு அடங்கும். முதலாம் படி பின்வரும் மூன்று நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்வதை அடிப்படையாகக் கொண்டதாகும்.

- வகுப்பு மாணவர்களின் கவனத்தை ஈர்த்துக் கொள்ளல்.
- தேவையான முன்னறிவை மீட்டிக் கொள்வதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் ஆய்வு முறையான கண்டுபிடிப்புகளுக்குத் தேவையான ஆரம்ப விடயங்களை வழங்குதல்.

செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்களுக்கு ஆய்வு ரீதியான பேறுகளைக் கண்டுபிடிப்பதற்குச் (Exploration) சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. மாணவர்கள் பேறுகளைக் கண்டுபிடிப்பது, அதற்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட அறிவுறுத்தல் படிவத்தினை அடிப்படையாகக் கொண்டாகும். பிரசினத்தோடு தொடர்பான பல்வேறு விடயங்களையும் கூட்டாகச் செயற்பட்டு ஆராய்ந்து குழுவாகக் கற்பதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் செயற்பாட்டைத் திட்டமிடல் வேண்டும். வழங்கப்பட்டுள்ள உபகரணங்களையும், மற்றும் வளங்களையும் பயன்படுத்தித் தெளிவான விளக்கத்துடன், தர்க்க ரீதியான கலந்துரையாடலுடன் ஆராய்ந்து பேறுகளைக் கண்டுபிடிப்பது போன்றன இப்படிமுறையில் எதிர்பார்க்கப்படும் முக்கிய பண்புகள் சிலவாகும். இவ்வாறான செயற்பாடுகளில் மாணவர்கள் தொடர்ந்து ஈடுபடுவதால் சுயகட்டுப்பாடு, ஒழுக்கம், ஏனையோரின் கருத்துக்களுக்குச் செவிமடுத்தல், ஏனையோருடன் கூட்டாகச் செயற்படல், ஏனையோருக்கு உதவுதல், நேர முகாமைத்துவம், உயர் தரத்துடனான முடிவுப் பொருளைப் பெறல், நேர்மை போன்ற அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான முக்கிய பண்புகளை விருத்தி செய்துகொள்ளல் போன்றன மாணவர்களிடத்தில் விருத்தியாகும்.

மாணவர்கள் கண்டுபிடிப்புக்களில் ஈடுபடும்போது குழுத்தலைவர்களைத் தெரிவு செய்வதை ஆசிரியர் தவிர்த்துக் கொள்வதோடு தலைவர் குழுவிலிருந்து உருவாவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கக்கூடிய பின்னணியை மட்டும் ஆசிரியர் ஏற்படுத்த வேண்டும். மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

செயற்பாட்டின் மூன்றாம் படியில் குழுக்களின் கண்டுபிடிப்புக்களையும் பேறுகளையும் ஏனைய மாணவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் வகுப்பில் சமர்ப்பிப்பதற்கு ஒவ்வொரு குழுவிற்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு குழுவும் பேறுகளைச் சமர்ப்பிக்கும் போது அக்குழுவின் ஒவ்வொரு அங்கத்தவரும் அதில் பங்கெடுத்துக் கொள்ளும் வகையில் அவர்களுக்கு வேலைப் பகிர்வு இருப்பது பயனுடையதாகும். கண்டுபிடிப்புக்களுக்கான விளக்கமளித்தல் (Explanation) இப்படியின் முக்கிய எதிர்பார்ப்பு ஆகும். வகுப்பறையில் வழக்கமாக ஒலிக்கும் ஆசிரியர் குரலுக்கு மேலதிகமாக மாணவர்களின் குரல்களும் கருத்துள்ளவாறு ஒலிக்கத் தொடங்குகிறது. இது இப்படியில் உள்ள முக்கிய அம்சமாகும்.

செயற்பாட்டின் மூன்றாம் படியில் குழுக்களின் கண்டுபிடிப்புக்களையும் பேறுகளையும் மேலும் விருத்தி செய்து ஆழமாக விளங்கிக் கொள்வதற்கு (Eleboration) மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும். ஒவ்வொரு குழுவும் பேறுகளைச் சமர்ப்பித்த பின் அவற்றை மேலும் அபிவிருத்தி செய்யும் வகையிலான கருத்துக்களை வழங்குவதற்கு முதலில் அக்குறிப்பிட்ட குழுவின் அங்கத்தவர்களுக்கும், பின்னர் ஏனைய குழுக்களின் அங்கத்தவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குதல் மூலம், இது நிறைவேற்றப்படுகிறது. எவ்வாறாயினும், இறுதியில் பேறுகளைத் தொகுப்பது ஆசிரியரின் பொறுப்பாகும்.

இதன்போது மாணவர்கள் ஆராய்ந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்ட முக்கிய விடயங்கள், எண்ணக்கருக்கள், கோட்பாடுகள், விதிகள் போன்றவற்றை மாணவர்களிடையே உறுதிப் படுத்திக் கொள்வது எதிர்பார்க்கப்படுகிறது.

வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செய்கை எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் வெற்றிகரமாக நடைபெறுகிறதாவெனத் தொடர்ந்து தேடிப் பார்ப்பது இம்முறையின் கீழ் ஆசிரியரது பிரதான கடமையாகும். இதற்காகக் கணிப்பீட்டு முறையைப் பயன்படுத்த வேண்டியதோடு, இது கற்றல் - கற்பித்தற் செய்கையினுள் இடம்பெறுவதற்கு, திட்டமிட்ட செயற்பாடுகளைத் தயாரிப்பதற்குரிய சந்தர்ப்பத்தை ஆசிரியருக்கு வழங்குகிறது. செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்கள் விடயங்களை ஆராயும்போது கணிப்பீட்டையும் (Assessment), செயற்பாட்டின் மூன்றாம் படியில் மாணவர்கள் அவர்களது பேறுகளை விளக்கும்போது கணிப்பீட்டோடு சார்ந்த மதிப்பீட்டையும் (Evaluation) நிகழ்த்துவதற்கு ஆசிரியருக்கு வாய்ப்பு ஏற்படுகிறது. கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான விளக்கம் வேறாகத் தரப்பட்டுள்ளது.

இதுவரை விவரிக்கப்பட்ட கற்றல் - கற்பித்தல் முறைமை உருமாற்றப் பங்களிப்பைச் செய்வதற்கு ஆசிரியரை உட்படுத்துகின்றது. இங்கு குழு ஆய்வுக்கு முதலிடம் அளிக்கப்படுவதோடு கொடுக்கல் வாங்கல், தர்க்க ரீதியான கலந்துரையாடல் என்பவற்றோடு சிறிதளவாக ஆசிரியரின் விரிவுரைக்கும் இடமுண்டு. பாடப் பிரதேசத்தின்போது கொடுக்கல் வாங்கல், கலந்துரையாடல் முறை என்பன நடைபெறுவதோடு, இறுதிப் படியில், தொகுப்பின் கீழ் சிறிய விரிவுரைக்கும், அத்தோடு எண்ணக்கரு உருவாக்குவதற்கும் இடம் ஏற்படுகிறது.

புதிய ஆயிரமாம் ஆண்டின் முதலாவது பாடத்திட்ட மறுசீரமைப்பின் கீழ் தயாரிக்கப்பட்ட இப்பாடத்திட்டத்தோடு தொடர்பான கற்றல் - கற்பித்தல் முறைமைகளை அபிவிருத்தி செய்யும் போது உருமாற்றப் பங்களிப்புக்கு மேலதிகமாக ஊடுகடத்தும் பங்களிப்பிலும், கொடுக்கல் வாங்கல் பங்களிப்பிலும் காணப்படக்கூடிய முக்கிய இயல்புகளும் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளமை இம்முறையின் விசேட தன்மையாகும்.

7.2 இப்புதிய பாடத்திட்டத்திற்கேற்ப கர்நாடகசங்கீத பாடத்திற்கான கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும் போது பின்வரும் அணுகுமுறைகளையும் கையாள்வது விரும்பத்தக்கதாகும்.
கற்றல் என்பது கட்டுருவாக்கச் செயன்முறையாக அமையவேண்டும் என்பதே இன்றைய கல்வி நிலைப்பாடாகும். எனவே தான் கற்பித்தலைப் பார்க்கிலும் கற்றலுக்கு முன்னுரிமை வழங்கப்படல்.

- பெறத்தக்க வளங்களை கவனத்திற்கொண்டு அவற்றுக்கேற்ப மேலதிக செயற்பாடுகளை ஆசிரியர் மேற்கொள்ளல்.
- ஒவ்வொரு தேர்ச்சி மட்டத்தை நோக்கி மாணவர்கள் அடைந்துள்ள அடைவை இனங்கண்டு தேவையான இடங்களில் மீளவூட்டல்.
- மாணவரது சுய ஆக்கங்களுக்குப் பாராட்டுத் தெரிவித்து, மாணவரை உற்சாகப்படுத்தி அவற்றை மேடையேற்றவும் வழிவகுத்துக் கொடுத்தல்.
- கற்றல் - கற்பித்தலில் குழுச் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்.
- கற்றல் - கற்பித்தல் உபகரணங்களைப் பயன்படுத்துதல்.
- பொருத்தமான சந்தர்ப்பங்களில் வெகுசனத்தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துதல்.
- செயற்பாடுகளின்போது மாணவர்களுடன் கலந்துரையாடி மாணவரே செயற்படுவதற்கு நெறிப்படுத்துதல்.

# பொருளடக்கம் (செயற்பாடுகள்)


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | சூழலில் கேட்கப்படும் இசையை இரசிப்போம். | 27 |
| 02. | சிறுவர் பாடல்களை இரசிப்போம். | 30 |
| 03. | பாடலுக்கேற்ப அபிநயம் செய்வோம். | 32 |
| 04. | குருவி ஒன்று மரத்திலே என்ற சிறுவர் பாடலைப் பாடுவதற்குத் தயாராகுவோம். | 34 |
| 05. | குருவி ஒன்று மரத்திலே என்ற சிறுவர் பாடலை இராக தாளத்துடன் பாடுவோம். | 37 |
| 06. | தேசிய கீதத்தைப் பாடுவதற்குத் தயாராகுவோம். | 39 |
| 07. | தேசிய கீதத்தை இராக, தாளத்துடன் பாடுவோம். | 43 |
| 08. | மண்ணை நம்பி என்ற நாட்டார் பாடலைப் பாடுவதற்குத் தயாராகுவோம். | 45 |
| 09. | மண்ணை நம்பி என்ற நாட்டார் பாடலைச் சுருதி தாளத்துடன் பாடுவோம். | 48 |
| 10. | கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களில் 'சங்கீதம்' பற்றி அறிந்துகொள்வோம். | 50 |
| 11. | கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களில் 'நாதம்' பற்றி அறிந்துகொள்வோம். | 52 |
| 12. | கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களில் 'சுருதி' பற்றி அறிந்துகொள்வோம். | 54 |
| 13. | தைப்பொங்கல் தொடர்பான இசை, நடனம், சித்திரம், நாடகம் பற்றி அறிந்துகொள்வோம். | 56 |
| 14. | வாழ்க்கைச் சம்பவங்களோடு இசையைத் தொடர்புபடுத்தி இரசிப்போம். | 59 |
| 15. | வாழ்க்கையோடு தொடர்புடைய இசையின் தனித்துவத்தை இனங்கண்டு இரசிப்போம். | 61 |
| 16. | சல்லாரி, மேளம் ஆகிய புத்தளிப்புக் கருவிகளை ஆக்குவோம். | 63 |
| 17. | தயாரித்த புத்தளிப்புக்கருவிகளை இசைப்போம். (சல்லாரி, மேளம்) | 65 |
| 18. | கண்ணன் புரிந்த லீலை என்ற சிறுவர் பாடலைப் பாடுவதற்குத் தயாராகுவோம். | 67 |
| 19. | கண்ணன் புரிந்த லீலை என்ற சிறுவர் பாடலை இராக தாளத்துடன் பாடுவோம். | 70 |
| 20. | பாடசாலைக் கீதத்தைப் பாடுவதற்குத் தயாராகுவோம். | 72 |
| 21. | பாடசாலைக் கீதத்தை இராக தாளத்துடன் பாடுவோம். | 74 |
| 22. | சொற்றுணை வேதியன் என்னும் தேவாரத்தைப் பாடுவதற்குத் தயாராகுவோம். | 76 |
| 23. | சொற்றுணை வேதியன் என்னும் தேவாரத்தைப் பண்முறைக்கமையப் பாடுவோம். | 79 |
| 24. | கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களில் ஸ்வரம் பற்றி அறிந்து கொள்வோம். | 81 |
| 25. | கர்நாடாக இசையின் அடிப்படை அம்சங்களில் ஆரோகண, அவரோகணம் பற்றி அறிந்து கொள்வோம். | 83 |
| 26. | சங்கீதக் கலையின் ஆரம்பம் பற்றி அறிந்துகொள்வோம். | 85 |
| 27. | வெசாக், ரம்ழான் தொடர்பான இசை, நடனம், சித்திரம், நாடகம் பற்றி அறிந்து கொள்வோம். | 88 |
| 28. | வெகுசனத்தொடர்பு ஊடகங்களின் மூலம் காட்டப்படும் சிறுவர் அழகியற்கலை ஆக்கங்களையும், அவற்றின் தனித்துவமான அம்சங்களையும் இனங்கண்டு இரசிப்போம். | 91 |
| 29. | ஊடகங்கள் மூலம் காண்பிக்கப்படும் சிறுவர் கலை நிகழ்ச்சிகளை இரசிப்போம். | 94 |
| 30. | இசை தொடர்பான வெளிக்களப்புத்தகம் ஒன்றினைத் தயாரிப்போம். | 96 |
| 31. | வருட இறுதியில் மாணவர்களின் ஆக்கங்களைக் கொண்ட நிகழ்ச்சிகளை மேடையேற்றுவோம். | 98 |
| 32. | "பூமகளின் புன்னகை" என்ற பாடலைப் பாடுவதற்குத் தயாராகுவோம். | 100 |
| 33. | சங்கராபரண ஸ்வரங்களை "பூமகளின் புன்னகை" என்ற பாடல் மூலம் உணர்ந்து பாடுவோம். | 103 |

பக்கம்

34. தமிழ்மொழி வாழ்த்துப் பாடலைப் பாடுவதற்குத் தயாராகுவோம். 105
35. தமிழ்மொழி வாழ்த்துப் பாடலைப் பாடுவோம். 108
36. லக்கை லாலாக்கை என்ற நாட்டார் பாடலைப் பாடுவதற்குத் தயாராகுவோம். 110
37. லக்கை லாலாக்கை என்ற நாட்டார் பாடலை சுருதி, தாளத்துடன் பாடுவோம். 115
38. கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களில் தாளம் பற்றி அறிந்துகொள்வோம். 117
39. கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களில் திஸ்ர, சதுஸ்ர நடைகள் பற்றி அறிந்துகொள்வோம். 119
40. நத்தார் தொடர்பான இசை, நடனம், சித்திரம், நாடகம் பற்றி அறிந்துகொள்வோம். 121

தேர்ச்சி 1.0 : வாழ்க்கையோடு தொடர்புடைய இசையை இரசிப்பார்.

தேர்ச்சிமட்டம் 1.1 : அன்றாட வாழ்வில் நாம் கேட்கும் இசையை இனங்காண்பார்.

செயற்பாடு 1.1 : சூழலில் கேட்கப்படும் இசையை இரசிப்போம்.

நேரம் : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

தர உள்ளீடு : ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி, செயற்பத்திரம் 1.1.2.1

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :

படி 1.1.1 : சூழலில் கேட்கப்படும் ஒலிகள் (உ+ம் - வாகனங்களின் சத்தம், இயற்கை ஒலிகள், புகையிரத ஓசை, பறவைகளின் ஒலி, மணியோசை போன்றவை) அடங்கிய ஒலிப்பதிவு நாடாவைச் செவிமடுக்கச் செய்தோ, மாணவர்களை நேரடியாகவே ஒலிகளைச் செவிமடுக்கச் செய்தோ, அவ்வொலிகளை இனங்கண்டு கூற வழிப்படுத்துக.

: பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை நிகழ்த்துக.

- பறவைகளின் ஒலி, கோயில் மணி ஓசை, பாடல்கள், இசைக் கருவிகளின் ஒலி போன்றவை இனிமையானவை, வாகனங்களின் சத்தம், மாணவர் இரைச்சல் (கத்தும்) ஒலி, சுவரில் ஆணி அடிக்கும் போது கேட்கும் ஒலி போன்றவை இனிமையற்றவை.
- இனிமையான ஒலிகள் இசை எனப்படும், அவை இரசிக்கக் கூடியவை. இனிமையற்ற ஒலிகள் இரைச்சல் எனப்படும், அவை இரசிக்க முடியாதவை.
- குயில் கத்தும் ஓசை, புகையிரதத்தின் ஓசை, மணியோசை போன்றவை நீண்ட ஓசையுடையவை, காகம் கத்தும் ஒலி, கிளி கத்தும் ஒலி, கை தட்டும் ஒலி போன்றவை குறுகிய ஓசையுடையவை
- நாதஸ்வரத்தின் ஓசை, குழலோசை, மணியோசை, தவிலின் ஓசை, வாகனங்களின் ஒலி போன்றவை நீண்டதூரம் கேட்கப்படக்கூடியவை. கை தட்டும் ஒலி, இருமும் போது ஏற்படும் ஒலி, கதைக்கும் ஒலி, போன்றவை குறுகிய தூரம் கேட்கப்படக்கூடியவை.

(10 நிமிடங்கள்)

படி 1.1.2 : வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைச் சிறிய குழுக்களாகப் பிரிக்குக.

: ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பத்திரத்தைக் கொடுத்து, அதனைப் பூர்த்தி செய்யும் செயற்பாட்டில் ஈடுபடச் செய்க.

: ஒவ்வொரு குழுவும் சரியாகச் செயற்படுவதை உறுதி செய்க.

(15 நிமிடங்கள்)

படி 1.1.3 : ஒவ்வொரு குழுவும் தாம் பட்டியற்படுத்தியவற்றை வகுப்பறையில் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.

ஒரு குழு சமர்ப்பிக்கும் போது ஏனைய குழுவினரும் அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளிக்குக.

: மாணவர் பட்டியற்படுத்தியவற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

- ஒலிகளில் சில இனிமையானவை, சில இனிமை அற்றவை.
- சில ஒலிகள் நீண்ட ஓசை உடையவை சில குறுகிய ஓசை உடையவை.
- ஒலிகளில் சில நீண்டதூரம் கேட்கப்படக்கூடியவை, சில குறுகிய தூரம் கேட்கப்படக் கூடியவை.
- மாணவர் பட்டியப்படுத்திய ஒலிகளில் இனிமையானவை, இனிமையற்றவை, நீண்ட ஓசையுடையவை, குறுகிய ஓசை உடையவை ஆகியவற்றின் அடிப்படையில் ஒலிகளை இனங்கண்டு கூறுவதல்.

(15 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :-

: சூழலில் கேட்கும் ஒலிகளைப் பட்டியற் படுத்துவர்.

: ஒலிகளை வகைப்படுத்துவர்

: சூழலில் கேட்கும் இசையை விரும்பி இரசிப்பர்.

## செயற்பத்திரம் 1.1.2.1

சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை வழங்குக.

| |
|---|
| பாடசாலையில் ஆசிரியர் குறிப்பிடும் பகுதிக்குச் சென்று, நீங்கள் கேட்கும் ஒலிகளைப் பட்டியற்படுத்துக. |

குறிப்பு :-

பாடசாலையின் வெவ்வேறு பகுதிகளை ஆசிரியர் தெரிவுசெய்து மாணவர்கள் ஒலிகளைச் செவிமடுக்க ஏற்பாடு செய்க.

தேர்ச்சி 1.0 : வாழ்க்கையோடு தொடர்புடைய இசையை இரசிப்பார்.

தேர்ச்சிமட்டம் 1.1 : அன்றாட வாழ்வில் நாம் கேட்கும் இசையை இனங்காண்பார்.

செயற்பாடு 1.1 : சிறுவர் பாடல்களை இரசிப்போம்.

நேரம் : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

தர உள்ளீடு : சுருதிப்பெட்டி அல்லது ஹார்மோனியம், ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி, செயற்பத்திரம் 1.1.2.2

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :

படி 1.1.1 : ஆசிரியர் சிறுவர் பாடல்கள் சிலவற்றைப் பாடிக் காட்டியோ, ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்தோ மாணவர் சிறுவர்பாடல்களை இனங்காண வழிகாட்டுக.

: பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

- சிறுவர் பாடல்களின் இசை.
- செவிமடுத்த பாடல் கூறும் கருத்து.
- சிறுவர் பாடல்களின் தாளம்.

(10 நிமிடங்கள்)

படி 1.1.2 : மாணவரை நான்கு குழுக்களாகப் பிரிக்குக.

: ஒவ்வொரு குழுவிற்கும் வெவ்வேறு சிறுவர் பாடல்கள் அடங்கிய ஒலிப்பதிவு நாடாவைக் கொடுத்து, அதனைச் செவிமடுக்கச் செய்க.

: சகல குழுக்களும் சரியாகச் செயற்படுகிறார்களா என்பதை உறுதிசெய்க.

(15 நிமிடங்கள்)

படி 1.1.3 : ஒவ்வொரு குழுவும் தாம் இரசித்த விடயங்கள் தொடர்பான தமது கருத்துக்களைத் தெரிவிக்க இடமளிக்குக.

: ஒரு குழு தமது கருத்தினைத் தெரிவிக்கும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துக் கருத்துக்களைக் கூற இடமளிக்குக.

: பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

- சிறுவர் பாடல்களின் இசையின் தன்மையானது எளிமையான முறையிலும், கவர்ச்சிகரமானதாகவும் அமைந்திருக்கும்.
- சிறுவர் பாடல்களின் பொருளானது ஒரு கதையைக் கூறுவதாகவோ, அறிவுரை வழங்குவதாகவோ, இயற்கைக் காட்சிகளை வர்ணிப்பதாகவோ, சிறுவர்களுக்குப் பிடித்தமான பூ, பந்து, நிலா, மழை, போக்குவரத்துச் சாதனங்கள், பறவைகள், மிருகங்கள் போன்றவற்றைப் பற்றியதாகவோ அமைந்திருக்கும்.
- சிறுவர் பாடல்களின் தாளமானது இலகுவானதாக இருக்கும்.

(15 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :-

- சிறுவர் பாடல்களின் இசை, தாளம், பொருள் பற்றிக் கூறுவர்.
- சிறுவர் பாடல்களை இரசிப்பர்.

**செயற்பத்திரம் 1.1.2.2**

ஒவ்வொரு குழுவிற்கும் வெவ்வேறு சிறுவர்பாடல்கள் அடங்கிய ஒலிப்பதிவு நாடாவைக் கொடுத்து செயற்பத்திரத்தைப் பூர்த்தி செய்ய ஏற்பாடு செய்க.

- நீங்கள் கேட்ட சிறுவர் பாடலில் பின்வருவன தொடர்பாக நீங்கள் இரசித்த அம்சங்களைக் குறிப்பிடுக.
  * இசையின் தன்மை
  * பாடலின் கருத்து
  * தாளம்

குறிப்பு :-

செயற்பத்திரத்தைப் பூர்த்தி செய்வதற்கான சிறுவர் பாடல்களின் எண்ணிக்கையானது பாடசாலையின் வளத்திற்கேற்ப வேறுபடலாம்.

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 3.0 | : | இசை தொடர்பான ஆக்கங்களை வெளிக்கொணர்வார். |
| தேர்ச்சிமட்டம் 3.1 | : | தத்தம் இயல்பிற்கேற்ப பாடல்களை ஆக்கி அபிநயிப்பார். |
| செயற்பாடு 3.1 | : | பாடலுக்கேற்ப அபிநயம் செய்வோம். |
| நேரம் | : | 01 மணி 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்) |
| தர உள்ளீடு | : | சுருதிப்பெட்டி, தாளம், ஒளிப்பதிவு நாடா, ஒலிப்பதிவு நாடா, பாடல் அட்டை, செயற்பத்திரம் 3.1.2.1 |

கற்றல், கற்பித்தல் செயலொழுங்கு :

படி 3.1.1 : மாணவர்களின் தரத்திற்கும், வயது முதிர்ச்சிக்கும் ஏற்ற அபிநயப் பாடல் ஒன்றினை ஆசிரியர் தெரிவு செய்து, அதனைப் பாடி அபிநயம் செய்து காட்டியோ, ஒளிப்பதிவுக் கருவியில் போட்டுக்காட்டியோ மாணவரை அவதானிக்கச் செய்க.

: தெரிவு செய்யப்பட்ட பாடலில் பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் மாணவரை ஈடுபடுத்துக.

- தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலை ஆசிரியர் பாட மாணவர் அதனை செவிமடுக்கச் செய்க.
- பாடலின் கருத்து, மெட்டு, தாளம் ஆகியவற்றை மாணவர் அறிந்து கொள்ளச் செய்க.
- பகுதி பகுதியாக ஆசிரியர் பாட மாணவர் அதனை செவிமடுத்துப் பாட இடமளிக்குக.
- பாடலை முழுமையாக ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து பாடுக.
- பாடலின் கருத்தைப் புலப்படுத்தும் வகையில் அபிநயம் செய்ய வழிப்படுத்துக.
- பாடிக் கொண்டே அபிநயிக்கச் செய்க.

(20 நிமிடங்கள்)

படி 3.1.2 : வகுப்பிலுள்ள மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரிக்குக.

: ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பத்திரங்களை வழங்குக.

: ஒவ்வொரு குழுவும் அறிவுரைக்கேற்ப செயற்பாட்டில் ஈடுபடுவதை உறுதிப்படுத்துக.

(30 நிமிடங்கள்)

படி 3.1.3 : ஒவ்வொரு குழுவும் வகுப்பறைக்கு முன்னால் வந்து பாடலுக்கு அபிநயம் செய்யச் சந்தர்ப்பம் வழங்குக.

: ஏனைய குழுக்கள் தத்தமது கருத்துக்களை முன்வைக்க இடமளிக்குக.

: பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் மாணவரை ஈடுபடுத்துக.

- தெரிவு செய்யப்பட்ட பாடலின் கருத்தினைக் கூறுக.
- பாடலின் கருத்து வெளிப்பாட்டிற்கு ஏற்ற அபிநயம் செய்க.
- பாடலைப் பாடிக்கொண்டு அபிநயம் செய்வதற்கு வழிப்படுத்துக.
- வெவ்வேறு அபிநயப் பாடல்களுக்கு மாணவர் சுயமாகவே அபிநயம் செய்ய ஊக்கமளிக்குக.

(30 நிமிடங்கள்)

கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள் :-

- மாணவர்களின் தரத்திற்கேற்ற பாடல் ஒன்றிற்கு கருத்துக் கூறுவர்.
- கொடுக்கப்பட்ட பாடலுக்கு ஏற்ப அபிநயம் செய்வர்.

## செயற்பத்திரம் 3.1.2.1

சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை வழங்குக.

| |
|---|
| தெரிவு செய்யப்பட்ட பாடலைப் பாடி அபிநயம் செய்து காட்டுக. |

குறிப்பு :-

மாணவர் தரத்திற்கமைய வேறொரு அபிநயப் பாடலைத் தெரிவு செய்து வழங்குக.

தேர்ச்சி 4.0 : இசை உருப்படிகளையும், நாட்டார் பாடல்களையும் சுருதி, இராக தாளத்துடன் பாடிக் காட்டுவார்.

தேர்ச்சிமட்டம் 4.1 : ஸ்வரஸ்தானங்களை சுருதி சுத்தத்துடன் பாடுவார்.

செயற்பாடு 4.1 : "குருவி ஒன்று மரத்திலே" என்ற சிறுவர்பாடலை பாடுவதற்குத் தயாராகுவோம்.

நேரம் : 01 மணி 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

தர· உள்ளீடு : சுருதிப்பெட்டி அல்லது ஆர்மோனியம், ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி, பாடல் எழுதப்பட்ட அட்டை, செயற்பத்திரம் 4.1.2.1

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :

படி 4.1.1 : "குருவி ஒன்று மரத்திலே" என்ற சிறுவர் பாடலை ஆசிரியர் பாடிக்காட்டியோ, ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்தோ மாணவர் சிறுவர் பாடலை இனங்காண வழிப்படுத்துக.

: இச் சிறுவர் பாடலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடலை நிகழ்த்துக.

- "குருவி ஒன்று மரத்திலே" என்ற பாடல் மூலம் தாய்க்குருவி தனது மூன்று குஞ்சுகளிடம் காட்டும் அன்பு, அவைகளுக்குப் போதிக்கும் அறிவுரை, தாயின் அறிவுரையைக் கேட்காத குருவிக்கு ஏற்படும் கதி போன்ற கருத்துக்கள் கூறப்படுகின்றன.
- பாடலைக் காட்சிப்படுத்தி, அதனை உச்சரிப்புத் தெளிவுடன் வாசிக்க வழிப்படுத்துக.
- இச் சிறுவர் பாடலை இயற்றியவர் அழவள்ளியப்பா. இவர் குழந்தைக் கவிஞர் என்று அழைக்கப்படுகிறார்.

(20 நிமிடங்கள்)

படி 4.1.2 : வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை வழங்குக.

: மாணவர்கள் செயற்பாட்டில் சரியாக ஈடுபடுகிறார்களா என்பதை உறுதிசெய்து முழுமைப் படுத்துக.

(30 நிமிடங்கள்)

படி 4.1.3 : ஒவ்வொரு குழுவும், குழுவாகவும், தனியாகவும் பாடலை உச்சரிப்புத் தெளிவுடன் வாசித்துக் காட்டச் சந்தர்ப்பம் வழங்குக.

: ஒரு குழு வாசிக்கும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளிக்குக.

: பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை நிகழ்த்துக.

- ''குருவி ஒன்று மரத்திலே'' என்ற சிறுவர் பாடலின் மூலம் தாய்க்குருவியானது தனது மூன்று குஞ்சுகளையும் நீண்டதூரம் சென்று இரைதேடி போஷித்து வந்துள்ளது.
- தாய்க்குருவி தனது குஞ்சுகளைத் தாமாகவே இரைதேடி உண்ணப் பழகும்படி வலியுறுத்தியுள்ளது.
- தாய்க்குருவியின் சொற்கேட்டு இரண்டுகுஞ்சுகள் இரைதேடச் சென்றன.
- ஒரு குஞ்சு மட்டும் சோம்பலோடு கூட்டில் இருந்தமையால், ஆபத்தைச் சந்திக்க வேண்டிய நிர்க்கதிக்கு ஆளாகியது.
- வெளியிலிருந்து வந்த ஒருவனால் அந்தக் குஞ்சு தனது தாய், சகோதரர்களைப் பிரிய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு உள்ளாகியது.
- படிப்பினைகள்
  - இக்கதையின் மூலம் ஒரு தாய் தனது குஞ்சுகளிடம் காட்டும் அன்பு.
  - இறைவனால் கொடுக்கப்பட்ட அவயவங்களைப் பயன்படுத்தி, ஒவ்வொருவரும் சுயமாகச் செயற்படப் பழகுதல் வேண்டும்.
  - தாயின் சொற்கேட்ட இரண்டு குஞ்சுகள் தமது முயற்சியினால் நல்ல வாழ்வை அடையவழி ஏற்பட்டமை.
  - சோம்பலினால் வாழ்க்கையில் ஏற்பட்ட ஏமாற்றம்.
  - தாய் சொல்லைத் தட்டக் கூடாது.
- பாடலை உச்சரிப்புத் தெளிவுடன் முழுமையாக வாசிக்கும் செயற்பாட்டில் ஈடுபடுக.

(30 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :-

- "குருவி ஒன்று மரத்திலே" என்ற பாடலை உச்சரிப்புத் தெளிவுடன் வாசிப்பர்.
- இப்பாடல் கூறும் கதையைச் சுருக்கமாகக் கூறுவர்.
- இப்பாடல் மூலம் கூறப்படும் அறிவுரைகளை ஏற்றுக்கொள்வர்.

## செயற்பத்திரம் 4.1.2.1

குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தையும், இணைப்பையும் வழங்குக.

- "குருவி ஒன்று மரத்திலே" என்ற சிறுவர் பாடலை உச்சரிப்புத் தெளிவுடன் வாசித்து,அதன் கருத்தைச் சுருக்கமாகக் கூறுக.
- இப்பாடல் மூலம் உணர்த்தப்படும் அறிவுரைகளைக் குறிப்பிடுக.

இணைப்பு-

## சிறுவர் பாடல்
## குருவி ஒன்று மரத்திலே

இராகம்: குந்தலவராளி
தாளம்: சதுஸ்ரஏகம் (திஸ்ரநடை)

ஆ: ஸமபதநிதஸ்
அ: ஸ்நிதபமஸ

இயற்றியவர்: அழவள்ளியப்பா

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஸஸஸ | மாம | பபநி | தா, |
| | குருவி | ஒன்று | மரத்தி | லே, |
| | ஸ்ாநி | தாப | தாப | மா, |
| | கூடு | ஒன்றைக் | கட்டி | யே. |
| | மதநி | ஸ்ாஸ் | நீத | ஸ்ா, |
| | அருமைக் | குஞ்சு | மூன்றை | யும், |
| | ஸ்ஸ்நி | தாப | தாப | மா. |
| | அதில்வ | ளர்த்து | வந்த | து. |

| | | | |
|---|---|---|---|
| 2. | நித்தம் | நித்தம் | குருவியும் |
| | நீண்ட | தூரம் | சென்றிடும் |
| | கொத்தி | வந்து | இரைதனை |
| | குஞ்சு | தின்னக் | கொடுத்திடும் |
| 3. | இறைவன் | தந்த | இறகினால் |
| | எழுந்து | பறக்கப் | பழகுவீர் |
| | இரையைத் | தேடித் | தின்னலாம் |
| | என்று | குருவி | சொன்னது. |
| 4. | நன்று | நன்று | நாங்களும் |
| | இன்றே | பறக்கப் | பழகுவோம் |
| | என்று | கூறித் | தாயுடன் |
| | இரண்டு | குஞ்சு | கிளம்பின |
| 5. | ஒன்று | மட்டும் | சோம்பலாய் |
| | ஒடுக்கிக் | கொண்டு | உடலையே |
| | அன்று | கூட்டில் | இருந்தது |
| | ஆபத் | தொன்று | வந்தது |
| 6. | எங்கி | ருந்தோ | வந்தனன் |
| | ஏறி | ஒருவன் | மரத்திலே |
| | அங்கி | ருந்த | கூட்டினை |
| | அடைய | நெருங்கிச் | சென்றனன் |
| 7. | சிறகி | ருந்தும் | பறக்கவே |
| | தெரிந்தி | டாமல் | விழித்திடும் |
| | குருவிக் | குஞ்சைப் | பிடித்தனன் |
| | கொண்டு | வீடு | சென்றனன். |
| 8. | குருவிக் | குஞ்சு | அவனது |
| | கூட்டில் | வாழ | லானது |
| | அருமை | அன்னை | உரைத்தது |
| | அதனில் | காதில் | ஒலித்தது. |

தேர்ச்சி 4.0 : இசை உருப்படிகளையும், நாட்டார் பாடல்களையும் சுருதி, இராக தாளத்துடன் பாடிக் காட்டுவார்.

தேர்ச்சிமட்டம் 4.1 : ஸ்வரஸ்தானங்களைச் சுருதி சுத்தத்துடன் பாடுவார்.

செயற்பாடு 4.1 : “குருவி ஒன்று மரத்திலே” என்ற சிறுவர் பாடலை இராக, தாளத்துடன் பாடுவோம்.

நேரம் : 02 மணித்தியாலங்கள் (03 பாடவேளைகள்)

தர உள்ளீடு : சுருதிப்பெட்டி அல்லது ஆர்மோனியம், ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக்கருவி பாடல் எழுதப்பட்ட அட்டை, செயற்பத்திரம் 4.1.2.2

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-

படி 4.1.1 : “குருவி ஒன்று மரத்திலே” என்னும் சிறுவர் பாடலை ஆசிரியர் பாடிக்காட்டியோ, ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்தோ மாணவர் பாடலைச் செவிமடுக்க இடமளிக்குக.

: இச் செவிமடுத்த பாடலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடலை நிகழ்த்துக.

- “குருவி ஒன்று மரத்திலே” என்ற சிறுவர் பாடல் குந்தவராளி இராகத்தில்,சதுஸ்ர ஏகதாளத்தில் திஸ்ர நடையில் அமைந்துள்ளது.
- பாடலைக் காட்சிப்படுத்தி, பகுதி பகுதியாகப் பாடசாலை ஆசிரியர் பாட மாணவர் தொடர்ந்து பாடச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஆசிரியரும் ,மாணவரும் பாடலை இராக, தாளத்துடன் முழுமையாகப் பாடுக.
- மாணவரைக் குழுவாகவும்,எழுமாற்றாகவும் தெரிவுசெய்து,தனியாகவும் பாடக்கேட்க.

(30 நிமிடங்கள்)

படி 4.1.2 : வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை வழங்குக.

: சகல குழுவும் பாடலைச் சரியாகப் பாடிப் பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதிசெய்து, முழுமைப்படுத்துக.

(45 நிமிடங்கள்)

படி 4.1.3 : ஒவ்வொரு குழுவும், குழுவாகவும், தனியாகவும் பாடலைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

: ஒரு குழு பாடும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துக் கருத்துக்களைக் கூற இடமளிக்குக.

: பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை நிகழ்த்துக.

- "குருவி ஒன்று மரத்திலே" என்ற சிறுவர்பாடல் குந்தவராளி இராகத்தில், சதுஸ்ர ஏகதாளத்தில் திஸ்ர நடையில் அமைந்துள்ளது.
- பாடலை முழுமையாக இராக, தாளத்துடன் பாடுக.

(45 நிமிடங்கள்)

கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள் :-

- "குருவி ஒன்று மரத்திலே" என்ற சிறுவர் பாடல் அமைந்துள்ள இராக தாளத்தைக் குறிப்பிடுவர்.
- பாடலை இராக தாளத்துடன் பாடுவர்.
- இது போன்ற வேறு சிறவர் பாடல்களையும் இனங்கண்டு பாடுவதற்குத் தூண்டப்படுவர்.

### செயற்பத்திரம் 4.1.2.2

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

- "குருவி ஒன்று மரத்திலே" என்ற சிறுவர் பாடலை முழுமையாக இராக, தாளத்துடன் பாடிப் பயிற்சி செய்க.
- குறித்த பாடலை இராக, தாளத்துடன் பாடுக.

தேர்ச்சி 4.0 : இசை உருப்படிகளையும், நாட்டார் பாடல்களையும் சுருதி, இராக தாளத்துடன் பாடிக் காட்டுவார்.

தேர்ச்சி மட்டம் 4.2 : உருப்படிகளை இராக , தாளத்துடன் பாடுவார்.

செயற்பாடு 4.2 : தேசிய கீதத்தைப் பாடுவதற்குத் தயாராகுவோம்.

நேரம் : 01 மணி 20 நிமிடங்கள் (2 பாடவேளைகள்)

தர உள்ளீடு : சுருதிப்பெட்டி அல்லது ஹார்மோனியம், ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி, தேசியகீதம் எழுதப்பட்ட அட்டை(கணணியில் வடிவமைக்கப் பட்டது), செயற்பத்திரம் 4.2.2.1

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-

படி 4.2.1 : காலைக்கூட்டம், கலைவிழா, பரிசளிப்பு விழா, இல்ல விளையாட்டுப்போட்டி போன்ற பாடசாலை நிகழ்ச்சிகளிலும், சுதந்திர தின விழா போன்ற தேசிய விழாக்களிலும் இடம்பெறும் பாடல்கள் பற்றிக் கலந்துரையாடுக.

: தேசிய கீதத்தை ஆசிரியர் பாடிக்காட்டியோ, ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்தோ மாணவரை செவிமடுக்கச் செய்க.

: செவிமடுத்தவற்றில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

- தேசியகீதம் நாட்டின் பெருமையைக் கூறும் பாடலாகும்.
- இலங்கையின் தேசிய கீதம் சிங்கள மொழியிலேயே கலாசூரி ஆனந்த சமரகோன் அவர்களால் இயற்றப்பட்டது. அதனை தமிழ் மொழியில் மொழி பெயர்ப்புச் செய்தவர் முதுதமிழ்ப்புலவர் மு.நல்லதம்பி ஆவார்.
- இசையின் தன்மை கவர்ச்சிகரமானதாகவும், மனதிற்கு இனிமை தருவதாகவும் அமைந்துள்ளது. தாளமானது விறுவிறுப்பான நடையில் அமைந்துள்ளது.
- தேசியவிழாக்களில் தேசியக்கொடி ஏற்றப்படும்போது இப்பாடல் பாடப்படுகின்றது.
- தேசியகீதம் பாடும் போது கைகளை நேராக வைத்து நிமிர்ந்து நின்று நாட்டிற்கு மதிப்பளிக்கும் நிலையைப் பேணவேண்டும்.
- தேசிய கீதம் எழுதப்பட்ட அட்டையை அல்லது கணணியில் வடிவமைக்கப்பட்ட தேசிய கீதத்தைக் காட்சிப்படுத்துக.
- தேசிய கீதத்தை சரியான முறையில் உச்சரித்துக் கூற நெறிப்படுத்துக.
- குழுவாகவும், எழுமாற்றாகத் தெரிவுசெய்து ,தனியாகவும் உச்சரித்துக் கூறக் கேட்க.

(20 நிமிடங்கள்)

படி 4.2.2 : மாணவரைச் சிறிய குழுக்களாகப் பிரிக்க.

: செயற்படிவத்தில் கூறப்பட்ட விடயங்களில் குழுக்களாகப் பயிற்சி பெற வழிகாட்டுக.

: சகல குழுவும் சரியான முறையில் செயற்படுகிறார்கள் என்பதை உறுதி செய்க.

(30 நிமிடங்கள்)

படி 4.2.3 : ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தில் கேட்கப்பட்ட விடயங்களைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.

: ஒரு குழுவின் சமர்ப்பணத்தின் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிக்க இடமளிக்குக.

: சில மாணவரை எழுமாற்றாகத் தெரிவு செய்து பாடலை உச்சரித்துச் சொல்ல இடமளிக்குக.

: மாணவரின் குறைநிறைகளை இனங்கண்டு முழுமைப்படுத்துக.

: பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

- தேசிய கீதத்தில் நாட்டின் பெருமை ,சிறப்பு, நாட்டின் வாழ்த்து போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.
- தேசிய கீதத்தின் இசையின் தன்மையானது மிகவும் கவர்ச்சிகரமானதாகவும், மனதிற்கு இனிமைதருவதாகவும் அமைந்திருக்கும்.
- தாளமானது விறுவிறுப்பான நடையில் இருக்கும்.
- பாடசாலை நிகழ்ச்சிகளான காலைக்கூட்டம், கலைவிழா, பரிசளிப்பு விழா, இல்ல விளையாட்டுப் போட்டி போன்றவற்றிலும், சுதந்திர தின விழா போன்ற தேசிய விழாக்களிலும் தேசிய கீதம் பாடப்படுகிறது.
- தேசியக்கொடி ஏற்றப்படும் போது இப்பாடல் பாடப்படும்.
- இது சிங்கள மொழியிலேயே இயற்றப்பட்டது, பின்னர் தமிழ் மொழியிலும் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது.
- தேசிய கீதத்தை இயற்றியவர் - கலாசூரி ஆனந்த சமரக்கோன்
  தமிழில் மொழி பெயர்த்தவர் - முதுதமிழ்ப் புலவர். மு. நல்லதம்பி.
- தேசிய கீதம் பாடும் போது கைகளை நேராக வைத்து, நிமிர்ந்து நின்று, நாட்டிற்கு மதிப்பளிக்கும் நிலையைப் பேணவேண்டும்.

(30 நிமிடங்கள்)

கணப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :-

- தேசியகீதம் பாடப்படும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுவர்.
- தேசியகீதத்தை இயற்றியவர், தமிழில் மொழிபெயர்த்தவர், பெயர்களைக் குறிப்பிடுவர்.
- தேசியகீதத்தை சரியான முறையில் உச்சரித்துக் கூறுவர்.

## செயற்பத்திரம் 4.2.2.1

சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தையும் இணைப்பையம் வழங்குக.

- தேசிய கீதம் பாடப்படும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.
- தேசிய கீதத்தை இயற்றியவர், தமிழில் மொழிபெயர்த்தவர் பெயர்களைக் கூறுக.
- தேசிய கீதத்தை உச்சரித்துக் கூறுக.

# இலங்கை தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சிரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ் சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல்செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.

தேர்ச்சி 4.0 : இசை உருப்படிகளையும், நாட்டார் பாடல்களையும் சுருதி, இராக தாளத்துடன் பாடிக் காட்டுவார்.

தேர்ச்சிமட்டம் 4.2 : உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார்.

செயற்பாடு 4.2 : தேசிய கீதத்தை இராக, தாளத்துடன் பாடுவோம்.

நேரம் : 02 மணி (03 பாடவேளைகள்)

தர உள்ளீடு : சுருதிப்பெட்டி, அல்லது ஹார்மோனியம், ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி, தேசியகீதம் எழுதப்பட்ட அட்டை (கணணியில் வடிவமைக்கப்பட்ட பாடல்), செயற்பத்திரம் 4.2.2.2

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-

4.2.1 : தேசிய கீதத்தைப் பற்றி ஏற்கனவே அறிந்த விடயங்களை மீள்வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

: தேசிய கீதத்தை ஆசிரியர் பாடிக்காட்டியோ, ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்தோ மாணவரைச் செவிமடுக்கச் செய்க.

: செவிமடுத்தவற்றில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

- தேசிய கீதத்தின் இசையின் தன்மை
- இராகம் - ஹமீர்கல்யாணி
- தாளம் - ஏகம்
- தேசிய கீதம் எழுதப்பட்ட அட்டையை அல்லது கணணி வடிவமைப்பைக் காட்சிப்படுத்துக.
- ஆசிரியர் தேசிய கீதத்தை முழுமையாகப் பாடிக் காட்டி மாணவரைச் செவிமடுக்கச் செய்க.
- ஆசிரியர் பாடலைப் பகுதி பகுதியாகக் கற்பிக்க மாணவர் தொடர்ந்து பாடுக.
- ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து தாளத்துடன் பாடலை முழுமையாகப் பாடுக.
- மாணவரைச் சிறிய குழுக்களாகவும், எழுமாற்றாகத் தெரிவு செய்து தனித்தனியாகவும் பாடுவிக்க.

(30 நிமிடங்கள்)

4.2.2 : மாணவரைச் சிறிய குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை வழங்குக.

: சகல குழுவும் சரியான முறையில் செயற்பாட்டில் ஈடுபடுகிறார்களா என்பதை உறுதிசெய்க.

(45 நிமிடங்கள்)

படி 4.2.3 : ஒவ்வொரு குழுவும், தேசிய கீதத்தைப் பாட சந்தர்ப்பம் வழங்குக.

: ஒரு குழு பாடும்போது, ஏனைய குழுக்கள் அதனை அவதானித்து தமது கருத்துக்களைத் தெரிவிக்க இடமளிக்குக.

: சில மாணவரை எழுமாற்றாகத் தெரிவு செய்து தனியாகப் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

: மாணவருடன் சேர்ந்து பாடலை முழுமையாகப் பாடுக.

: பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

- தேசிய கீதத்தின் இசையின் தன்மையானது மிகவும் கவர்ச்சிகரமானதாகவும், மனதிற்கு இனிமை தருவதாகவும் அமைந்திருக்கும்.
- தேசிய கீதம் ஹமீர்-கல்யாணி எனும் இராகத்தில் இசையமைக்கப் பட்டுள்ளது.
- இதை கலாசூரி ஆனந்த சமரக்கோன் இதனை இயற்றியுள்ளார்.
- இதன் தாளம் விறுவிறுப்பான நடையில் அமைந்திருக்கும்.
- ஏகதாளத்தில் அமைக்கப்பட்டுள்ளது.
- தேசியகீதத்தை மாணவருடன் சேர்ந்து இராக, தாளத்துடன் முழுமையாகப் பாடுக.

(45 நிமிடம்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :-

- தேசியகீதத்தின் இராகம், தாளத்தைக் குறிப்பிடுவர்.
- தேசிய கீதத்தை இராக, தாளத்துடன் பாடுவர்.
- தேசிய கீதத்தைப் பாடும் போது பொருத்தமான முறை அனுசரிக்கப்பட வேண்டும் என்னும் மனப்பாங்கை வெளிப்படுத்துவர்.
- நாட்டில் பற்றுணர்வைப் பேணவேண்டும் என்ற மனப்பாங்கை ஏற்றுக் கொள்வர்.

**செயற்பத்திரம் 4.2.2.2**

சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை வழங்குக.

- தேசிய கீதத்தை இராக , தாளத்துடன் முழுமையாகப் பாடிப் பயிற்சி செய்க.
- தேசிய கீதத்தை இராக, தாளத்துடன் முழுமையாகப்பாடுக.

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 4.0 | : | இசை உருப்படிகளையும், நாட்டார் பாடல்களையும் சுருதி, இராக தாளத்துடன் பாடிக் காட்டுவார். |
| தேர்ச்சி மட்டம் 4.3 | : | நாட்டார் பாடல்களை இராக, தாளத்துடன் பாடுவார். |
| செயற்பாடு 4.3 | : | "மண்ணை நம்பி" என்ற நாட்டார் பாடலைப் பாடுவதற்குத் தயாராகுவோம். |
| நேரம் | : | 01 மணி 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்) |
| தர உள்ளீடு | : | • சுருதிப்பெட்டி அல்லது ஆர்மோனியம்,<br>• ஒலிப்பதிவுநாடா, ஒலிப்பதிவுக் கருவி,<br>• பாடல் எழுதப்பட்ட அட்டை,<br>• விவசாயத் தொழிலில் இடம்பெறும் நிகழ்வுகளைச் சித்திரிக்கும் படங்கள், செயற்பத்திரம் 4.3.2.1 |

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-

| | | |
|---|---|---|
| படி 4.3.1 | : | "மண்ணை நம்பி" என்ற நாட்டார்பாடலை ஆசிரியர் பாடிக்காட்டியோ, ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச்செய்தோ, மாணவர் நாட்டார்பாடலை இனங்காண வழிப்படுத்துக. |
| | : | இந் நாட்டார்பாடலை அடிப்படையாகக் கொண்டு, பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடலை நிகழ்த்துக. |

- "மண்ணை நம்பி" என்னும் நாட்டார்பாடலானது தொழிற்பாடல் வகையைச் சேர்ந்தது.
- விவசாயத் தொழிலில் இடம்பெறும் நிகழ்வுகளைச் சித்தரிக்கும் படங்களைக் காட்சிப்படுத்தி, நிகழ்வுகள் தொடர்பாகக் கலந்துரையாடுக.
- இப்பாடலானது விவசாயத் தொழிலில் அரிவு வெட்டப்படும் சந்தர்ப்பத்தில் பாடப்படும் என்பதைக் குறிப்பிடுக.
- பாடலில் குறிப்பிடப்படும் தொழிலாளரை இனங்கண்டு கூற இடமளிக்குக.
- இப்பாடலின் கருத்தின் மூலம் விவசாயத்தொழிலின் முக்கியத்துவம் புலப்படுத்தப்படுகின்றது.
- இப்பாடல் களைப்புத் தெரியாமல் இருப்பதற்காகப் பாடப்படுகிறது.
- பாடலைக் காட்சிப்படுத்தி, அதனை உச்சரிப்புத் தெளிவுடன் வாசிக்க வழிப்படுத்துக.

(20 நிமிடங்கள்)

| | | |
|---|---|---|
| படி 4.3.2 | : | வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை வழங்குக. |
| | : | மாணவர்கள் செயற்பாட்டில் சரியாக ஈடுபடுகிறார்களா என்பதை உறுதிசெய்து, முழுமைப்படுத்துக. |

(30 நிமிடங்கள்)

படி 4.3.3 : ஒவ்வொரு குழுவும், குழுவாகவும் தனியாகவும் பாடலை உச்சரிப்புத் தெளிவுடன் வாசித்துக் காட்டச் சந்தர்ப்பம் வழங்குக.

: ஒரு குழு வாசிக்கும் போது, ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளிக்குக.

: பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை நிகழ்த்துக.

- விவசாயத் தொழிலில் உழுதல், விதைத்தல், அறுவடை செய்தல் போன்ற நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.
- "மண்ணை நம்பி" என்னும் நாட்டார்பாடல் அரிவு வெட்டப்படும் சந்தர்ப்பத்தில் பாடப்படும் பாடல் வகையாகும்.
- இப்பாடலில் விவசாயிகளின் முக்கியத்துவம் பற்றி வலியுறுத்தப்பட்டுள்ளது.
- மாணவர் பாடலை உச்சரிப்புத் தெளிவுடன் முழுமையாக வாசிக்கும் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.

(30 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :-

: "மண்ணை நம்பி" என்னும் பாடலின் கருத்தைக் கூறுவர்.

: இப்பாடல் பாடப்படும் சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுவர்.

: அரிவு வெட்டப்படுமுன்பு விவசாயத் தொழிலில் இடம்பெறும் நிகழ்வுகளைக் குறிப்பிடுவர்.

: பாடலை உச்சரிப்புத் தெளிவுடன் வாசிப்பர்.

**செயற்பத்திரம் 4.3.2.1**

சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தையும், இணைப்பையும் வழங்குக.

- "மண்ணை நம்பி" என்ற நாட்டார்பாடலை கருத்துப் புலப்பட உச்சரிப்புத் தெளிவுடன் வாசித்துக் காட்டுக.
- இப்பாடலின் மூலம் விவசாயத் தொழிலில் இடம்பெறும் நிகழ்வுகளைக் கூறுக.

# நாட்டார் பாடல்
# மண்ணை நம்பி

விவசாயப் பாடல் (அரிவு வெட்டுப்பாடல்)
தாளம் - ஆதி (திஸ்ர நடை)

ஸ்வரஸ்தானங்கள் - ஸ்ட்ஜம், சது - ரிஷபம், சாத - காந்தாரம், சுத்த மத்திமம், சது-தைவதம், கை - நிஷாதம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பாத | பஸ்ா;, | தபா/ | பபப/ | பபா | ;;;/ | | |
| மண்ணை | நம்பி.. | ..... | உழுது | வைச்சி | ........ | | |
| ஸாரி | ஸமா;, | ரிஸா/ | ஸஸஸ/ | ஸஸா | ;, ;, // | | |
| மழையை | நம்பி.. | ...... | வெத | வெதைச்சு | ........ | | |
| ஸாம | மமா | ஸாம | மமா/ | பாதபா, | /;;பபா // | | |
| உன்னை | நம்பி | நாமி | ருப்போம் | சாமியே.. | உழவர் | | |
| பாப | பமம | மரிரி | ரிஸஸ/ | ஸஸஸ | ஸஸா/ | ஸா,;, | // |
| மண் | ணைநம்பி | இருக்கு | திந்தப் | பூமி | யே... | ..... | |
| ஸாரிக | ரிஸா | ஸரிக | ரிஸா/ | ஸரிக | ரிஸா/ | மா, ரிஸா | //; |
| தந்தன | தானா | தந்தன | தானா | தந்தன | தானா | னே...... | |
| ஸரிக | ரிஸா | ஸரிக | ரிஸா/ | ஸரிக | ரிஸா/ | ஸா,:, . | //; |
| தந்தன | தானா | தந்தன | தானா | தந்தன | தானா | னே...... | |
| பாப | ஸ்ஸ்ா | ஸரிக் | ரிஸ்ா/ | பாப | ஸ்ாஸ்/ | ஸரிக் ரிஸ்ா // | |
| காடு | வெட்டிக் | கழனி | செய்து | கஷ்ட | ப்பட்டு | வெதவெதச்சு | |
| பாப | ஸ்ஸா | நிநிநி | தபா/ | பதநிபா ;,/ | | பாபா | |
| கதிர் | மணியாய் | சிரிக்கு | திங்கே | பாருங்கடா | | இந்த | |
| பமம | மகக | கரிரி | ரிஸஸ/ | ஸஸஸஸா,/ ; | | ஸஸா// | |
| மேட்டுக்கு | மேட்டிலே | அறுத்துப் | போடுங்கடா | | .......... | | |

(தந்தனதானா)

கோபுரத்துச் சீமானுக்கும் குடிசை வாழும் மக்களுக்கும்
சோறு போட்டுக் காட்டும் கூட்டம் நாங்கடா சும்மா//
ஏறுநடை போட்டு ஓடி வாங்கடா//

(தந்தனதானா)

தேர்ச்சி 4.0 : இசை உருப்படிகளையும், நாட்டார் பாடல்களையும் சுருதி, இராக, தாளத்துடன் பாடிக்காட்டுவார்.

தேர்ச்சிமட்டம் 4.3 : நாட்டார் பாடல்களை இராக, தாளத்துடன் பாடுவார்.

செயற்பாடு 4.3 : மண்ணைநம்பி என்ற நாட்டார் பாடலைச் சுருதி, தாளத்துடன் பாடுவோம்

நேரம் : 02 மணித்தியாலம் (03 பாடவேளைகள்)

தர உள்ளீடு : சுருதிப்பெட்டி அல்லது ஹார்மோனியம், மண்ணை நம்பி என்னும் பாடல் அடங்கிய ஒலிநாடா, ஒலிப்பதிவுக் கருவி, பாடல் அட்டை, செயற்பத்திரம் 4.3.2.2

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-

படி 4.3.1 : மண்ணை நம்பி என்ற பாடலை ஒலிப்பதிவுக் கருவியில் ஒலிக்கச் செய்தோ அல்லது பாடிக்காட்டியோ மாணவரைச் செவிமடுக்கச் செய்க.

: செவிமடுத்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்க.

- இப்பாடல் ஆதி தாளத்தில் திஸ்ர நடையில் அமைந்துள்ளது.
- மண்ணைநம்பி என்ற பாடல் நாட்டார் பாடல் வகையினைச் சார்ந்த ஓர் விவசாயப் பாடல் ஆகும்.
- பாடலைக் காட்சிப்படுத்தி, அதனை பகுதி பகுதியாகக் கற்பிக்க மாணவர் தொடர்ந்துபாட இடமளிக்குக.
- தந்தனத்தான என்ற தருவினை தாளத்திற்கேற்ப பாட நெறிப்படுத்துக.
- ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து பாடலை சுருதி, தாளத்துடன் முழுமையாகப் பாடுக.
- மாணவரை எழுமாற்றாகத் தெரிவுசெய்து தனித்தனியாகவும், குழுக்களாகவும் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

(30 நிமிடங்கள்)

படி 4.3.2 : வகுப்பிலுள்ள மாணவர்களை இரண்டு குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரங்களை வழங்குக.

: செயற்பத்திரத்திலுள்ள அறிவுரைக்கேற்ப ஒவ்வொரு குழுவும் சரியாகப் பாடிப் பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதிப்படுத்துக.

(45 நிமிடங்கள்)

படி 4.3.3 : ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குக.

: ஒரு குழு சமர்ப்பிக்கும் போது மற்றைய குழுவும் அதனை அவதானித்துக் கருத்துக்கூற இடமளிக்குக.

: குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

: கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்துக

- மண்ணைநம்பி என்ற பாடல் ஆதி தாளம் திஸ்ர நடையில் அமைந்துள்ளமை.
- தந்தனதானா என்ற தருவினை மாணவர் தாளத்திற்கேற்ப பாடுவதற்கு நெறிப்படுத்துக.
- மாணவருடன் சேர்ந்து பாடலை சுருதி, தாளத்துடன் முழுமையாகப் பாடுக.

(45 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :-

: மண்ணைநம்பி என்ற பாடலின் தாளத்தைக் குறிப்பிடுவர்.

: இது போன்று வேறு விவசாயப் பாடல்களையும் இனங்காண்பர்.

: மண்ணைநம்பி என்னும் நாட்டார் பாடலை சுருதி, தாளத்துடன் பாடுவர்.

**செயற்பத்திரம் 4.3.2.2**

சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை வழங்குக.

- "மண்ணை நம்பி" என்ற நாட்டார் பாடலை சுருதி, தாளத்துடன் பாடிப் பயிற்சி செய்க.
- குறித்த பாடலை சுருதி, தாளத்துடன் பாடுக.

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 5.0 | : | கர்நாடக இசைபற்றிய அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார். |
| தேர்ச்சி மட்டம் 5.1 | : | இசையின் அடிப்படை அம்சங்களை விளக்குவார். |
| செயற்பாடு 5.1 | : | கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களில் "சங்கீதம்" பற்றி அறிந்துகொள்வோம். |
| நேரம் | : | 02 மணித்தியாலங்கள் (03 பாடவேளைகள்) |
| தர உள்ளீடு | : | சங்கீதக்கச்சேரி, நடனநிகழ்ச்சி, தேவாரம், நாட்டார் பாடல்கள், பக்திப் பாடல்கள் அடங்கிய ஒலிப்பதிவு நாடாக்கள், ஒலிப்பதிவுக் கருவி, செயற்பத்திரம் 5.1.2.1 |

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-

படி 5.1.1 : சங்கீதக் கச்சேரி, நடன நிகழ்ச்சி, தேவாரம், நாட்டார் பாடல்கள், பக்திப் பாடல்கள் அடங்கிய ஒலிப்பதிவு நாடாக்களைப் போட்டுக் காட்டி மாணவர் இசையை இனங்காண வழிகாட்டுக.

பின்வரும் விடயங்களைப் பற்றிய கலந்துரையாடலொன்றை மேற்கொள்க.

- சங்கீதத்தின் சிறப்பு
- சங்கீதத்தால் வளர்க்கப்படும் பண்புகள்
- மனித வாழ்க்கையில் சங்கீதத்தின் பங்கு
- இசையால் இறைவனை அடையலாம்

(20 நிமிடங்கள்)

படி 5.1.2 : மாணவரை குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரங்களை வழங்குக.

: மாணவர் செயற்பத்திரத்திலுள்ள அறிவுரைகளுக்கமைய செயற்பாட்டில் ஈடுபடுகிறார்களா என்பதை உறுதிப்படுத்துக.

(45 நிமிடங்கள்)

படி 5.1.3 : மாணவர் குழுக்கள் தமது பேறுகளை வகுப்பில் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் அளிக்குக.

: ஏனைய மாணவர்களும் அதனை அவதானித்துக் கருத்துக்கூற இடமளிக்குக.

: மாணவர்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடுக.

- சங்கீதம் என்பது ஒரு தெய்வீகக்கலையாகும். இறைவன் கையில் வாத்தியங்கள் இருப்பதை எடுத்துக் கூறுக.
  உ+ம்: சரஸ்வதி - வீணை
  கண்ணன் - புல்லாங்குழல்

- காதினால் கேட்டு உணரக்கூடிய நுட்பமான த்வனிகளைப் பற்றிய கலை

- சங்கீதம் என்பதால் சிரவணகலை என்று கூறப்படும்

- கீதம், வாத்தியம், நிருத்தியம் என்ற மூன்றையும் உள்ளடக்கியுள்ளது.

- சங்கீதம் கற்பதால் அன்பு, அடக்கம், சாந்தி, நிதானம் போன்ற நற்பண்புகள் விருத்தியாகின்றன.

- வாழ்க்கையின் ஒவ்வொரு சம்பவமும் சங்கீதத்துடன் தொடர்புடையதாக இருக்கின்றது.
  உ+ம் : தாலாட்டுப்பாடல், விளையாட்டுப்பாடல், தொழிற்பாடல், நலங்குப் பாடல் போன்றவை.

- இசையானது மனித வாழ்க்கையில் பிறப்பு முதல் இறப்புவரை பின்னிப் பிணைந்துள்ளது.

(45 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :-

: இசையால் இறைவனை அடையலாம் எனக் கூறுவர்.

: சங்கீதம் கற்பதால் ஏற்படும் நற்பண்புகளை ஏற்றுக் கொள்வர்.

: இசை வாழ்க்கையோடு இணைந்துள்ளமை பற்றி கூறுவர்.

**செயற்பத்திரம் 5.1.2.1**

சகல குழுவிற்கும் இச் செயற்பத்திரத்தினை வழங்குக

- சங்கீதம் பற்றி 10 வசனங்கள் எழுதுக.

தேர்ச்சி 5.0 : கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

தேர்ச்சி மட்டம் 5.1 : இசையின் அடிப்படை அம்சங்களை விளக்குவார்.

செயற்பாடு 5.1 : கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களில் நாதம் பற்றி அறிந்து கொள்வோம்.

நேரம் : 02 மணித்தியாலங்கள் (03 பாடவேளைகள்)

தர உள்ளீடு : வாத்திய இசை, இசைக்கச்சேரி அடங்கிய ஒளி, ஒலி நாடாக்கள்,செயற்பத்திரம் 5.1.2.2

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-

படி 5.1.1 : ஆசிரியர் இசைக்கச்சேரி / வாத்திய இசை அடங்கிய ஒளி அல்லது ஒலிப்பதிவு நாடாவைப் போட்டுக்காட்டி மாணவர்களை நன்கு செவிமடுக்கச் செய்க.

: பின்வரும் விடயங்களைப் பற்றிக் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

- நாதத்தின் வரைவிலக்கணம்.
- நாதம் இசைக்கு ஆதாரம்.
- இனிமையான ஓசை நாதம். இனிமையற்ற ஓசை இரைச்சல்.
- நாதத்தின் இரு பிரிவுகள்.

(30 நிமிடங்கள்)

படி 5.1.2 : மாணவரை இரு குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரங்களை வழங்குக.

: ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கும் வகையில் ஆயத்தம் செய்விக்க

: ஒவ்வொரு குழுவினதும் செயற்பாட்டினை உறுதிப்படுத்துக.

(45 நமிடங்கள்)

படி 5.1.3 : ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குக.

: ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளை சமர்ப்பிக்கும் போது ஏனைய மாணவர்களும் அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளிக்குக.

: மாணவர்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

: கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்துக

- செவிக்கு இனிமையைக் கொடுக்கும் த்வனி நாதம் எனப்படும்.

  சங்கீதத்திற்கு ஆதாரமானது நாதம்.

- ஒலி ஒழுங்கான முறையில் உண்டாக்கப்படும் போது நாதம் உண்டாகிறது. ஒழுங்கற்ற முறையில் உண்டாக்கப்படும் போது அது இரைச்சல் எனப்படும்.

- நாதம் ஆகதநாதம், அநாகத நாதம் என இருவகைப்படும். மனிதனுடைய முயற்சியினால் உண்டாவது ஆகதநாதம். மனித முயற்சியின்றி இயற்கையாக உண்டாகும் நாதம் அநாகத நாதம்.

- நாதத்திலிருந்து சுருதியும், சுருதியிலிருந்து ஸ்வரமும், ஸ்வரத்திலிருந்து இராகங்களும் உண்டாகின்றன.

(45 நிமிடம்)

கணிப்பீட்டு / மதிப்பீட்டு நியதிகள் :-

: நாதம் பற்றிக் கூறுவர்.

நாதத்தின் இருபிரிவுகளையும் கூறுவர்

ஆகநாதம், அநாகத நாதம் பற்றிய வேற்றுமையை இனங்காண்பர்.

அதற்குரிய உதாரணங்களைக் கூறுவர்.

**செயற்பத்திரம் 5.1.2.2**

இரு குழுவினருக்கும் இச் செயற்பத்திரத்தை வழங்குக

- பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
- நாதம் என்றால் என்ன?
- நாதத்தின் பிரிவுகள் எவை?
- அப்பிரிவுகளை தனித்தனியே உதாரணத்துடன் விளக்குக.

தேர்ச்சி 5.0 : கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

தேர்ச்சி மட்டம் 5.1 : இசையின் அடிப்படை அம்சங்களை விளக்குவார்.

செயற்பாடு 5.1 : கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களில் சுருதி பற்றி அறிந்து கொள்வோம்.

நேரம் : 02 மணித்தியாலங்கள் (03 பாடவேளைகள்)

தர உள்ளீடு : சுருதிப்பெட்டி, தம்புரா, செயற்பத்திரம் 5.1.2.3

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-

படி 5.1.1 : சுருதிப்பெட்டி அல்லது தம்புராவை ஒலிக்கச் செய்து பஞ்சம, மத்திம சுருதியில் அமைந்த பாடல்களைப் பாடி மாணவர்கள் நன்கு செவிமடுக்கச் செய்க.

: பின்வரும் விடயங்களைப் பற்றிக் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

- சுருதி வரைவிலக்கம்
- இரு பிரிவுகளும், அதன் விளக்கமும்.
- சுருதிக்காகப் பயன்படுத்தப்படும் வாத்தியங்கள்.

(30 நிமிடங்கள்)

படி 5.1.2 : சகல மாணவர்களுக்கும் தனித் தனியாக செயற்பத்திரத்தை வழங்குக.

: மாணவர்கள் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கும் வகையில் ஆயத்தம் செய்விக்க

: ஒவ்வொரு மாணவர்களினதும் செயற்பாட்டினை உறுதிப்படுத்துக.
(45 நிமிடங்கள்)

படி 5.1.3 : ஒவ்வொரு மாணவனும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குக.

: ஒரு மாணவன் தனது பேறுகளை சமர்ப்பிக்கும் போது ஏனைய மாணவர்களும் அதனை அவதானித்துக் கருத்துக்கூற இடமளிக்குக.

: மாணவர்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

: கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை வலியுறுத்துக.

- ஒரு பாடலைத் தொடங்குவதற்கு அடிப்படையாக உள்ள ஒலி விசேடமே சுருதி எனப்படும்.
- ஸ்ருதியைக் கேள்வி எனவும் அழைப்பதுண்டு.
- சுருதி வாத்தியங்களாக தம்புரா,சுருதிப்பெட்டி பயன்படுத்தப்படுகின்றன.
- "ஸ்ருதிர் லய மாதா பிதா" என்பது ஸ்லோகம்.
- ஸ்ருதி பஞ்சம ஸ்ருதி, மத்திம ஸ்ருதி என இரு வகைப்படும். ஸபஸ் என்னும் ஸ்வரங்களில் மத்தியஸ்தாயி ஸட்ஜத்தை ஆதார ஸட்ஜமாக வைத்துக் கொண்டு பாடுவது பஞ்சமஸ்ருதி எனப்படும்.
- ஸமஸ் என்னும் ஸ்வரங்களில் மத்தியஸ்தாயி மத்திமத்தை ஆதார ஸட்ஜமாகக் கொண்டு பாடுவது மத்திமஸ்ருதி எனப்படும்.

(45 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :-

: சுருதி சேர்க்கப் பயன்படும் ஸ்வரங்களைக் கூறுவர்.

: சுருதியோடு பாடப்படும் பாடல்களை இனங்காண்பர்.

: சுருதி சுத்தமாக பாடல்களைப் பாடுவர்.

**செயற்பத்திரம் 5.1.2.3**

எல்லா மாணவர்களுக்கும் இச் செயற்பத்திரத்தை வழங்குக.

கீறிட்ட இடங்களை நிரப்புக:

01. சுருதிக்குப் பயன்படுத்தப்படும் வாத்தியம் ........................................................ ஆகும்.

02. சுருதியை ...................................................... இற்கு ஒப்பிடுவர்.

03. பஞ்சம சுருதியின் ஸ்வரங்கள் ........................................................ ஆகும்.

04. மத்திம சுருதியின் ஸ்வரங்கள் ........................................................ ஆகும்.

தேர்ச்சி 6.0 : இசையை அடிப்படையாகக் கொண்டு சமூக, கலாசார பாரம்பரியப் பண்புகளை வெளிப்படுத்துவார்.

தேர்ச்சி மட்டம் 6.2 : சமய கலாசார நிகழ்ச்சிகள் தொடர்பான கலை அம்சத்தை வெளிக்கொணர்வார்.

செயற்பாடு 6.2 : தைப்பொங்கல் தொடர்பான இசை, நடனம், சித்திரம், நாடகம் பற்றி அறிந்து கொள்வோம்.

நேரம் : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

தர உள்ளீடு : பொங்கல் பற்றிய பாடல்கள், பொங்கல் தொடர்பான படங்கள், மாதிரி வாழ்த்துமடல்கள், டிமைகடதாசி, நிறப்பேனாக்கள், ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி,செயற்பத்திரம் 6.2.2.1

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-

படி 6.2.1 : தைப்பொங்கல் தொடர்பான பாடல்களை ஆசிரியர் பாடிக்காட்டியோ, ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்தோ மாணவர் தைப்பொங்கல் நிகழ்வினை இனங்காண வழிப்படுத்துக.

: சமய கலாசார நிகழ்ச்சிகளுள் ஒன்றான பொங்கல் விழா பற்றிய பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை நிகழ்த்துக.

* தைப்பொங்கல் விழாவானது தமிழர்களுடைய திருநாளாகும். இது தை மாதத்தில் 1ஆந் திகதியன்று கொண்டாடப்படுகிறது. இதனை உழவர் திருநாள் என்றும் அழைப்பதுண்டு.

* உழவர் சூரிய பகவானுக்கு நன்றி செலுத்துமுகமாக இவ்விழா கொண்டாடப்படுகிறது.

* பொங்கல் நிகழ்வுகளைச் சித்திரிக்கும் படங்களைக் காட்சிப்படுத்தி, இவ்விழாவின் பிரதான நிகழ்வுகளைக் குறிப்பிடுக.
  - தோரணம் கட்டுதல்
  - கோலம் போடுதல்
  - நிறைகுடம் வைத்தல்
  - புதுப்பானையில் புது அரிசி பொங்குதல்
  - சூரியபகவானுக்குப் படைத்தல்
  - குடும்பத்தினர், உறவினர், சுற்றத்தாருடன் பகிர்ந்துண்ணல்.

* மாதிரி வாழ்த்துமடல்களைக் காட்டி, பொங்கல் வாழ்த்துமடலில் இடம்பெறக்கூடிய விடயங்களைக் கூறுக.

(10 நிமிடங்கள்)

படி 6.2.2 : மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரிக்குக.

: ஒவ்வொரு குழுவிற்குமான செயற்பத்திரங்களை வழங்குக.

: மாணவர்கள் செயற்பாட்டில் சரியாக ஈடுபடுகிறார்களா என்பதை உறுதிசெய்து, முழுமைப்படுத்துக.

(15 நிமிடங்கள்)

படி 6.2.3 : ஒவ்வொரு குழுவும் தத்தமது பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.

: ஒரு குழுவின் சமர்ப்பணம் தொடர்பாக ஏனைய குழுக்கள் தமது கருத்துக்களை முன்வைக்க இடமளிக்குக.

: பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை நிகழ்த்துக.

- தைப்பொங்கல் விழாவானது தமிழர்களால், தைமாதத்தில் 1ஆந் திகதியன்று கொண்டாடப்படுகிறது.
- உழவர் சூரியபகவானுக்கு நன்றிசெலுத்துமுகமாக இவ்விழாவைக் கொண்டாடுவதால் இது உழவர் திருநாள் என அழைக்கப்படுகிறது.
- தோரணம் கட்டுதல், கோலம் போடுதல், நிறைகுடம் வைத்தல், பொங்கல் பொங்குதல், சூரியனுக்குப் படைத்தல், பகிர்ந்துண்ணல் போன்றவை இவ்விழாவின் பிரதான நிகழ்வுகளாகும்.

(15 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :-

- தைப்பொங்கல் விழாவின் முக்கிய நிகழ்வுகளைக் குறிப்பிடுவர்.
- தைப்பொங்கலானது எந்த இனத்தவரால், என்ன மாதத்தில் கொண்டாடப்படுகிறது என்பதைக் கூறுவர்.
- தைப்பொங்கல் தொடர்பான இசை, நடனம், சித்திரம், நாடகம் போன்ற அம்சங்களை வெளிப்படுத்துவர்.

## செயற்பத்திரம் 6.2.2.1

குழு - I

- தைப்பொங்கல் தொடர்பான பாடல் ஒன்றைப் பாடுக.

குழு - II

- தைப்பொங்கல் தொடர்பான பாடல் ஒன்றிற்கு நடனம் ஆடுக.

குழு - III

- பொங்கல் வாழ்த்துமடல் ஒன்றினைத் தயாரிக்குக அல்லது தைப்பொங்கல் தொடர்பான நிகழ்வுகளை விளக்கும் வகையில் சித்திரம் வரைக.

குழு - IV

- தைப்பொங்கல் விழாவினை விளக்கும் வகையிலான சிறுநாடகம் ஒன்றினை நடித்துக் காட்டுக.

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 1.0 | : | வாழ்க்கையோடு தொடர்புடைய இசையை இரசிப்பார். |
| தேர்ச்சிமட்டம் 1.2 | : | வாழ்க்கைச் சம்பவங்களோடு இசையைத் தொடர்புபடுத்துவார். |
| செயற்பாடு 1.2 | : | வாழ்க்கைச் சம்பவங்களோடு இசையைத் தொடர்புபடுத்தி இரசிப்போம். |
| நேரம் | : | 01மணி 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்) |
| தர உள்ளீடு | : | வாழ்க்கைச் சம்பவங்களைச் சித்திரிக்கும் படங்கள், பாடல்கள், எழுதப்பட்ட அட்டைகள், ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி,செயற்பத்திரம்-1.2.2.1 |

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-

படி 1.2.1 : வாழ்க்கைச் சம்பவங்களோடு தொடர்புடைய பாடல்களை ஆசிரியர் பாடிக்காட்டியோ, ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்தோ மாணவரைச் செவிமடுக்க இடமளிக்குக.

: மேற்படி செவிமடுத்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை நிகழ்த்துக.

* வாழ்க்கைச் சம்பவங்களோடு இசை தொடர்புபடும் சந்தர்ப்பங்களில் பாடப்படும் பாடல்களைக் குறிப்பிடுக.
    - மருத்துவிச்சிப்பாடல்
    - தாலாட்டுப்பாடல்
    - விளையாட்டுப்பாடல்
    - தொழிற்பாடல்
    - நலங்குப்பாடல்
    - ஊஞ்சற்பாடல்
    - ஒப்பாரிப்பாடல்

* மனித வாழ்க்கையில் இசையானது பிறப்பு, முதல் இறப்பு வரை பின்னிப்பிணைந்துள்ளமை பற்றி விளக்குக.

* வாழ்க்கைச் சம்பவங்களைச் சித்திரிக்கும் படங்களையும், பாடல்களையும் காட்சிப்படுத்தி, இசை தொடர்புபட்டிருக்கும் சந்தர்ப்பங்களைக் கூறுக.

(20 நிமிடங்கள்)

படி 1.2.2 : வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைச் சிறிய குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை வழங்குக.

: ஒவ்வொரு குழுவும் செயற்பாட்டில் சரியாக ஈடுபடுகிறார்களா என்பதை உறுதிசெய்து முழுமைப்படுத்துக.

(30 நிமிடங்கள்)

படி 1.2.3 : ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.

: ஒரு குழுவின் சமர்ப்பணத்தின் போது ஏனைய குழுக்கள் தமது கருத்துக்களை முன்வைக்க இடமளிக்குக.

: பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை நிகழ்த்துக.

- மருத்துவிச்சிப்பாடல், தாலாட்டுப்பாடல், விளையாட்டுப்பாடல், தொழிற்பாடல், நலங்குப்பாடல், ஊஞ்சற்பாடல், ஒப்பாரிப்பாடல் போன்றவை, மனித வாழ்க்கைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டுள்ளன.
- இசையானது மனித வாழ்க்கையில் பிறப்பு முதல் இறப்பு வரை பின்னிப்பிணைந்துள்ளது.

(30 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :-

: மனித வாழ்க்கையோடு இசை தொடர்புபட்டிருக்கும் விதத்தைக் கூறுவர்

: வாழ்க்கையின் ஒவ்வொரு பருவங்களிலும் பாடப்படும் பாடல் வகைகளைக் குறிப்பிடுவர்.

**செயற்பத்திரம் 1.2.2.1**

சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை வழங்குக

- மனித வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களில் பாடப்படும் பாடல் வகைகளைக் குறிப்பிடுக.

தேர்ச்சி 1.0 : வாழ்க்கையோடு தொடர்புடைய இசையை இரசிப்பார்.

தேர்ச்சிமட்டம் 1.3 : வாழ்க்கையோடு தொடர்புடைய இசையின் தனித்துவத்தைக் குறிப்பிடுவார்.

செயற்பாடு 1.3 : வாழ்க்கையோடு தொடர்புடைய இசையின் தனித்துவத்தை இனங்கண்டு இரசிப்போம்.

நேரம் : 01மணி 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

தர உள்ளீடு : மனித வாழ்க்கைச் சம்பவங்களைச் சித்திரிக்கும் படங்கள், பாடல்கள், ஒலிப்பதிவுக்கருவி, ஒலிப்பதிவு நாடா, செயற்பத்திரம் 1.3.2.1

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-

படி 1.3.1 : மனித வாழ்க்கைச் சம்பவங்களைச் சித்திரிக்கும் படங்களைக் காட்சிப்படுத்தி, மனித வாழ்க்கையில் பாடப்படும் பாடல்வகைகளை ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்து மாணவரைச் செவிமடுக்க இடமளிக்குக.

: மேற்படி செவிமடுத்தவற்றில் பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடலை நிகழ்த்துக.

* மனித வாழ்க்கையில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பாடப்படும் பாடல் வகைகளைக்குறிப்பிடுக.
    - குழந்தை பிறந்தவுடன் வாழ்த்திப் பாடப்படும் பாடல் - மருத்துவிச்சிப்பாடல்
    - குழந்தையைத் தூங்க வைப்பதற்காகப் பாடப்படும் பாடல் - தாலாட்டுப்பாடல்
    - விளையாடும் போது பாடப்படும் பாடல் - விளையாட்டுப்பாடல்
    - தொழில் செய்யும் போது களைப்புத் தெரியாமல் இருப்பதற்காகப் பாடப்படும் பாடல் - தொழிற்பாடல்
    - திருமணச் சடங்குகளில் பாடப்படும் பாடல் - நலங்குப்பாடல்
    - ஊஞ்சல் ஆடும் போது பாடப்படும் பாடல் - ஊஞ்சற்பாடல்
    - ஒருவர் இறந்தவுடன் பாடப்படும் பாடல் - ஒப்பாரிப்பாடல்
    - இப்பாடல்களின் இசையானது பாடப்படும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான முறையில் அமைந்திருக்கும்.
    - இவற்றின் கருத்தானது, பாடப்படும் சந்தர்ப்பங்களை விளக்கும் வகையில் அமைந்திருக்கும்.
    - இப்பாடல்களின் சொற்பிரயோகமானது மிகவும் எளிமையானதாக இருக்கும்.
    - இவற்றின் தாளமானது பாடப்படும் சந்தர்ப்பங்களுக்கு அமைவாக இருக்கும்.

(20 நிமிடங்கள்)

படி 1.3.2 : வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களை 3 குழுக்களாகப் பிரிக்குக.

: ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பத்திரத்தை வழங்குக.

: சகல குழுவினரும் சரியான முறையில் செயற்பாட்டில் ஈடுபடுகிறார்களா என்பதை உறுதிசெய்து, முழுமைப்படுத்துக.

(30 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :-

: மனித வாழ்க்கைச் சம்பவங்களில் பாடப்படும் பாடல் வகைகளை இனங்கண்டு கூறுவர்.

: இவற்றில் தாம் இரசித்தவற்றைக் குறிப்பிடுவர்.

: தம்மைக் கவர்ந்த பாடல் வரிகளைப் பாடிக் காட்டுவர்

**செயற்பத்திரம் 1.3.2.1**

மருத்துவிச்சிப்பாடல், தாலாட்டுப்பாடல், விளையாட்டுப்பாடல், தொழிற்பாடல், நலங்குப்பாடல், ஊஞ்சற்பாடல், ஒப்பாரிப்பாடல் போன்றவை அடங்கிய ஒலிப்பதிவு நாடாவை ஒலிக்கச் செய்து செவிமடுக்க இடமளிக்குக.

குழு - I

* மருத்துவிச்சிப்பாடல், தாலாட்டுப்பாடல் போன்றவற்றில் நீங்கள் இரசித்தவற்றை பின்வரும் தலைப்புகளில் குறிப்பிடுக.
  - பாடப்படும் சந்தர்ப்பம்
  - இசை
  - கருத்து
  - சொற்பிரயோகம்
  - தாளம்

குழு - II

* விளையாட்டுப்பாடல், தொழிற்பாடல் போன்றவற்றில் நீங்கள் இரசித்தவற்றை பின்வரும் தலைப்புகளில் குறிப்பிடுக.
  - பாடப்படும் சந்தர்ப்பம்
  - இசை
  - கருத்து
  - சொற்பிரயோகம்
  - தாளம்

குழு - III

* நலங்குப்பாடல், ஊஞ்சற்பாடல், ஒப்பாரிப்பாடல் போன்றவற்றில் நீங்கள் இரசித்தவற்றை பின்வரும் தலைப்புகளில் குறிப்பிடுக.
  - பாடப்படும் சந்தர்ப்பம்
  - இசை
  - கருத்து
  - சொற்பிரயோகம்
  - தாளம்

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 3.0 | : | இசை தொடர்பான ஆக்கங்களை வெளிக்கொணர்வார். |
| தேர்ச்சிமட்டம் 3.2 | : | இசைக்குப் பயன்படுத்தக்கூடிய புத்தளிப்புக் கருவிகளை ஆக்குவார். |
| செயற்பாடு 3.2 | : | சல்லாரி, மேளம் ஆகிய புத்தளிப்புக் கருவிகளை ஆக்குவோம். |
| நேரம் | : | 01மணி 20நிமிடங்கள் (02 பாடவேளைகள்) |
| தர உள்ளீடு | : | புத்தளிப்புக்கருவிகளின் படங்கள், மாதிரிகள், செயற்பாட்டுக்காக மாணவர் கொண்டுவரும் பொருட்கள், செயற்பத்திரம் 3.2.2.1 |

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-

படி 3.2.1 : புத்தளிப்புக் கருவிகளின் படங்கள், மாதிரிகளைக் காட்சிப்படுத்துக.

: புத்தளிப்புக் கருவிகள் பற்றி பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

- சூழலில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு உருவாக்கப்படும் இசைக் கருவிகளே புத்தளிப்புக் கருவிகளாகும்.
- புத்தளிப்புக் கருவிகளை ஆக்கக்கூடிய பொருட்கள் (சோடாமூடி, கம்பி, தகரம், புளியங்கொட்டை, சிரட்டை, X-Ray போன்றவை)
- சல்லாரி, மேளம் என்பவற்றிலிருந்து தாளம் தொடர்பான ஒலிகளை எழுப்பமுடியும்.
- புத்தளிப்புக் கருவிகளை ஆக்கக்கூடிய பொருட்களைச் சேகரித்து வரும்படி கூறுக.

(10 நிமிடங்கள்)

படி 3.2.2 : மாணவரை நான்கு குழுக்களாகப் பிரிக்குக.

: ஒவ்வொரு குழுவினரும் தாம் கொண்டு வந்த பொருட்களைக் கொண்டு புத்தளிப்புக் கருவிகளை தயாரிக்க வழிகாட்டுக.

: புத்தளிப்புக் கருவிகளை சரியான முறையில் தயாரிக்கிறார்களா என்பதை ஒவ்வொரு குழுவிலும் உறுதிசெய்க.

(40 நிமிடம்)

படி 3.2.3 : ஒவ்வொரு குழுவும் தாம் தயாரித்த புத்தளிப்புக் கருவியை காட்சிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குக.

: ஒரு குழுவின் புத்தளிப்புக் கருவியை ஏனைய குழுக்கள் பார்வையிட்டு அது தொடர்பான தமது கருத்துக்களை முன்வைக்க இடமளிக்குக.

: மேலும் சிறப்பாக புத்தளிப்புக் கருவிகளை தயாரிக்க முடியுமான சந்தர்ப்பம் இருப்பின் மாணவரை நெறிப்படுத்துக.

: பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடுக.

- மேற்குறிப்பிட்ட சல்லாரி, மேளம் ஆகிய புத்தளிப்புக் கருவிகளை செய்வதற்கு சூழலில் இருந்து கிடைக்கக் கூடிய பொருட்கள் - சோடமூடி, கம்பி, தகரம், புளியங்கொட்டை, சிரட்டை X-Ray Paper போன்றவையாகும்.
- சல்லாரி, மேளம் என்பவற்றிலிருந்து தாளம் தொடர்பான ஒலிகளை எழுப்ப முடியும்.

(30 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :-

: சூழலில் கிடைக்கக்கூடிய பொருட்களைக் கொண்டு புத்தளிப்புக் கருவிகளைத் ஆக்குவர்.

: ஆக்கிய புத்தளிப்புக் கருவிகளைக் காட்சிப்படுத்துவர்.

: புத்தளிப்புக் கருவிகளை ஆக்கும் போது ஒற்றுமையாகவும் உற்சாகத்துடனும் செயற்படுவர்.

## செயற்பத்திரம் 3.2.2.1

சகல குழுவினருக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

- நீங்கள் சேகரித்து வந்த பொருட்களைக் கொண்டு புத்தளிப்புக் கருவியைத் தயாரிக்க.
- சல்லாரி
- மேளம்

தேர்ச்சி 3.0 : இசை தொடர்பான ஆக்கங்களை வெளிக்கொணர்வார்.

தேர்ச்சிமட்டம் 3.3 : புத்தளிப்புக் கருவிகளை இசைப்பார்.

செயற்பாடு 3.3 : தயாரித்த புத்தளிப்புக் கருவிகளை இசைப்போம். (சல்லாரி, மேளம்)

நேரம் : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

தர உள்ளீடு : புத்தளிப்புக் கருவிகள், செயற்பத்திரம் 3.3.2.1

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-

படி 3.3.1 : மாணவர் தயாரித்த புத்தளிப்புக் கருவிகளை இசைத்து அவற்றின் ஒலியை அவதானிக்கச் செய்க.

: அவதானித்தவற்றில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

- சல்லாரி, மேளம் போன்ற புத்தளிப்புக் கருவிகளிலிருந்து தாளம் தொடர்பான ஒலிகளை இசைக்கலாம்.

(05 நிமிடங்கள்)

படி 3.3.2 : மாணவரை நான்கு குழுக்களாகப் பிரிக்குக.

: ஒவ்வொரு குழுவிற்கும் புத்தளிப்புக் கருவிகளை வழங்குக.

: 1ஆம், 2ஆம், 3ஆம் காலங்களுக்கேற்பவும், திஸ்ர, சதுஸ்ர நடை வேறுபாடுகளுக்கேற்பவும் புத்தளிப்புக் கருவிகளை இசைக்கும் முறைகளை விளக்கி, ஒவ்வொரு குழுவும் அதற்கேற்ப இசைத்துப் பயிற்சி செய்ய வழிகாட்டுக.

: ஒவ்வொரு குழுவினரும் சரியான முறையில் பயிற்சி செய்வதை உறுதி செய்க.

(15 நிமிடங்கள்)

படி 3.3.3 : ஒவ்வொரு குழுவும் தாம் பயிற்சி செய்ததை இசைத்துக்காட்டச் சந்தர்ப்பம் வழங்குக.

: ஒரு குழு இசைக்கும் போது, ஏனைய குழுவினர் அதனை அவதானித்து, கருத்துக்களைக் கூற இடமளிக்குக.

: மாணவரின் குறைகளை இனங்கண்டு அவற்றைச் சீர்செய்க.

: பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

- சல்லாரி, மேளம் போன்ற புத்தளிப்புக் கருவிகளிலிருந்து தாளம் தொடர்பான ஒலிகளை இசைக்கலாம்.
- கால வேறுபாடுகளுக்கேற்றவும், நடை வேறுபாடுகளுக்கேற்றவும் இசைக்க முடியும்

(20 நிமிடங்கள்

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :-

- புத்தளிப்புக் கருவிகளை கால வேறுபாடுகளுக்கமையவும், தாள நடை வேறுபாடுகளுக்கமையவும் இசைத்துக் காட்டுவர்.
- ஒற்றுமையாகவும், உற்சாகத்துடனும் புத்தளிப்புக் கருவிகளை இசைப்பர்.

## செயற்பத்திரம் 3.3.2.1

சகல குழுவினருக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

| |
|---|
| உங்களுக்கு வழங்கப்பட்ட புத்தளிப்புக் கருவியை 1ஆம்,2ஆம்,3ஆம் காலங்களுக்கேற்பவும், திஸ்ர,சதுஸ்ர நடை வேறுபாடுகளுக்கேற்பவும் இசைத்துக்காட்டுக. |

தேர்ச்சி 4.0 : இசை உருப்படிகளையும், நாட்டார் பாடல்களையும் சுருதி, இராக, தாளத்துடன் பாடிக்காட்டுவார்.

தேர்ச்சிமட்டம் 4.1 : ஸ்வரஸ்தானங்களை சுருதி சுத்தத்துடன் பாடுவார்.

செயற்பாடு 4.1 : "கண்ணன் புரிந்த லீலை" என்ற சிறுவர் பாடலைப் பாடுவதற்குத்தயாராகுவோம்.

நேரம் : 01 மணி 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

தர உள்ளீடு : சுருதிப்பெட்டி அல்லது ஆர்மோனியம்
ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி,
பாடல் எழுதப்பட்ட அட்டை,செயற்பத்திரம் 4.1.2.3.

கற்றல் கற்பித்தல் செயல் ஒழுங்கு:-

படி 4.1.1. : 'கண்ணன் புரிந்த லீலை' என்னும் சிறுவர் பாடலை ஆசிரியர் பாடிக் காட்டியோ, ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்தோ மாணவர் சிறுவர் பாடலை செவிமடுக்கச் செய்க.

: அச்சிறுவர் பாடலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடுக.

* "கண்ணன் புரிந்த லீலை" என்னும் சிறுவர் பாடலில் கண்ணனின் குறும்புத்தனங்கள் குறிப்பிடப்படுகின்றன.
* பாடலைக் காட்சிப்படுத்தி, அதன் கருத்து விளங்க உச்சரிப்புத் தெளிவுடன் வாசிக்க வழிப்படுத்துக.

(20 நிமிடங்கள்)

படி 4.1.2 : வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைச் சிறிய குழுக்களாகப் பிரித்து செற்பத்திரத்தை வழங்குக.

: மாணவர்கள் செயற்பாட்டில் சரியாக ஈடுபடுகிறார்களா என்பதை உறுதிசெய்து முழுமைப்படுத்துக

(30 நிமிடங்கள்)

படி 4.1.3 : ஒவ்வொரு குழுவும், குழுவாகவும், தனியாகவும் பாடலை உச்சரிப்புத் தெளிவுடன் வாசித்துக்காட்டச்சந்தர்ப்பம் வழங்குக.

: ஒரு குழு வாசிக்கும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளிக்குக.

: பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை நிகழ்த்துக.

* "கண்ணன் புரிந்த லீலை" என்னும் சிறுவர் பாடலில் கண்ண பிரானின் குறும்புத்தனங்களாகிய வெண்ணெய் திருடுதல், கோபியருடன் நடத்தும் குறும்புகள் என்பன குறிப்பிடப்படுகின்றன.

* பாடலை உச்சரிப்புத் தெளிவுடன் முழுமையாக வாசிக்கும் செயற்பாட்டில் ஈடுபடுக.,

(30நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:-

"கண்ணன் புரிந்த லீலை" என்னும் சிறுவர் பாடலில் குறிப்பிடப்படும் கண்ணனின் குறும்புகளைக் கூறுவர்

பாடலை உச்சரிப்புத் தெளிவுடன் வாசிப்பர்.

## செயற்பத்திரம் 4.1.2.3

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தையும் இணைப்பையும் வழங்குக.

* "கண்ணன் புரிந்த லீலை" என்னும் சிறுவர் பாடலில் குறிப்பிடப்படும் கண்ணனின் குறும்புகளைக் கூறுக.

* பாடலை உச்சரிப்புத் தெளிவுடன் முழுமையாக வாசித்துக் காட்டுக.

## சிறுவர் பாடல்
## கண்ணன் புரிந்த லீலை

இராகம் :- காபி　　　　　　　　　　　　　　　　தாளம் :- ஏகம் (திஸ்ர நடை)

### பல்லவி

கண்ணன் புரிந்த லீலை// சொல்லுவேன் கேள்//
வண்ணப் பிருந்தாவனத்தில் // விந்தை அழகுடனே //

### சரணங்கள்

1. வெண்ணெய் திருவாடிவாயில் // மெல்ல விடுவான் //
விரட்டினாலே விரைவில் // ஓட்டம் பிடிப்பான் // - எங்கள் (கண்ணன்)

2. இடுப்பில் குடத்துடனே // இங்கிதமாய் //
நடக்கும் வேளை நடுவே // வந்து குதிப்பான் // - எங்கள் (கண்ணன்)

3. காட்டிடாமல் பட்சணங்கள் // கண்டுபிடிப்பான் //
கள்ளத்தனமாக அதை // உண்டு மகிழ்வான் // - எங்கள் (கண்ணன்)

4. வண்ண வண்ண மலர்களையே // வாஞ்சையுடனே //
எண்ணி எண்ணி இங்கிதமாய் // எறிந்து விடுவான் // - எங்கள் (கண்ணன்)

தேர்ச்சி 4.0 : இசை உருப்படிகளையும், நாட்டார் பாடல்களையும் சுருதி, இராக , தாளத்துடன் பாடிக்காட்டுவார்.

தேர்ச்சிமட்டம் 4.1 : ஸ்வரஸ்தானங்களை சுருதி சுத்தத்துடன் பாடுவார்.

செயற்பாடு 4.1 : "கண்ணன் புரிந்த லீலை" என்ற சிறுவர் பாடலை இராக, தாளத்துடன் பாடுவோம்.

நேரம் : 02 மணித்தியாலங்கள் (03 பாடவேளைகள்)

தர உள்ளீடு : சுருதிப்பெட்டி அல்லது ஆர்மோனியம், ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி, பாடல் எழுதப்பட்ட அட்டை,செயற்பத்திரம் 4.1.2.4

கற்றல் கற்பித்தல் செயல் ஒழுங்கு:-

படி 4.1.1. : 'கண்ணன் புரிந்த லீலை' என்னும் சிறுவர் பாடலை ஆசிரியர் பாடிக் காட்டியோ, ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்தோ மாணவர் பாடலைச் செவிமடுக்க இடமளிக்குக.

: செவிமடுத்த பாடலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடுக.

* "கண்ணன் புரிந்த லீலை" என்னும் பாடல் காபி இராகத்தில், ஏகதாளத்தில் அமைந்துள்ளது.

* பாடலைக் காட்சிப்படுத்தி, பகுதி பகுதியாகப் பாடலை ஆசிரியர் பாட, மாணவர் தொடர்ந்து பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

* ஆசிரியரும், மாணவரும் பாடலை இராக தாளத்துடன் முழுமையாகப் பாடுக.

* மாணவரைக் குழுவாகவும், எழுமாற்றாகத் தெரிவு செய்து தனியாகவும் பாடக் கேட்க.

(30 நிமிடங்கள்)

படி 4.1.2 : வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைச் சிறிய குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை வழங்குக.

: சகல குழுவும் பாடலைச் சரியாகப் பாடிப் பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதி செய்து முழுமைப்படுத்துக.

(45 நிமிடங்கள்

படி 4.1.3 : ஒவ்வொரு குழுவும், குழுவாகவும், தனியாகவும் பாடலைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

: ஒரு குழுபாடும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக் கூற இடமளிக்குக.

: பின்வரும் விடயங்கள் மீள வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடுக.

* "கண்ணன் புரிந்த லீலை" எனும் சிறுவர் பாடல் காபி இராகத்தில், ஏகதாளத்தில், திஸ்ர நடையில் அமைந்துள்ளது.

* பாடலை முழுமையாக இராக, தாளத்துடன் ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து பாடுக.

(45 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:-**

: கண்ணன் புரிந்த லீலை என்னும் பாடல் அமைந்துள்ள இராக, தாளத்தைக் குறிப்பிடுவர்

: பாடலை இராக, தாளத்துடன் பாடுவர்.

: இது போன்ற வேறு சிறுவர்பாடல் வகைகளையும் இனங்கண்டு கூறுவர்.

## செயற்பத்திரம் 4.1.2.4

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

* "கண்ணன் புரிந்த லீலை" என்ற சிறுவர் பாடலை முழுமையாக இராக, தாளத்துடன் பாடிப்பயிற்சி செய்க.
* குறிந்த பாடலை இராக, தாளத்துடன் பாடுக.

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 4.0 | : | இசை உருப்படிகளையும், நாட்டார் பாடல்களையும் சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார். |
| தேர்ச்சி மட்டம் 4.2 | : | உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார். |
| செயற்பாடு 4.2 | : | பாடசாலை கீதத்தைப் பாடுவதற்குத் தயாராகுவோம். |
| நேரம் | : | 01 மணி 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்) |
| தரஉள்ளீடு | : | சுருதிப்பெட்டி அல்லது ஹார்மோனியம்,<br>பாடசாலைக் கீதம் எழுதப்பட்ட அட்டை/கணினியில்<br>வடிவமைக்கப்பட்ட பாடசாலைக் கீதம்,செயற்பத்திரம் 4.2.2.3 |

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:-

படி 4.2.1

: காலைக்கூட்டம், கலைவிழா, பரிசளிப்பு விழா, இல்ல விளையாட்டுப் போட்டி போன்ற பாடசாலை நிகழ்ச்சிகளில் இடம்பெறும் பாடல்கள் பற்றிக் கலந்துரையாடுக.

: பாடசாலைக் கீதத்தை ஆசிரியர் பாடிக்காட்டியோ, ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்தோ மாணவரை செவிமடுக்கச் செய்க.

: செவிமடுத்தவற்றில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

* பாடசாலைக் கீதம் கூறும் பொருள்
* பாடல் இசையின் தன்மை
* தாளம்
* பாடப்படும் சந்தர்ப்பங்கள்
* பாடப்படும் போது பேணும் நிலை
* பாடசாலைக் கீதம் எழுதப்பட்ட அட்டையை அல்லது கணினியில் வடிவமைக்கப்பட்ட பாடசாலைக் கீதத்தைக் காட்சிப்படுத்துக.
* பாடசாலைக் கீதத்தை சரியான முறையில் உச்சரித்துக் கூற நெறிப்படுத்துக.
* குழுவாகவும், தனியாகவும் உச்சரித்துக் கூறக் கேட்க.

20 நிமிடங்கள்

படி 4.2.2

: மாணவரைச் சிறிய குழுக்களாகப் பிரிக்க

: செயற்படிவத்தில் கூறப்பட்ட விடயங்களில் குழுக்களாகப் பயிற்சி பெற வழிகாட்டுக.

: சகல குழுவும் சரியான முறையில் செயற்படுகிறார்கள் என்பதை உறுதிசெய்க.

(30 நிமிடங்கள்)

படி 4.2.3 : ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தில் கேட்கப்பட்ட விடயங்களைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.

: எழுமாற்றாக மாணவர் ஒருவரைத் தெரிவு செய்து பாடலை உச்சரித்துச் சொல்ல இடமளிக்குக.

: ஒவ்வொரு குழுவின் சமர்ப்பணத்தின் போது, ஏனைய குழுக்கள் அதனை அவதானித்து தமது கருத்துக்களைத் தெரிவிக்க இடமளிக்குக.

: மாணவரின் குறைகளை இனங்கண்டு முழுமைப்படுத்துக.

: பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

* பாடசாலைக் கீதத்தில் பாடசாலை வாழ்த்து, வரலாறு, சிறப்பு, ஸ்தாபித்தோர் விபரம், முன்னேற்றத்திற்கு உதவியோர் விபரம் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

* பாடசாலை கீதத்தின் இசையின் தன்மையானது மிகவும் கவர்ச்சிகரமானதாகவும், மனத்திற்கு இனிமை தருவதாகவும் அமைந்திருக்கும்.

* தாளம் விறுவிறுப்பான நடையில் இருக்கும்.

* பாடசாலை நிகழ்ச்சிகளான காலைக் கூட்டம், கலைவிழா, பரிசளிப்பு விழா, இல்ல விளையாட்டுப் போட்டி போன்றவற்றில் பாடப்படுகிறது.

* பாடசாலைக் கொடி ஏற்றப்படும் போதும் இப்பாடல் பாடப்படும்.

* பாடசாலைக் கீதம் பாடும் போது கைகளை நேராக வைத்து, நிமிர்ந்து நின்று, மதிப்பளிக்கும் நிலையைப் பேண வேண்டும்.

(30 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

* பாடசாலைக் கீதம் கூறும் கருத்தை விளக்குவர்
* பாடசாலைக் கீதம் பாடப்படும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுவர்.
* பாடலைச் சரியான முறையில் உச்சரிப்பர்.

## செயற்பத்திரம் 4.2.2.3

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

* பாடசாலைக் கீதம் பாடப்படும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.
* பாடசாலை கீதத்தின் பொருளையும், பொருள் தொடர்பான சில விளக்கங்களையும் கூறுக.
* பாடசாலைக் கீதத்தை உச்சரித்துக் கூறுக.

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 4.0 | : | இசை உருப்படிகளையும், நாட்டார் பாடல்களையும் சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார். |
| தேர்ச்சி மட்டம் 4.2 | : | உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார் |
| செயற்பாடு 4.2 | : | பாடசாலைக் கீதத்தை இராக, தாளத்துடன் பாடுவோம். |
| நேரம் | : | 02 மணித்தியாலயங்கள் (03 பாடவேளைகள்) |
| தரஉள்ளீடு | : | சுருதிப்பெட்டி அல்லது ஹார்மோனியம்,<br>ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி,<br>பாடசாலைக் கீதம் எழுதப்பட்ட அட்டை/கணினியில்<br>வடிவமைக்கப்பட்ட பாடல், செயற்பத்திரம் 4.2.2.4 |

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:-

படி 4.2.1

: பாடசாலைக் கீதத்தைப் பற்றி ஏற்கனவே அறிந்த விடயங்களை மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

: பாடசாலைக் கீதத்தை ஆசிரியர் பாடிக்காட்டியோ, ஒளிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்தோ மாணவரை செவிமடுக்கச் செய்க.

* செவிமடுத்தவற்றில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

- பாடசாலைக் கீதத்தின் இசையின் தன்மை
- தாளம்
- பாடசாலைக் கீதம் எழுதப்பட்ட அட்டையை அல்லது கணினி வடிவமைப்பைக் காட்சிப்படுத்துக.
- ஆசிரியர் பாடசாலைக் கீதத்தை முழுமையாகப் பாடிக் காட்டி மாணவரைச் செவிமடுக்கச் செய்க.
- ஆசிரியர் பாடலைப் பகுதி பகுதியாகக் கற்பிக்க மாணவர் தொடர்ந்து பாடுக.
- ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து தாளத்துடன் பாடலை முழுமையாகப் பாடுக.
- மாணவரைச் சிறிய குழுக்களாகவும் ,எழுமாற்றாகத் தெரிவு செய்து தனித்தனியாகவும் பாடுவிக்க.

(30 நிமிடங்கள்)

படி 4.2.2.

: மாணவரைச் சிறிய குழுக்களாகப் பிரிக்க

: ஒவ்வொரு குழுவும் பாடசாலைக் கீதத்தை பாடிப் பழக இடமளிக்குக.

: சகல குழுவும் பாடலைச் சரியாகப் பாடிப்பயிற்சி பெறுகிறார்களா என்பதை உறுதி செய்க.

(45 நிமிடங்கள்)

படி 4.2.3 : ஒவ்வொரு குழுவும் பாடசாலைக் கீதத்தைப் பாட சந்தர்ப்பம் வழங்குக.

: ஒரு குழு பாடும் போது, ஏனைய குழுக்கள் அதனை அவதானித்து தமது கருத்துக்களைத் தெரிவிக்க இடமளிக்குக.

: சில மாணவரை எழுமாற்றாகத் தெரிவு செய்து தனியாகப் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

: மாணவரின் குறை களை இனங்கண்டு முழுமைப்படுத்துக.

: ஆசிரியரும் மாணவரும் பாடலை முழுமையாகப் பாடுக.

: பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

- பாடசாலைக் கீதத்தின் இசையின் தன்மையானது மிகவும் கவர்ச்சிகரமானதாக இருக்கும்.
- தாளம் விறுவிறுப்பான நடையில் அமைந்திருக்கும்.
- பாடசாலைக் கீதமானது பாடசாலைச் சூழலின் கலாசாரத்தையும் பண்பாட்டையும் வெளிப்படுத்தும்.

(45 நிமிடங்கள்)

கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்:

- பாடசாலை கீதத்தை இராக, தாளத்துடன் பாடுவர்
- பாடசாலைக் கீதத்தைப் பாடும் போது பொருத்தமான முறை அனுசரிக்கப்படல் வேண்டும் என்னும் மனப்பாங்கை வெளிப்படுத்துவர்.
- பாடசாலையில் பற்றுணர்வைப் பேண வேண்டும் என்ற மனப்பாங்கை ஏற்றுக்கொள்வர்

## செயற்பத்திரம் 4.2.2.4

சகல குழுவினருக்கும் இச் செயற்பத்திரத்தை வழங்குக.

* பாடசாலை கீதத்தை இராக, தாளத்துடன் பாடிப் பயிற்சி செய்க.

* குறித்த பாடலை இராக, தாளத்துடன் பாடுக.

தேர்ச்சி 4.0 : இசை உருப்படிகளையும், நாட்டார் பாடல்களையும் சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார்.

தேர்ச்சி மட்டம் 4.2 : உருப்படிகளை இராக , தாளத்துடன் பாடுவார்.

செயற்பாடு 4.2 : "சொற்றுணை வேதியன்" என்னும் தேவாரத்தைப் பாடுவதற்கு தயாராகுவோம்.

நேரம் : 01 மணி 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

தர உள்ளீடு : சுருதிப்பெட்டி அல்லது ஹார்மோனியம்,ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி, தேவாரம் எழுதப்பட்ட அட்டை, செயற்பத்திரம் 4.2.2.5

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

படி 4.2.1 : கோயில்களில் பாடப்படும் பாடல்கள் தொடர்பாகக் கலந்துரையாடி, தேவாரத்தை அறிமுகப்படுத்துக.

: தேவாரத்தை ஆசிரியர் பாடிக்காட்டியோ ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்தோ மாணவரை செவிமடுக்கச் செய்க.

: செவிமடுத்தவற்றில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

- தேவாரத்தின் பண், தாளம்.
- பாடப்படும் சந்தர்ப்பங்கள்.
- அருளியவர்.

- தேவாரம் எழுதப்படட அட்டையைக் காட்சிப்படுத்துக.

- தேவாரத்தை சரியான முறையில் உச்சரித்துக் கூற நெறிப்படுத்துக.

- குழுவாகவும் எழுமாற்றாகத் தெரிவுசெய்து தனியாகவும் உச்சரித்துக் கூறக் கேட்க.

(20 நிமிடங்கள்)

படி 4.2.2 : மாணவரைச் சிறிய குழுக்களாகப் பிரிக்க

: செயற்படிவத்தில் கூறப்பட்ட விடயங்களில் குழுக்களாகப் பயிற்சி பெற வழிகாட்டுக.

: சகல குழுவும் சரியான முறையில் செயற்படுகிறார்கள் என்பதை உறுதி செய்க.

(30 நிமிடங்கள்)

படி 4.2.3 : ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தில் கேட்கப்பட்ட விடயங்களைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.

: ஒரு குழுவின் சமர்ப்பணத்தின் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிக்க இடமளிக்குக.

: சில மாணவரை எழுமாற்றாகத் தெரிவு செய்து தேவாரத்தை உச்சரித்துச் சொல்ல இடமளிக்குக.

: மாணவரின் குறைகளை இனங்கண்டு முழுமைப்படுத்துக.

: பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

- சொற்றுணை வேதியன் எனும் தேவாரத்தின்
  பண் - காந்தார பஞ்சமம்
  இராகம் - கேதாரகௌளை
  தாளம் - ஆதி
- இத்தேவாரத்தை அருளியவர் திருநாவுக்கரசு நாயனார்.
- தேவாரங்கள் பொதுவாகக் கோயில்களிலும், வழிபாட்டு நேரங்களிலும் பாடப்படுகின்றன.

(30 நிமிடங்கள்)

## செயற்பத்திரம் 4.2.2.5

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தையும் இணைப்பையும் வழங்குக

* தேவாரம் பாடப்படும் சந்தர்ப்பங்களைக் கூறுக
* சொற்றுணை வேதியன் எனும் தேவாரத்தை உச்சரித்துக் கூறுக.

# தேவாரம்

## சொற்றுணை வேதியன்

பண் :காந்தார பஞ்சமம்
இராகம் :கேதாரகௌளை

தாளம் : ஆதி
பாடி அருளியவர் : திருநாவுக்கரசு நாயனார்.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழ
கற்றுணை பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே

; பாஸ்ஸா நீ ஸ்ா நிதபா / ; பபாஸ்ஸா / பாதபமகரீ //
- சொற்றுணைவே..... தியன் - சோ-தி- வா- - னவன்

; ரிபாமகா ரீரிகரிஸஸா/ ; ரிமா பபா / மாபஸ்நித பா //
- பொற்றணை திருந்தடி - பொருந்தக் கை- - தொ – ழ

; பபாஸ்ஸா ரீரீரீ / ; ரிப்ாம்கா / ரீரிக் ரி ஸ்ஸா //
- கற்றுணை பூட்டியோர் - கடலில் பாய்ச்-சினும்

; பாரிஸ் ஸ்ா நீநிஸ்நிதபா / ; பபாஸ்ஸா / பாதபகமரீ //
- நற்றுணை யா வ-து - நமச் -சி வா - -ய- வே //

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 4.0 | : | இசை உருப்படிகளையும், நாட்டார் பாடல்களையும் சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார் |
| தேர்ச்சி மட்டம் 4.2 | : | உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார். |
| செயற்பாடு 4.2 | : | "சொற்றுணை வேதியன்" என்னும் தேவாரத்தைப் பண்முறைக்கமையப் பாடுவோம். |
| நேரம் | : | 01 மணி 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்) |
| தர உள்ளீடு | : | சுருதிப்பெட்டி அல்லது ஹார்மோனியம்,ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி, தேவாரம் எழுதப்பட்ட அட்டை, செயற்பத்திரம் 4.2.2.6 |

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

படி 4.2.1 : தேவாரம் பற்றி ஏற்கனவே கற்ற விடயங்களை மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

: தேவாரத்தை ஆசிரியர் முழுமையாகப் பாடிக்காட்டியோ, ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்தோ மாணவரைச் செவிமடுக்கச் செய்க.

: செவிமடுத்தவற்றில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துயைாடுக.

* தேவாரத்தின் பண் - காந்தார பஞ்சமம்
  இராகம் - கேதாரகௌளை
  தாளம் - ஆதி
  அருளியவர் - திருநாவுக்கரசு நாயனார்

* தேவாரம் எழுதப்பட்ட அட்டையை காட்சிப்படுத்துக.
* ஆசிரியர் தேவாரத்தைப் பண்முறைக்கமைய பகுதிபகுதியாகக் கற்பிக்க மாணவர் தொடர்ந்து பாடுக.
* ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து தாளத்துடன் தேவாரத்தை முழுமையாகப் பாடுக.
* மாணவரைச் சிறிய குழுக்களாகவும், எழுமாற்றாகத் தெரிவு செய்து தனித்தனியாகவும் பாடுவிக்க.

(20 நிமிடங்கள்)

படி 4.2.2 : மாணவரைச் சிறிய குழுக்களாகப் பிரிக்க.
: ஒவ்வொரு குழுவும் தேவாரத்தைப் பாடிப் பழக இடமளிக்குக.
. சகல குழுவும் தேவாரத்தைச் சரியாகப் பாடிப் பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதி செய்க.

(30 நிமிடங்கள்)

படி 4.2.3

: ஒவ்வொரு குழுவும், தேவாரத்தைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

: ஒரு குழு பாடும் போது, ஏனைய குழுக்கள் அதனை அவதானித்து தமது கருத்துக்களைத் தெரிவிக்க இடமளிக்குக.

: சில மாணவரை எழுமாற்றாகத் தெரிவு செய்து தனியாகப் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

: மாணவரின் குறை களை இனங்கண்டு முழுமைப்படுத்துக.

பின்வரும் விடயங்களை மீளவும் வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

- சொற்றுணை வேதியன் எனும் தேவாரத்தின் பண் காந்தார பஞ்சமம் ஆகும்.
- இதன் இராகம் கேதாரகௌளை
- ஆதி தாளத்தில் அமைக்கப்பட்டுள்ளது.
- இத்தேவாரத்தை அருளியவர் திருநாவுக்கரசுநாயனார் ஆவார்.
- தேவாரத்தை ஆசிரியரும், மாணவரும் முழுமையாகப் பாடுக.

(30 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

* சொற்றுணை வேதியன் எனும் தேவாரம் அமைந்த பண், இராகம், தாளம் என்பவற்றைக் குறிப்பிடுவர்.
* இத்தேவாரத்தை அருளியவரின் பெயரைக் கூறுவர்.
* தேவாரத்தைப் பண்முறைக்கமையப் பாடுவர்.

## செயற்பத்திரம் 4.2.2.6

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக

* சொற்றுணை வேதியன் எனும் தேவாரத்தை பண் முறைக்கமையப் பாடுக.

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 5.0 | : | கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார். |
| தேர்ச்சி மட்டம் 5.1 | : | இசையின் அடிப்படை அம்சங்களை விளக்குவார். |
| செயற்பாடு 5.1 | : | கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களில் "ஸ்வரம்" பற்றி அறிந்து கொள்வோம். |
| நேரம் | : | 02 மணி 20 நிமிடங்கள் (03 பாடவேளைகள்) |
| தரஉள்ளீடு | : | சப்தஸ்வர விளக்க அட்டை,<br>ஹார்மோனியம் சுருதிப்பெட்டி,<br>வயலின், |

**செயற்பத்திரம் 5.1.2.4**

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

* சப்தஸ்வர விளக்க அட்டையினை காட்சிப்படுத்தியும், சப்தஸ்வரங்களைப் பாடிக்காட்டியும், வாத்தியத்தில் அதனை வாசித்துக்காட்டியும் மாணவரை அவதானித்து செவிமடுக்கச் செய்க.

* அவதானித்து செவிமடுத்தவற்றில் பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்க.

- ஸ்வரம் என்னும் பதத்தின் வரைவிலக்கணம்.
- ஸப்த ஸ்வரங்கள்.
- ஸப்த ஸ்வரங்களின் பெயர்கள்.

(30 நிமிடங்கள்)

| | | |
|---|---|---|
| படி 5.1.2 | : | வகுப்பிலுள்ள மாணவர்களுக்குத் தனித்தனியாகச் செயற்பத்திரத்தினை வழங்குக. |
| | : | ஒவ்வொருவரும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கும் வகையில் ஆயத்தம் செய்விக்க |
| | : | ஒவ்வொருவரினதும் செயற்பாட்டினை உறுதிப்படுத்துக. |

(45 நிமிடங்கள்)

படி 5.1.3 : ஒவ்வொருவரும் தமது பெறுகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குக.

: ஒருவர் சமர்ப்பிக்கும் போது ஏனையவர்களும் அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளிக்குக.

: பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

: கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்துக.

- இயற்கையாகவே ரஞ்சனையைக் கொடுக்கும் த்வனி ஸ்வரம் ஆகும். இதனைத் தமிழிசையில் கோவை என்று அழைப்பர். ஸ்வரத்திற்குரிய வேறு பெயர் தாது ஆகும்.

- சங்கீதத்திற்கு ஆதாரமாயுள்ள ஸ்வரங்கள் ஏழு, இவையே ஸப்தஸ்வரங்கள் ஆகும். இதனை ஸப்தகம் என்றும் அழைப்பர்.
- ஸப்த ஸ்வரங்களின் பெயர்களாவன.

ஸ - ஸட்ஜம்
ரி - ரிஷபம்
க - காந்தாரம்
ம - மத்திமம்
ப - பஞ்சமம்
த - தைவதம்
நி - நிஷாதம்

- இவ் ஏழு ஸ்வரங்களும் முறையே தொனியில் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது என்பதை வலியுறுத்துக.

(45 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

* ஏழு ஸ்வரங்களினதும் பெயர்களைக் கூறுவர்
* ஸ்வரம் என்றால் என்ன என்பதனை விளக்குவர்
* ஏழு ஸ்வரங்களும் முறையே தொனியில் கூடிச் செல்வதனை ஏற்றுக் கொள்வர்.

## செயற்பத்திரம் 5.1.2.4

* ஒவ்வொரு மாணவருக்கும் இச்செயற்பத்திரத்தினை வழங்குக.

கீறிட்ட இடங்களை நிரப்புக

01. ஸ்வரத்தைத் தமிழிசையில் ..................... என அழைப்பர்
02. ஸப்த ஸ்வரங்களின் எண்ணிக்கை ..................... ஆகும்.
03. "ம"என்ற ஸ்வரத்தின் பெயர் .......................ஆகும்.
04. நிஷாதம் என்ற பெயரைக் குறிக்கும் ஸ்வரம் ........... ஆகும்.
05. ஸ்வரத்திற்குரிய வேறு பெயர் .............. ஆகும்.

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 5.0 | : | கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார். |
| தேர்ச்சி மட்டம் 5.1 | : | இசையின் அடிப்படை அம்சங்களை விளக்குவார். |
| செயற்பாடு 5.1 | : | கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களில் ஆரோகணம், அவரோகணம் பற்றி அறிந்துகொள்வோம். |
| நேரம் | : | 02 மணித்தியாலங்கள் (03 பாடவேளைகள்) |
| தரஉள்ளீடு | : | சுருதிப்பெட்டி/ஹார்மோனியம், |
| | : | ஆரோகண அவரோகண வரைபடம், செயற்பத்திரம் 5.1.2.5 |

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

படி 5.1.1 : ஆசிரியர் மாயாமாளவகௌளை ராகத்தின் ஆரோகண அவரோகணத்தைப் பாடிக்காட்டி/ஹார்மோனியத்தில் அதன் ஸ்வரஸ்தானங்களை வாசித்துக்காட்டி மாணவர்களை நன்கு செவிமடுக்கச் செய்க.

: மாணவர் செவிமடுத்தவற்றில் பின்வரும் விடயங்கள் தொடர்பாக ஆரோகண, அவரோகண வரைபடத்தைக் காட்சிப்படுத்திக் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

- ஆரோகண கிரமம்
- அவரோகண கிரமம்
- ஆரோஹண கிரமத்தில் வரும் ஸ்வரங்கள்
- அவரோஹண கிரமத்தில் வரும் ஸ்வரங்கள்
- தமிழிசைப் பெயர்கள்.

(30 நிமிடங்கள்)

படி 5.1.2 : மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரங்களை வழங்குக.

: ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கும் வகையில் ஆயத்தம் செய்விக்க.

: ஒவ்வொரு குழுவினதும் செயற்பாட்டினை உறுதிப்படுத்துக.

(45 நிமிடங்கள்)

படி 5.1.3 : ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.

: ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளை சமர்ப்பிக்கும் போது ஏனைய மாணவர்களும் அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளிக்குக.

: மாணவர்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்துக.

* ஆரோஹண ஸ்வரங்கள் சுருதியில் முறையே கூடிக் கொண்டு செல்வதையும் அவரோஹண ஸ்வரங்கள் முறையே சுருதியில் குறைந்து செல்வதையும் ஆரோகண அவரோகணத்தைப் பாடிக் காட்டி விளக்குக.
* ஆரோஹண அவரோஹணங்களை வரைபடம் மூலம் விளக்குக.
* செயன்முறையில் கற்ற பாடல் அமைந்துள்ள இராகத்தின் ஆரோகண அவரோஹணங்களை உதாரணம் காட்டி விளக்குக.
* தமிழிசையில் ஆரோசை-அமரோசை என அழைக்கப்படுவதைக் குறிப்பிடுக.

(45 நிமிடங்கள்)

கணிப்பீட்டு/மதிப்பீட்டு நியதிகள் : சுருதியில் ஏழு ஸ்வரங்களும் முறையே கூடிச் செல்வதை ஆரோஹணம் என்றும் சுருதியில் ஏழு ஸ்வரங்களும் முறையே குறைந்து வருவதை அவரோஹணம் என்றும் குறிப்பிடுவர்.

: ஆரோஹண அவரோஹணங்களின் தமிழிசைப் பெயர்களை கூறுவர்.

: இராகங்களின் ஆரோஹண, அவரோஹணங்களை இனங்காண்பர்.

**செயற்பத்திரம் 5.1.2.5.**

இரு குழுவினருக்கும் இச் செயற்பத்திரத்தை வழங்குக.

* ஆரோஹண கிரமத்தில் வரும் ஸ்வரங்களை எழுதுக.
* அவரோகண கிரமத்தில் வரும் ஸ்வரங்களை எழுதுக.
* ஆரோகண அவரோகணத்திற்குரிய தமிழிசைப் பெயர்களைக் குறிப்பிடுக.
* பின்வரும் ஸ்வரத் தொகுதிகளை ஆரோகணம்,அவரோகணம் எனும் தலைப்பில் வகைப்படுத்துக

1. ரிகமப
2. மபதநி
3. நிதபம
4. பமகரி
5. கமபத
6. ஸ்நிதப
7. மகரிஸ
8. ஸரிகம
9. தபமக
10. பதநிஸ்

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 6.0 | : | இசையை அடிப்படையாக்க் கொண்டு சமூக, கலாசாரப் பண்புகளை வெளிப்படுத்துவார். |
| தேர்ச்சி மட்டம் 6.1 | : | மனித வாழ்க்கையில் பிறப்பு முதல் இறப்பு வரை இசை பின்னிப் பிணைந்துள்ளமை பற்றி விளக்குவார். |

| | | |
|---|---|---|
| செயற்பாடு 6.1 | : | சங்கீதக் கலையின் ஆரம்பம் பற்றி அறிந்து கொள்வோம். |
| நேரம் | : | 01 மணி 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்) |
| தர உள்ளீடு | : | இனிமையான ஓசைகள் அடங்கிய ஒலிநாடா,<br>உ+ம் : (பறவைகளின் ஓசை-குயில் ஓசை, குழல் ஓசை, மணி ஓசை, வாத்தியங்களின் ஓசை – நாதஸ்வர ஓசை.........),<br>செயற்பத்திரம் 6.1.2.1 |

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:

படி 6.1.1 : இனிமையான ஓசைகள் அடங்கிய ஒலி நாடாவை ஒலிப்பதிவுக் கருவி மூலம் ஒலிக்கச் செய்து மாணவரைச் செவிமடுக்கச் செய்வதன் மூலம் அவ்வொலிகளை இனங்காண வழிப்படுத்துக.

: ஒலிகளை அடிப்படையாகக் கொண்டே இசைக்கலை ஆரம்பமானது என்ற கருத்தினை முன்வைத்துக் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்க.

: இக்கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை வலியுறுத்துக.

* பறவைகள், மிருகங்களின் ஓசைகள் மனிதனுக்கு முன்னோடியாக இருந்தமை.
* ஆதி மனிதன் ஓசைகளின் மூலம் உணர்வுகளை வெளிப்படுத்தியமை.
* இனிமையான ஓசைகள் எல்லாம் இசை ஆனமை.
* காதிற்கு இனிமையைத்தரும் த்வனிகளைப் பற்றிய கலை சங்கீதம் ஆகும்.
* வேதத்திலிருந்தே சுத்த இசை ஆரம்பமானது.
* கீதம், வாத்யம், நிருத்தியம் இம் மூன்றும் சேர்ந்தது சங்கீதம் எனப்பட்டது.
* பிற்காலத்தில் நிருத்தியம் தனியாக வளர்ச்சியடைந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

(20 நிமிடங்கள்)

படி 6.1.2 : மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரங்களை வழங்குக.

: ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கும் வகையில் ஆயத்தம் செய்விக்க.

: ஒவ்வொரு குழுவினதும் செயற்பாட்டினை உறுதிப்படுத்துக.

(30 நிமிடங்கள்)

படி 6.1.3 : ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குக.

: ஒரு குழு சமர்ப்பிக்கும் பொழுது மற்றைய குழுவும் அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளிக்குக.

: குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

: கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்துக.

: • பறவை, மிருகங்களின் ஓசைகள் மனிதனுக்கு முன்னோடியாக இருந்தமை.

: • மொழிமூலம் உணர்ச்சிகளை வெளிப்படுத்த முடியாத காலத்தில் ஆதி மனிதன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியமை.

: • ஆரவாரித்தும், துன்பத்தின் போது ஓலமிட்டும், பயத்தை வெளிப்படுத்த இரைந்தும் தனது உணர்ச்சிகளை வெளிப்படுத்தினான்

: • இனிமையான ஓசையிலிருந்து பிறந்தவை எல்லாம் இசை ஆகியமை.

: • காதிற்கு இனிமையைத் தரும் தொனிகளைப் பற்றிய கலை சங்கீதம் ஆகும்.

: • வேதம் இசைக்கப்பட்டே சாம கானத்தில் நிஸரி என்ற மூன்று ஸ்வரங்கள் இசைக்கப்பட்டன. இதுவே சுத்த இசையின் ஆரம்பம் ஆகும்.

: • இதனை அடிப்படையாகக் கொண்டே ஏழு ஸ்வரங்கள் பிறந்தமை.

: • கீதம், வாத்தியம், நிருத்தியம் மூன்றும் சங்கீதம் எனப்பட்டது. பின் நிருத்தியக்கலை தனியாகவும் கீதம், வாத்தியம் சேர்ந்தது சங்கீதம் எனத் தனியாகவும் இரு பெரும் கலைகளாக வளர்ச்சியடைந்தமை.

: • நாகரீகம் வளரவளர சங்கீதக்கலைகள் உட்பட பல கலைகளும் வளர்ந்தமை.

(30 நிமிடம்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

* சங்கீதக் கலையின் ஆரம்பம் பற்றிக் குறிப்பிடுவர்.
* இயற்கையில் கேட்கப்படும் இனிமையான ஒலிகளை அவதானித்துக் கேட்கத் தூண்டப்படுவர்.

## செயற்பத்திரம் 6.1.2.1

குழு I

| |
|---|
| வெவ்வேறு சந்தர்ப்பங்களையும் அதற்கமைய வெளிப்படுத்தப்படும் உணர்வுகளையும் குறிப்பிட்டு அதனை அறிக்கைப்படுத்துக. |
| உ+ம் : பாம்பைக் கண்டால் - பயம்<br>பயத்தின்நிமித்தம் - ஐயோ எனக்கத்துதல். |
| (குறிப்பு - இதனைப் போன்று ஏனைய உணர்வுகளையும் கலந்துரையாடி அறிக்கைப்படுத்துக) |

குழு II

| |
|---|
| சங்கீதக்கலையின் ஆரம்பம் பற்றி 10 வசனங்கள் எழுதுக. |

தேர்ச்சி 6.0 : தமிழ் மக்களின் சமூக, கலாசார, பாரம்பரிய பண்புகளை வெளிப்படுத்துவார்.

தேர்ச்சி மட்டம் 6.2 : சமய கலாசார நிகழ்ச்சிகள் தொடர்பான கலை அம்சங்களை வெளிக் கொணர்வார்.

செயற்பாடு 6.2 : வெசாக், ரம்ழான் தொடர்பான இசை, நடனம், சித்திரம், நாடகம் பற்றி அறிந்து கொள்வோம்.

நேரம் : 01 மணி 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

தரஉள்ளீடு : வெசாக் பக்திக் கீதங்கள், இஸ்லாமியக் கீதங்கள், வெசாக், ரம்ழான் பண்டிகைகளை விளக்கும் படங்கள், மாதிரி வாழ்த்து மடல்கள், டிமைகடதாசி, நிறப்பேனாக்கள், ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி,செயற்பத்திரம் 6.2.2.2

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:

படி 6.2.1 : வெசாக், ரம்ழான் தொடர்பான பக்திக் கீதங்களை ஆசிரியர் பாடிக்காட்டியோ, ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்தோ மாணவர் வெசாக், ரம்ழான் என்பவற்றை இனங்காண வழிகாட்டுக.

: சமய கலாசார நிகழ்ச்சிகளான வெசாக், ரம்ழான் பண்டிகைகள் பற்றி பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை நிகழ்த்துக.

- வெசாக் பண்டிகையானது பௌத்த மதத்தவர்களால் கொண்டாடப்படுகிறது.
- வெசாக் தொடர்பான படங்களைக் காட்சிப்படுத்தி இப்பண்டிகையின் பிரதான நிகழ்வுகளைக் குறிப்பிடுக.
- வெசாக் பந்தல்கள் அமைத்து, புத்தரின் போதனைகளைப் பரப்புதல்.
  - வெசாக் கூடு தயாரித்து, தொங்க விடுதல்.
  - வெசாக் விளக்குகள் அமைத்தல்.
  - வெசாக் பக்திக் கீதங்கள் பாடுதல்.
  - அன்னதானம் வழங்குதல்.
- மாதிரி வாழ்த்துமடல்களைக் காட்டி, வெசாக் வாழ்த்துமடலில் இடம்பெறக் கூடிய விடயங்களைக் கூறுக.
- ரம்ழான் பண்டிகையானது இஸ்லாமிய மதத்தவர்களால் கொண்டாடப்படுகிறது.
- ரம்ழான் பண்டிகை தொடர்பான படங்களைக் காட்சிப்படுத்தி, இதன் பிரதான நிகழ்வுகளைக் குறிப்பிடுக.

  - வருடத்திற்கு ஒருமுறை நோன்பு நோற்றல்
  - நோன்பு நோற்றலுடன் தொடர்பான சம்பிரதாய தர்மங்கள்
  - விசேட சமய ஆராதனை/தொழுகை
  - புதுப்பிறை காணல்
  - பகிர்ந்துண்ணல்
- மாதிரி வாழ்த்துமடல்களைக் காட்டி, ரம்ழான் வாழ்த்துமடலில் இடம்பெறக் கூடிய விடயங்களைக் கூறுக.

(20 நிமிடங்கள்)

படி 6.2.2 : மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரிக்குக

: ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பத்திரங்களை வழங்குக.

: மாணவர்கள் செயற்பாட்டில சரியாக ஈடுபடுகிறார்களா என்பதை உறுதிசெய்து முழுமைப்படுத்துக.

(30 நிமிடங்கள்)

படி 6.2.3 : ஒவ்வொரு குழுவும், தத்தமது பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.

: ஒரு குழுவின் சமர்ப்பணம் தொடர்பாக ஏனைய குழுக்கள் தமது கருத்துக்களை முன்வைக்க இடமளிக்குக.

: பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை நிகழ்த்துக.

* வெசாக் பண்டிகை பௌத்த மதத்தவர்களால் கொண்டாடப்படுகிறது.
* வெசாக் பந்தல்கள் அமைத்தல், வெசாக் கூடு தயாரித்தல், வெசாக் விளக்குகள் அமைத்தல், பக்திக்கீதங்கள் பாடுதல், அன்னதானம் வழங்குதல் போன்றவை வெசாக் பண்டிகையின் முக்கிய நிகழ்வுகளாகும்.
* ரம்ழான் பண்டிகையானது இஸ்லாமிய மதத்தவர்களால் கொண்டாடப்படுகிறது.
* நோன்பு நோற்றல், நோன்பு தொடர்பான சம்பிரதாய தர்மங்களைக் கடைப்பிடித்தல், விசேட தொழுகைகள், சமய ஆராதனைகள், புதுப்பிறை காணல், பகிர்ந்துண்ணல் போன்றவை ரம்ழான் பண்டிகையின் பிரதான நிகழ்வுகளாகும்.

(30 நிமிடங்கள்)

கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்

: வெசாக், ரம்ழான் பண்டிகைகளின் முக்கிய நிகழ்வுகளைக் குறிப்பிடுவர்.

: இப்பண்டிகைகள் எம்மதத்தவர்களால் கொண்டாடப்படுகிறது என்பதைக் கூறுவர்.

: வாழ்த்து மடல்களைத் தயாரிப்பர்.

## செயற்பத்திரம் 6.2.2.2

குழு I

| |
|---|
| * வெசாக் பண்டிகை பற்றி 10 வசனங்கள் எழுதுக. |

குழு II

| |
|---|
| * ரம்ழான் பண்டிகை பற்றி 10 வசனங்கள் எழுதுக. |

குழு III

| |
|---|
| * வெசாக் வாழ்த்துமடல் ஒன்றைத் தயாரிக்குக<br>அல்லது<br>* வெசாக் தொடர்பான நிகழ்வுகளை விளக்கும் வகையில் சித்திரம் வரைக |

குழு IV

| |
|---|
| * ரம்ழான் வாழ்த்து மடல் ஒன்றைத் தயாரிக்குக<br>அல்லது<br>* ரம்ழான் தொடர்பான நிகழ்வுகளை விளக்கும் வகையில் சித்திரம் வரைக. |

தேர்ச்சி 2.0 : இசை நிகழ்ச்சிகளிலும், கலாசார நிகழ்ச்சிகளிலும் இரசித்தவற்றை வெளிப்படுத்துவார்.

தேர்ச்சி மட்டம் 2.1 : வெவ்வேறு இசை நிகழ்ச்சிகளையும், கலாசார நிகழ்ச்சிகளையும் இனங்கண்டு அவற்றின் தனித்துவமான அம்சங்களைக் குறிப்பிடுவார்.

செயற்பாடு 2.1 : வெகுசனத் தொடர்பு ஊடகங்களின் மூலம் காட்டப்படும் சிறுவர் அழகியற்கலை ஆக்கங்களையும் அவற்றின் தனித்துவமான அம்சங்களையும் இரசிப்போம்.

நேரம் : 01 மணி 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

தரஉள்ளீடு : ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக்கருவி,ஒளிப்பதிவு நாடா, ஒளிப்பதிவுக்கருவி, தொலைக்காட்சிப் பெட்டி, செயற்பத்திரம் 2.1.2.1

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-

படி 2.1.1 : சிறுவர் அழகியற்கலை ஆக்கங்களான இசை, நடனம், நாடகம், வில்லுப்பாட்டு போன்றவற்றை நேரடியாகப் பார்வையிடவோ, அல்லது ஒளிப்பதிவுக் கருவியில் பார்வையிடவோ சந்தர்ப்பம் வழங்குக.

: மாணவர் அவதானித்தவற்றில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

- இசை
- தாளம்
- வாத்தியப் பயன்பாடு
- அபிநயம்
- நடிப்பு
- ஒப்பனை
- உடை

(20 நிமிடங்கள்)

படி 2.1.2 : மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து, செயற்பத்திரங்களை வழங்குக.

: சகல குழுக்களும் சரியான முறையில் செயற்படுகிறார் என்பதை உறுதிசெய்க.

(30 நிமிடங்கள்)

படி 2.1.3 : ஒவ்வொரு குழுவும், தாம் இரசித்த விடயங்கள் தொடர்பான தமது கருத்துக்களை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குக.

: ஒரு குழு தமது கருத்தை முன்வைக்கும் போது, ஏனைய குழுக்களை அவதானிக்கச் செய்து அவரவர் கருத்துக்களைக் கூற இடமளிக்குக.

: பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையிலும் ,சிறுவர் அழகியற்கலை ஆக்கங்களில் காணப்படும் பொதுவான பண்புகள் பற்றியும் கலந்துரையாடலை நிகழ்த்துக.

- சிறுவர் இசை நிகழ்ச்சிகளில் இசையானது எளிமையானதாகவும், கவர்ச்சியானதாகவும் இருக்கும்.
  - தாளம் விறுவிறுப்பானதாகவும், இலகுவானதாகவும் அமைந்திருக்கும்.
  - ஆர்கன், மிருதங்கம், தபேலா, டோலக், வயலின், ஆர்மோனியம் போன்ற வாத்தியங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
  - அவரவர் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் உடை, ஒப்பனை என்பன அமைந்திருக்கும்.

- நடன நிகழ்ச்சிகளில்

  - இசையானது நடனமாடுவதற்கு உற்சாகப்படுத்துவதாகவும், எளிமையானதாகவும் அமைந்திருக்கும்.
  - தாளம் விறுவிறுப்பானதாக இருக்கும்.
  - ஆர்மோனியம், மிருதங்கம், தபேலா, வயலின், ஆர்கன் போன்ற வாத்தியங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
  - பாடலின் பொருளுக்கேற்ப அபிநயம் செய்வதாக நடனம் அமைந்திருக்கும்..
  - கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் நடை, ஒப்பனை என்பன அமைந்திருக்கும்.

- நாடக நிகழ்ச்சிகளில்

  - இசையானது கதையை விளக்கும் வகையில் உணர்வுகள் புலப்படுத்தபடுவதாக இருக்கும்.
  - மிருதங்கம், தபேலா, ஆர்கன், டிரம்ஸ், ஆர்மோனியம், வயலின் போன்ற வாத்தியங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
  - கதாபாத்திரங்களுக்கேற்ப நடிப்பு இடம்பெற்றிருக்கும். கதாபாத்திரங்களின் இயல்புகளை வெளிக்காட்டும் வகையில் உடை, ஒப்பனை அமைந்திருக்கும்.

- வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில்
  - ஒரு கதையை உரையாடல் மூலமாகவும், பாடல் மூலமாகவும் நகைச்சுவை உணர்வுடன் விளக்கவதாக அமைந்திருக்கும்.
  - ஆர்மோனியம், கடம், வில், டோலக், மிருதங்கம் போன்ற வாத்தியங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
  - கதைக்கேற்ப அங்க அசைவுகளைச் செய்வதாக இருக்கும்.
  - கலாசாரத்தைப் பேணும் வகையில் நடை,ஒப்பனை அமைந்திருக்கும்

(30 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:-

- வெகுசனத் தொடர்பு ஊடகங்களின் மூலம் காட்டப்படும் சிறுவர் அழகியல் ஆக்கங்களை இனங்காண்பர்.
- அவற்றின் தனித்துவமான அம்சங்களைக் குறிப்பிடுவர்.

## செயற்பத்திரம் 2.1.2.1

சிறுவர் அழகியற்கலை ஆக்கங்கள் பல அடங்கிய ஒளிப்பதிவு நாடாவைப் போட்டுப் பார்த்து, ஒவ்வொரு குழுவும் தமக்குக் கொடுக்கப்பட்ட செயற்பத்திரத்தைப் பூர்த்தி செய்க.

குழு I

| |
|---|
| இசை நிகழ்ச்சிகள் தொடர்பான இசை, தாளம், பயன்படுத்தப்படும் வாத்தியங்கள், ஒப்பனை, உடை பற்றிக் கூறுக. |

குழு II

| |
|---|
| நடன நிகழ்ச்சிகள் தொடர்பான இசை, தாளம், பயன்படுத்தப்படும் வாத்தியங்கள், அபிநயம், ஒப்பனை உடை பற்றிக் கூறுக. |

குழு III

| |
|---|
| நாடக நிகழ்ச்சிகள் தொடர்பான இசை, தாளம் பயன்படுத்தப்படும் வாத்தியங்கள், நடிப்பு அபிநயம், ஒப்பனை, உடை பற்றிக் கூறுக. |

குழு IV

| |
|---|
| வில்லுப்பாட்டு நிகழ்ச்சி தொடர்பான இசை, தாளம், பயன்படுத்தப்படும் வாத்தியங்கள், ஒப்பனை உடை பற்றிக் கூறுக. |

தேர்ச்சி 2.0 : இசை நிகழ்ச்சிகளிலும், கலாசார நிகழ்ச்சிகளிலும் இரசித்தவற்றை வெளிப்படுத்துவார்.

தேர்ச்சி மட்டம் 2.2 : இசை நிகழ்ச்சிகளையும், கலாசார நிகழ்ச்சிகளையும் இரசிப்பதன் மூலம் பிறரது ஆற்றகைத்திறனை மதிக்கும் மனப்பாங்கினை வெளிப்படுத்துவார்.

செயற்பாடு 2.2 : ஊடகங்கள் மூலம் காண்பிக்கப்படும் சிறுவர் கலை நிகழ்ச்சிகளை இரசிப்போம்.

நேரம் : 01 மணி 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

தரஉள்ளீடு : ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி,ஒளிப்பதிவு நாடா, ஒளிப்பதிவுக் கருவி, தொலைக்காட்சிப்பெட்டி, செயற்பத்திரம் 2.2.2.1

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-

படி 2.2.1 : வெகுசனத் தொடர்பு ஊடகங்கள் மூலம் ஒலி, ஒளிபரப்பப்படும் சிறுவர் நிகழ்ச்சிகளைப் போட்டுக் காட்டி மாணவரை அவதானிக்கச் செய்க.

: மாணவர் அவதானித்தவற்றில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

- வெவ்வெறு வகையான சிறுவர் நிகழ்ச்சிகள்
- இரசனைக்குரிய அம்சங்கள் - (இசை, தாளம், உடை, வாத்தியங்கள், ஒப்பனை, அபிநயம்)

(20 நிமிடங்கள்)

படி 2.2.2 : குழு இசை, அபிநயப்பாடல், தனியிசை, சிறுவர் நாடகம், கதைகூறல், சிறுவர் போட்டி நிகழ்ச்சிகள், வாத்திய இசை போன்ற பலவேறுபட்ட சிறுவர் நிகழ்ச்சிகள் பதியப்பட்ட ஒலிப்பதிவு நாடா, ஒளிப்பதிவு நாடாவை ஒலிக்கச் செய்து கொடுக்கப்பட்ட செயற்பத்திரத்தை பூர்த்தி செய்ய ஏற்பாடு செய்க.

(30 நிமிடங்கள்)

படி 2.2.3 : மாணவர் ஒவ்வொருவரும் தாம் இரசித்த அம்சங்கள் பற்றிக் கருத்துக் கூறச் சந்தர்ப்பம் வழங்குக.

ஒருவர் கருத்துத் தெரிவிக்கும் போது, மற்றையவர்கள் அதனை அவதானித்து தமது கருத்துக்களைக் கூற இடமளிக்குக.

: பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

- சிறுவர்களால் நிகழ்த்தப்படும் நிகழ்ச்சிகள் அதிகம் இரசிக்கக் கூடியவையாகும்.
- வெவ்வேறு வகையான நிகழ்ச்சிகளைப் பார்வையிடுவதன் மூலம் பிறரது ஆற்றுகைத்திறன், பிறர் கலாசாரம் போன்ற விடயங்களை அறிய முடியும்.

(30 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- சிறுவர் நிகழ்ச்சிகளை இனங்கண்டு இரசிப்பர்
- இரசிப்பதன் மூலம் பிறரது ஆற்றுகைத்திறனை மதிக்கும் மனப்பாங்கை வெளிப்படுத்துவர்.

## செயற்பத்திரம் 2.2.2.1

குழு இசை, அபிநயப்பாடல், தனியிசை, சிறுவர் நாடகம், கதை கூறல், சிறுவர் போட்டி நிகழ்ச்சிகள், வாத்திய இசை போன்ற பல்வேறு சிறுவர் நிகழ்ச்சிகளுள் நீர் இரசித்த "ஒரு நிகழ்ச்சி" தொடர்பான பின்வரும் அம்சங்களைக் குறிப்பிடுக.

* இசை
* தாளம்
* உடை
* அபிநயம்
* வாத்தியங்கள்
* ஒப்பனை

தேர்ச்சி 3.0 : இசை தொடர்பான ஆக்கங்களை வெளிக்கொணர்வார்.

தேர்ச்சி மட்டம் 3.4 : சுய ஆக்கங்களைத் தயாரித்து அளிப்பார்.

செயற்பாடு 3.4 : இசை தொடர்பான வெளிக்களப்புத்தகம் ஒன்றினைத் தயாரிப்போம்.

நேரம் : 01 மணி 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)
தரஉள்ளீடு : இசை சம்பந்தமான படங்கள், சஞ்சிகைகள், வாக்கேயகாரரின் படங்கள், இசைக்கருவிகளின் படங்கள், பசை, கத்திரிக்கோல்,செயற்பத்திரம் 3.4.2.1

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-

படி 3.4.1 : வெளிக்களப்புத்தங்கள் தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் பற்றிக் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

- வெளிக்களப்புத்தகம் தயாரிக்கத் தேவையான பொருட்கள் - தாள்கள், கத்திரிக்கோல், பசை, ஸ்ரேப்ளர் (Stapler)
- வெளிக்களப்புத்தகத்தின் அமைப்பு பற்றி விளக்குக
- இசை தொடர்பான சஞ்சிகைகள், நூல்கள், படங்கள், துணுக்குகள் போன்றவற்றைச் சேகரித்து வரும்படி நெறிப்படுத்துக.

(20 நிமிடங்கள்)

படி 3.4.2 : மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து, செயற்பத்திரத்தை வழங்குக.
: ஒவ்வொரு குழுவினரும் தாம் கொண்டு வந்த தகவல்களை நேர்த்தியாக ஒழுங்குபடுத்த நெறிப்படுத்துக.
: வெளிக்களப்புத்தகத்தைச் சரியான முறையில் தயாரிக்கின்றனரா என்பதை ஒவ்வொரு குழுவிலும் உறுதி செய்க.

(30 நிமிடங்கள்)

படி 3.4.3 : ஒவ்வொரு குழுவினரும் தாம் சேகரித்த தகவல்களின் தொகுப்பை வகுப்பறையில் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக. ஒரு குழுவின் தகவல் தொகுப்பை ஏனைய குழுக்களும் அவதானித்து தமது கருத்துக்களை முன்வைக்க இடமளிக்குக. நான்கு குழுவினருடைய தகவல்களையும ஒன்றுபடுத்தி வெளிக்களப்புத்தகம் ஒன்றை ஆக்குவதற்கு வழிப்படுத்துக. தயாரித்த வெளிக்களப்புத்தகத்தைக் காட்சிப்படுத்துக.

பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடலை நிகழ்த்துக.

- சஞ்சிகைகள், வாத்தியங்களின் படங்கள், வாக்கேயகாரின் படங்கள், இசைக் கச்சேரிகளின் படங்கள் போன்ற தகவல்களைக் கொண்டு இசை தொடர்பான வெளிக்களப் புத்தகம் ஒன்றினைத் தயாரிக்க முடியும்.
- தகவல்கள் சீராகவும், நேரத்தியாகவும தொகுக்கப்படுதல் வேண்டும்.
- தொகுக்கப்பட்ட தகவல்களைக் கொண்டு வெளிக்களப் புத்தகம் ஒன்றினை உருவாக்க வேண்டும்.

(30 நிமிடங்கள்)

கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்:

வெளிக்களப் புத்தகம் தயாரிப்பதற்கு, இசை சம்பந்தமான படங்கள், சஞுச்சிகைகள், வாக்கேயகாரரின் படங்கள், இசைக்கருவிகளின் படங்கள் போன்றவை அவசியம் என்பதைக் குறிப்பிடுவர்.

வெளிக்களப் புத்தகத்தை நேர்த்தியாகவும், தரமுடையதாகவும் தயாரிக்கும் திறனைப் பெறுவர். :வெளிக்களப் புத்தகத்தைத் தயாரிப்பதன் மூலம் குழுவாகச் செயற்படும் மனப்பாங்கை வெளிப்படுத்துவர்.

## செயற்பத்திரம் 3.4.2.1

குழு - I

* இசை தொடர்பான "சஞ்சிகைத் தகவல்களைச் சேகரிக்குக.
* சேகரித்தவற்றை நேர்த்தியாக வெட்டி ஒட்டுக.

குழு - II

* "வாக்கேயகாரர்களின்" படங்களைச் சேகரிக்குக
* அவற்றை நேர்த்தியாக வெட்டி ஒட்டுக

குழு - I

* "இசைக் கருவிகளின்" படங்களைச் சேகரிக்குக
* அவற்றை நேர்த்தியாக வெட்டி ஒட்டுக.

குழு – II

* இசைக்கச்சேரிகளின் படங்களைச் சேகரிக்குக
* அவற்றை நேர்த்தியாக வெட்டி ஒட்டுக.

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 3.0 | : | இசை தொடர்பான ஆக்கங்களை வெளிக்கொணர்வார். |
| தேர்ச்சி மட்டம் 3.4 | : | சுய ஆக்கங்களைத் தயாரித்து அளிப்பார். |
| செயற்பாடு 3.4 | : | வருட இறுதியில் மாணவர்களின் ஆக்கங்களைக் கொண்ட நிகழ்ச்சிகளை மேடையேற்றுவோம். |
| நேரம் | : | 01 மணி 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்) |
| தரஉள்ளீடு | : | மாதிரி அழைப்பிதழ், மாதிரி நிகழ்ச்சி நிரல், புத்தளிப்புக் கருவிகள், பிறிஸ்டல்போர்ட், நிறப்பேனாக்கள், ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி, கணினி. |

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

படி 3.4.1

: கலை நிகழ்ச்சி ஒன்றை ஒலிப்பதிவு நாடாவில் போட்டுக் காட்டி, கலை நிகழ்ச்சி ஒன்றில் இடம்பெறும் நிகழ்ச்சிகள் பற்றிக் கலந்துரையாடுக.

: மேடையேற்றுவதற்குப் பொருத்தமான திகதி, நேரம், இடம், அதிதி என்பன பற்றித் தீர்மானிக்குக.

: மேற்கூறப்பட்ட விடயங்களை உள்ளடக்கி, மாதிரி அழைப்பிதழ் ஒன்றின் உதவியுடன் அழைப்பிதழைத் தயாரிக்கச் செய்க. பாடசாலைத் தரத்திற்கமைய கணினியை உபயோகித்தும் அழைப்பிதழைத் தயாரிக்க வழிகாட்டுக.

: மேடையேற்றக்கூடிய நிகழ்ச்சிகள் தொடர்பாகக் கீழ்வரும் வகையில் கலந்துரையாடி நிகழ்ச்சிகளைத் திட்டமிடுக.

- அபிநயப்பாடல்/தனிப்பாடல்
- புத்தளிப்புக் கருவிகளுடன் குழுப்பாடல்
- இசையின் அடிப்படை அம்சங்கள் தொடர்பான பேச்சு அல்லது தாளலயம்
- சங்கீதக் கலையின் ஆரம்பத்தை விளக்கும் ஆக்கம்
- தேசிய கீதம், பாடசாலைக் கீதம்
- வரவேற்புரை, நன்றியுரை
- அதிதியின் உரை போன்றவை.

- தெரிவு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு ஏற்ப மாணவரைக் குழுக்களாகப் பிரிக்குக.
- நிகழ்ச்சிகளுக்குப் பொருத்தமான ஒப்பனை, உடை பற்றிக் கலந்துரையாடுக.
- நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குபவர், அறிவிப்பாளர் போன்றோர் பற்றியும் தீர்மானிக்குக.
- மாதிரி நிகழ்ச்சி நிரலின் உதவியுடன், நிகழ்சி நிரலைத் தயாரிக்க வழிகாட்டுக.

(20 நிமிடங்கள்)

படி 3.4.2 : நிகழ்ச்சிகளுக்குப் பொருத்தமாக மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, குழு ஒவ்வொன்றும் மாணவர் ஒருவரின் தலைமையில் பயிற்சி பெறச் சந்தர்ப்பம் வழங்குக.

: சகல குழுவும் சரியான முறையில் செயற்படுவதை உறுதி செய்க.

(30 நிமிடங்கள்)

படி 3.4.3 : சகல குழுவும் தமது நிகழ்ச்சிகளைச் செய்து காட்டச் சந்தர்ப்பம் வழங்குக.

: நிகழ்ச்சி நிரலின் ஒழுங்கில் ஒத்திகை பார்க்குக.

: ஒத்திகையின் போது நிகழ்ச்சிகளின் தரம் தொடர்பாக மாணவரின் கருத்தினைக் கூற இடமளிக்குக.

: குறைகளை நிவர்த்தி செய்ய வழிகாட்டுக.

: மேடையேற்றல் தொடர்பாகப் பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

- அழைப்பிதழில் - திகதி, நேரம், இடம், அதிதி, அழைப்பவர் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.
- மேடையேற்றுவதற்குப் பொருத்தமான நிகழ்ச்சிகளைத் தெரிவு செய்து, அதில் நன்கு பயிற்சி பெறவேண்டும்.
- சகல மாணவரும் பங்கேற்கும் வகையில் நிகழ்ச்சிகள் திட்டமிடப்படல் வேண்டும்..
- நிகழ்ச்சி நிரலில் கலை நிகழ்ச்சிகளுடன் தேசிய கீதம், பாடசாலைக் கீதம், வரவேற்புரை, நன்றியுரை, அதிதியின் உரை என்பன இடம்பெறல் வேண்டும்.
- நிகழ்ச்சிகளுக்குப் பொருத்தமான வகையில் உடை, ஒப்பனை, பயன்படுத்தப்பட வேண்டும்.
- நிகழ்ச்சியைத் திட்டமிட்டபடி அதிதியின் முன்னிலையில் குறித்த தினத்தில், குறித்த நேரத்தில் ஆற்றுகைப்படுத்த வேண்டும்.
- ஆற்றுகைப்படுத்தலின் போது நிகழ்ச்சி ஒழுங்கமைப்பாளர் அறிவிப்பாளரின் பங்கு அவசியம்.

(30 நிமிடங்கள்

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- நிகழ்ச்சியொன்றை மேடையேற்றுவதற்கு அவசியமான விடயங்களைக் குறிப்பிடுவர்.
- மேடையேற்றக்கூடிய நிகழ்ச்சிகளைத் தெரிவு செய்வர்
- தமது ஆக்கங்களைக் கொண்டு நிகழ்ச்சிகளைத் திட்டமிடுவர்.
- நிகழ்ச்சி நிரலின் ஒழுங்கில் ஆற்றுகைப்படுத்துவர்.
- கூட்டாகச் செயற்படும் போது தலைமைத்துவப் பண்பு விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு, ஒற்றுமை, பிறர் கருத்தை மதிக்கும் பண்பு, நேரம் பேணல் போன்ற இன்னோரன்ன திறன்கள் விருத்தியாவதை ஏற்றுக் கொள்வர்.

தேர்ச்சி 4.0 : இசை உருப்படிகளையும், நாட்டார் பாடல்களையும், சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார்.

தேர்ச்சி மட்டம் 4.1 : ஸ்வரஸ்தானங்களைச் சுருதி சுத்தத்துடன் பாடுவார்.

செயற்பாடு 4.1 : "பூமகளின் புன்னகை" என்ற பாடலைப் பாடுவதற்குத் தயாராகுவோம்.

நேரம் : 02 மணித்தியாலங்கள் (03 பாடவேளைகள்)

தரஉள்ளீடு : சுருதிப் பெட்டி அல்லது ஆர்மோனியம் ,ஸ்வரசாகித்தியமாக பாடல் எழுதப்பட்ட அட்டை, செயற்பத்திரம் 4.1.2.5

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

படி 4.1.1 : "பூமகளின் புன்னகை" என்ற பாடலைக் காட்சிப்படுத்தி, ஆசிரியர் பாடலை முழுமையாகப் பாடிக் காட்டி, மாணவரைச் செவிமடுக்க இடமளிக்குக.

: மேற்படி செவிமடுத்த பாடலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடலை நிகழ்த்துக.

- பாடலின் அமைப்பு – 4 வரிகளைக் கொண்ட, 5 பாடற்பகுதிகளைக் கொண்டுள்ளது.
- பாடலின் கருத்து – மலர்கள் தம்மைப் பற்றிக் கூறுகின்றன.
    - பூமாதேவியின் புன்னகை போல் பூத்திடுவோம். -மலர்கள் விரிதல்
    - கம்பன் கவியின் தமிழ் போல் மணம் வீசுவோம் -மணம் பரப்புதல்
- பல வண்ணங்களாக மலர்ந்து மகிழ்ந்திருப்போம், பூமியை விண்ணுலகம் போல் பிரகாசிக்கச் செய்வோம் - பல வர்ணப் பூக்கள்

- மங்கையர்க்கும் ஆடவர்க்கும் திருமண பந்தத்தை ஏற்படுத்துவதோடு மன்னர் முடிமேலும் தவழ்ந்து விளையாடுவோம் - மாலைகளாக

- பூமிக்குள் தேனை வைத்து வருவோருக்கு விருந்தளிப்போம் - இனம் பெருகுதல்

- ஈசன் பாதங்களைப் போற்றி நல்ல தெய்வீக மணம் பரப்பி நிற்போம் - இறைவனை வணங்க உதவுதல்

- பாடலை இயற்றியவர் - கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை. இவர் சிறுவயதிலேயே பாடல் இயற்றும் வல்லமை பெற்றிருந்தார். தெய்வ பாடல்கள், தமிழ் வளர்த்த பெரியார்கள் பற்றிய பாடல்கள், சிறுவர் பாடல்களையும் எழுதியுள்ளார்.

"மலரும் மாலையும்" என்பது இவரது சில பாடல்கள் அடங்கும் ஒரு தொகுப்பாகும்.

- ஆரம்பம் முதல் இறுதி வரை பாடலானது ஒரே இசையமைப்பில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.
- பாடலைக் காட்சிப்படுத்துக, அதனை உச்சரிப்புத் தெளிவுடன் வாசிக்க வழிப்படுத்துக.

(30 நிமிடங்கள்)

படி 4.1.2 : வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை வழங்குக.

: மாணவர்கள் செயற்பாட்டில் சரியாக ஈடுபடுகிறார்களா என்பதை உறுதி செய்து, முழுமைப்படுத்துக.

(45 நிமிடங்கள்)

படி 4.1.3 : ஒவ்வொரு குழுவும், குழுவாகவும், தனியாகவும் பாடலை உச்சரிப்புத் தெளிவுடன் வாசித்துக் காட்டச் சந்தர்ப்பம் வழங்குக.

: ஒரு குழு வாசிக்கும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளிக்குக.

: பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை நிகழ்த்துக.

- "பூமகளின் புன்னகை" என்னும் பாடலின் அமைப்பு, கருத்து, இயற்றியவர் பற்றிக் குறிப்பிடுக.
- பாடலை உச்சரிப்புத் தெளிவுடன் முழுமையாக வாசிக்கும் செயற்பாட்டில் ஈடுபடுக.

(45 நிமிடங்கள்)

கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்

: • "பூமகளின் புன்னகை" என்ற பாடலை இயற்றியவரின் பெயரைக் குறிப்பிடுவர்.
: • பாடலின் கருத்தை கூறுவர்.
: • பாடலை பொருள் விளங்க உச்சரிப்புத் தெளிவுடன் வாசிப்பர்.

## செயற்பத்திரம் 4.1.2.5

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தையும் இணைப்பையும் வழங்குக.

- "பூமகளின் புன்னகை" என்ற பாடலை உச்சரிப்புத் தெளிவுடன் வாசித்து, அதன் கருத்தைச் சுருக்கமாகக் கூறுக.

இணைப்பு-

### சிறுவர் பாடல்

"பூமகளின் புன்னகை"

இராகம் : சங்கராபரணம் தாளம் சதுஸ்ர ஏகம் (திஸ்ர நடை)

ஆ. ஸரிகம பதநிஸ்
அ. ஸநிதப மகரிஸ } 29வது மேளகர்த்தா இராகம்

இயற்றியவர் - கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை

| | | | | |
|---|---|---|---|---|
| பாம | கரீ | காரி | ஸஸா | // |
| பூம | களின் | புன்ன | கைபோல் | // |
| ஸாநி | தாநி | ஸா, | ஸஸா | // |
| பூத்தி | டுவோ | மே | கம்பன் | // |
| ஸாரி | கமா | பாப | பபா | // |
| பாம | ணக்கும் | தமிழி | னைப்போல் | // |
| பாம | காரி | ஸா, | ;; | |
| பரிம | ளிப்போ | மே | ............ | |

வண்ண வண்ணச் சேலை கட்டி
மகிழ்ந்திருப்போம் இந்த
மண்ணகமும் விண்ணகமாய்
மாறச் செய்வோமே.

மங்கையர்க்கும் ஆடவர்க்கும்
மணமுடிப்போமே – மன்னர்
தங்கமுடி மீதும் நாங்கள்
தங்கி வாழ்வோமே

கரும்பினிலும் இனிய ரசம்
கருதி வைப்போமே – அதை
விரும்பி வரும் நண்பருக்கு
விருந்தளிப்போமே

ஈசனருள் வேண்டி நிதம்
இணையடி போற்றி நல்ல
வாசமெழு தூப தீபம்
வழங்கி நிற்போமே.

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 4.0 | : | இசை உருப்படிகளையும், நாட்டார் பாடல்களையும், சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார். |
| தேர்ச்சி மட்டம் 4.1 | : | ஸ்வரஸ்தானங்களைச் சுருதி சுத்தத்துடன் பாடுவார். |
| செயற்பாடு 4.1 | : | சங்கராபரண ஸ்வரங்களை "பூமகளின் புன்னகை என்ற பாடல் மூலம் உணர்ந்து பாடுவோம். |
| நேரம் | : | 02 மணித்தியாலங்கள் (03 பாடவேளைகள்) |
| தரஉள்ளீடு | : | சுருதிப் பெட்டி அல்லது ஆர்மோனியம்,<br>ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி,<br>ஸ்வர சாகித்தியமாக பாடல் எழுதப்பட்டஅட்டை,<br>செயற்பத்திரம் 4.1.2.6 |

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

படி 4.1.1 : "பூமகளின் புன்னகை" என்ற பாடலை ஸ்வர சாகித்தியமாக ஆசிரியர் பாடிக்காட்டியோ ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்தோ மாணவரைச் செவிமடுக்க இடமளிக்குக.

: செவிமடுத்த பாடலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடலை நிகழ்த்துக.

- "பூமகளின் புன்னகை" எனும் பாடல் சங்கராபரண இராகத்தில், ஏகதாளத்தில் அமைந்துள்ளது.
- பாடல் முழுவதும் ஒரே மாதிரியான ஸ்வர அமைப்பை உடையது.
- பாடலைக் காட்சிப்படுத்தி ஸ்வர சாகித்தியமாகப் பகுதி பகுதியாகப் பாடலை ஆசிரியர் பாட, மாணவர் தொடர்ந்து பாடச் சந்தர்ப்பம் வழங்குக.
- பாடலின் ஒவ்வொரு வரியையும் பாடி அதற்கான ஸ்வரங்களைப் பாடுக.
- ஆசிரியரும், மாணவரும் பாடலை இராக, தாளத்துடன் முழுமையாக பாடுக.
- மாணவரைக் குழுவாகவும் எழுமாற்றாகத் தெரிவுசெய்து தனியாகவும் பாடக்கேட்க.

(30 நிமிடங்கள்)

படி 4.1.2 : வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைச் சிறிய குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை வழங்குக.

: சகல குழுவும் பாடலைச் சரியாகப் பாடிப் பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதி செய்து முழுமைப்படுத்துக.

(45 நிமிடங்கள்)

படி 4.1.3 : ஒவ்வொரு குழுவும், குழுவாகவும், தனியாகவும் பாடலைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

: பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடுக.

- பாடலானது சங்கராபரண இராகத்தில், ஏகதாளத்தில் அமைந்துள்ளது.
- சங்கராபரண இராகத்தின் ஆரோகண அவரோகணத்தைப் பாடிக் காட்டுக.
- இப்பாடலானது ஸட்ஜம் முதல் பஞ்சமம் வரையுள்ள ஸ்வரங்களையே கொண்டுள்ளமை.
- பாடலை முழுமையாக ஸ்வர, சாகித்தியமாக இராக, தாளத்துடன் பாடுக.

(45 நிமிடங்கள்)

கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்:-

- "பூமகளின் புன்னகை" என்ற பாடல் அமைந்துள்ள இராக, தாளத்தைக் குறிப்பிடுவர்.
- பாடலை இராக, தாளத்துடன் ஸ்வர, சாகித்தியமாகப் பாடுவர்.
- இது போன்ற சங்கராபரண இராகத்திலமைந்த வேறு பாடல்களையும் இனங்கண்டு பாடுவதற்குத் தூண்டப்படுவர்.

## செயற்பத்திரம் 4.1.2.6

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

- "பூமகளின் புன்னகை" என்ற பாடலை முழுமையாக, இராக தாளத்துடன், ஸ்வர, சாகித்தியமாகப் பாடுக.

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 4.0 | : | இசை உருப்படிகளையும், நாட்டார் பாடல்களையும், சுருதி, இராக தாளத்துடன் பாடிக் காட்டுவார். |
| தேர்ச்சி மட்டம் 4.2 | : | உருப்படிகளை இராக ,தாளத்துடன் பாடுவார். |
| செயற்பாடு 4.2 | : | தமிழ் மொழி வாழ்த்துப் பாடலைப் பாடுவதற்குத் தயாராகுவோம். |
| நேரம் | : | 01 மணி 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்) |
| தரஉள்ளீடு | : | சுருதிப் பெட்டி அல்லது ஆர்மோனியம்,<br>ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி,<br>தமிழ்மொழி வாழ்த்து எழுதப்பட்ட அட்டை/கணினியில் வடிவமைக்கப்பட்ட பிரதி,செயற்பத்திரம் 4.2.2.7.7 |

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

படி 4.2.1

: தமிழ்மொழித்தின விழா, முத்தமிழ் விழா, தமிழ் கலாசார நிகழ்வுகளில் இடம்பெறும் பாடல்கள் பற்றிக் கலந்துரையாடுக.

: தமிழ்மொழி வாழ்த்துப் பாடலை ஆசிரியர் பாடிக் காட்டியோ, ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்தோ மாணவரைச் செவிமடுக்கச் செய்க.

: செவிமடுத்தவற்றில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

- தமிழ் மொழி வாழ்த்து, தமிழ் மொழியின் சிறப்பினைக் கூறுகிறது.
- இதன் இசை எளிமையாகவும், கவர்ச்சிகரமானதாகவும் அமைந்துள்ளது.
- தாளம்
- பாடப்படும் சந்தர்ப்பங்கள்
- பாடப்படும் போது பேணும் நிலை
- இதனை பாரதியார் இயற்றியுள்ளார்.
- தமிழ் மொழி வாழ்த்துப் பாடல் எழுதப்பட்ட அட்டையை அல்லது கணினியில் வடிவமைக்கப்பட்ட பாடலைக் காட்சிப்படுத்துக.
- பாடலை சரியான முறையில் உச்சரித்துக் கூற நெறிப்படுத்துக.
- குழுவாகவும், தனியாகவும் உச்சரித்துக் கூறக் கேட்க.

(20 நிமிடங்கள்)

படி 4.2.2

: மாணவரை சிறிய குழுக்களாகப் பிரிக்குக.

: செயற்படிவத்தில் கூறப்பட்ட விடயங்களில் குழுக்களாகப் பயிற்சி பெற வழிகாட்டுக.

: சகல குழுவும் சரியான முறையில் செயற்படுகிறார்கள் என்பதை உறுதிசெய்க.

(30 நிமிடங்கள்)

படி 4.2.3 : ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தில் கேட்கப்பட்ட விடயங்களைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குக.

: ஒவ்வொரு குழுவின் சமர்ப்பணத்தின் போது, ஏனைய குழுக்கள் அதனை அவதானித்து, தமது கருத்துக்களைத் தெரிவிக்க இடமளிக்குக.

: சில மாணவரை எழுமாற்றாகத் தெரிவு செய்து, தனியாகப் பாடச் சந்தரப்பம் வழங்குக.

: மாணவரின் குறைகளை இனங்கண்டு முழுமைப்படுத்துக.

: பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

- தமிழ் மொழி வாழ்த்துப் பாடலில், தமிழ் மொழியின் சிறப்பு, தமிழ் மொழியின் வாழ்த்து என்பன வெளிப்படுத்தப்படுகின்றன.
- தமிழ் மொழி வாழ்த்துப் பாடலின் இசையின் தன்மையானது மிகவும் கவர்ச்சிகரமானதாகவும் மனதிற்கு இனிமை தருவதாகவும் அமைந்திருக்கும்.
- தமிழ் மொழித் தின விழா, முத்தமிழ் விழா போன்ற தமிழ் கலாசார நிகழ்வுகளில் இப்பாடல் பாடப்படுகிறது.
- தமிழ் மொழி வாழ்த்துப் பாடல் பாடும்போது தமிழ் மொழிக்கு மதிப்பளிக்கும் நிலையைப் பேண வேண்டும்.

(30 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- தமிழ் மொழி வாழ்த்துப் பாடல் கூறும் கருத்தினை விளக்குவர்.
- தமிழ் மொழி வாழ்த்துப் பாடல் பாடப்படும் சந்தரப்பங்களைக் குறிப்பிடுவர்.
- பாடலை சரியான முறையில் உச்சரித்துக் கூறுவர்.

**செயற்பத்திரம் 4.2.2.7**

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தையும் இணைப்பையும் வழங்குக.

- தமிழ் மொழி வாழ்த்துப் பாடல் பாடப்படும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.
- தமிழ் மொழி வாழ்த்துப் பாடல் கூறும் கருத்தினைக் குறிப்பிடுக.
- தமிழ் மொழி வாழ்த்துப் பாடலை உச்சரித்துக் கூறுக.

# இணைப்பு

## தமிழ்மொழி வாழ்த்து

தான தனத்தன தான தனத்தன தானன தந்தானே

1. வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

2. ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழிய வே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழிய வே!

3. சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!

4. வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழி யே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே!

தேர்ச்சி 4.0 : இசை உருப்படிகளையும், நாட்டார் பாடல்களையும், சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார்.

தேர்ச்சி மட்டம் 4.2 : உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார்.

செயற்பாடு 4.2 : தமிழ் மொழி வாழ்த்துப் பாடலைப் பாடுவோம்.

நேரம் : 02 மணித்தியாலங்கள் (03 பாடவேளைகள்)

தரஉள்ளீடு : சுருதிப் பெட்டி அல்லது ஆர்மோனியம், ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி, தமிழ்மொழி வாழ்த்து எழுதப்பட்ட அட்டை/கணினியில் வடிவமைக்கப்பட்ட பிரதி,செயற்பத்திரம் 4.2.2.8

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

படி 4.2.1 : தமிழ் மொழி வாழ்த்துப் பாடல் பற்றி மாணவர் ஏற்கனவே அறிந்த விடயங்களை மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

: தமிழ் மொழி வாழ்த்துப் பாடலை ஆசிரியர் பாடிக் காட்டியோ, ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்தோ மாணவரை செவிமடுக்கச் செய்க.

: செவிமடுத்தவற்றில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

- தமிழ் மொழி வாழ்த்துப் பாடலின் இசையின் தன்மை
- தாளம்
- தமிழ் மொழி வாழ்த்துப் பாடல் எழுதப்பட்ட அட்டையை அல்லது கணினி வடிவமைப்பைக் காட்சிப்படுத்துக. ஆசிரியர் தமிழ் மொழி வாழ்த்துப் பாடலை முழுமையாகப் பாடிக்காட்டி மாணவரைச் செவிமடுக்கச் செய்க.
- ஆசிரியர் பாடலைப் பகுதி பகுதியாகக் கற்பிக்க மாணவர் தொடர்ந்து பாடுவதற்கு இடமளிக்குக.
- ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து தாளத்துடன் பாடலை முழுமையாகப் பாடுக.
- மாணவரைச் சிறிய குழுக்களாகவும் எழுமாற்றாகத் தெரிவு செய்து தனித்தனியாகவும் பாடுவிக்க.

(30 நிமிடங்கள்)

படி 4.2.2. : மாணவரைச் சிறிய குழுக்களாகப் பிரிக்குக.

: ஒவ்வொரு குழுவும் தமிழ்மொழி வாழ்த்துப் பாடலைப் பாடிப் பழக இடமளிக்குக.

: சகல குழுவும் பாடலைச் சரியாகப் பாடிப் பயிற்சி பெறுகிறார்களா என்பதை உறுதி செய்க.

(45 நிமிடங்கள்)

படி 4.2.3 : ஒவ்வொரு குழுவும் தமிழ் மொழி வாழ்த்துப் பாடலைப் பாட சந்தர்ப்பம் வழங்குக.

: ஒரு குழு பாடும் போது, ஏனைய குழுக்கள் அதனை அவதானித்து தமது கருத்துக்களைத் தெரிவிக்க இடமளிக்குக.

: சில மாணவரை எழுமாற்றாகத் தெரிவு செய்து, தனியாகப் பாட சந்தரப்பம் வழங்குக.

: மாணவரின் குறை களை இனங்கண்டு முழுமைப்படுத்துக.

: ஆசிரியரும் மாணவரும் பாடலை முழுமையாகப் பாடுக.

: பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

- தமிழ் மொழி வாழ்த்துப் பாடலின் இசையின் தன்மையானது மிகவும் கவர்ச்சிகரமானதாக இருக்கும்.
- தாளம் விறுவிறுப்பான நடையில் அமைந்திருக்கும்.
- தமிழ் மொழி வாழ்த்துப் பாடலில் தமிழ்மொழியின் சிறப்பும், தமிழ் மொழியின் வாழ்த்தும் வெளிப்படுத்தப்படும்.

(45 நிமிடங்கள்)

கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்:

- தமிழ் மொழி வாழ்த்துப் பாடலை இராக தாளத்துடன் பாடுவர்.
- தமிழ் மொழி வாழ்த்துப் பாடலைப் பாடும் போது பொருத்தமான முறை அனுசரிக்கப்பட வேண்டும் என்னும் மனப்பாங்கை வெளிப்படுத்துவர்.
- தமிழ் மொழியில் பற்றுணர்வைப் பேண வேண்டும் என்ற மனப்பாங்கை ஏற்றக்கொள்வர்.

## செயற்பத்திரம் 4.2.2.8

சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை வழங்குக.

* தமிழ் மொழி வாழ்த்துப் பாடலை இராக, தாளத்துடன் பாடுக.

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 4.0 | : | இசை உருப்படிகளையும், நாட்டார் பாடல்களையும், சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார். |
| தேர்ச்சி மட்டம் 4.3 | : | நாட்டார் பாடல்களை இராக, தாளத்துடன் பாடுவார். |
| செயற்பாடு 4.3 | : | லக்கை லாலாக்கை என்ற நாட்டார் பாடலைப் பாடுவதற்குத் தயாராகுவோம். |
| நேரம் | : | 01 மணி 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்) |
| தரஉள்ளீடு | : | சுருதிப்பெட்டி அல்லது ஆர்மோனியம், பாடல் அட்டை, ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி,செயற்பத்திரம் 4.3.2.3 |

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

படி 4.3.1 : நாட்டார் பாடல்கள் அடங்கிய ஒலி நாடாவை ஒலிக்கச் செய்தோ, ஆசிரியர் நாட்டார் பாடல்களைப் பாடிக் காட்டியோ, மாணவர் நாட்டார் பாடல்களை இனங்காண வழிப்படுத்துக.

: பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் நாட்டார் பாடல்களின் தன்மை பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நிகழ்த்துக.

- லக்கை லாலாக்கை என்ற இப்பாடல் நெல்லை உரலில் இட்டுக்குற்றும்போதும் மாவு இடிக்கும்போதும் பாடப்படும் பாடலாகும்.
- நாட்டார் பாடல் வகையுள் தொழிற்பாடல் வகையைச் சேர்ந்தது.
- நெல்லுக் குற்றும்போதும் மாவு இடிக்கும்போதும் களைப்புத் தெரியாமல் இருப்பதற்காக இப்பாடல் பாடப்படுகிறது.
- லக்கை லாலாக்கை என்ற மாவு இடித்தற் பாடல் எழுதிய அட்டையைக் காட்சிப்படுத்தி அதன் கருத்து விளங்க உச்சரிப்புத் தெளிவுடன் மாணவர் வாசிக்க வழிப்படுத்துக.

(20 நிமிடங்கள்)

படி 4.3.2 : மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரங்களை வழங்குக.

: பாடலை உச்சரிப்புத் தெளிவுடன் வாசித்துப் பயிற்சி பெற வழிகாட்டுக.

: ஒவ்வொரு குழுவும் சரியாக செயற்படுகிறார்களா என உறுதிப்படுத்துக.

(30 நிமிடங்கள்)

படி 4.3.3 : ஒவ்வொரு குழுவும் இப்பாடலை அதன் கருத்துக்கள் புலப்படும் வகையில் உச்சரித்துப் பின் அதன் பொருளைக் கூறுவதற்கு சந்தர்ப்பம் அளிக்குக.

: ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைக் கூற இடமளிக்குக.

: பேறுகளைத் தொகுத்து மீளவும் கலந்துரையாடுக.

- லக்கை, லாலாக்கை பாடல் வயலில் நெல்லை அறுவடை செய்து அந் நெல்லை உரலில் போட்டுக் குற்றும் போது மாவு இடிக்கும் போதும் பாடப்படும் பாடலாகும்.
- இப்பாடலின் அமைப்பைக் கூறுக.
- இப்பாடலை அதன் கருத்து விளங்க உச்சரிப்புத் தெளிவுடன் வாசிக்குக.

(30 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- லக்கை லாலாக்கை என்ற பாடல் தொழிற்பாடல் வகையைச் சேர்ந்தது என்பதைக் கூறுவர்.
- இப்பாடல் நெல்லுக்குற்றும் போதும் மாவு இடிக்கும் போதும் களைப்புத் தெரியாமல் இருப்தற்காகப் பாடப்படுவது என்பதை வலியுறுத்துவர்.
- மாவு இடித்தற்ப் பாடலைச் சரியான முறையில் அதன் கருத்து விளங்க உச்சரித்துக் கூறுவர்.

**செயற்பத்திரம் 4.3.2.3**

இச் செயற்பத்திரத்தையும் இணைப்பையும் சகல குழுக்களுக்கும் வழங்குக

- லக்கை லாலாக்கை என்ற மாவு இடித்தற்ப் பாடலை அதன் கருத்து விளங்க உச்சரிப்புத் தெளிவுடன் வாசிக்குக.
- இந்தப் பாடலைப் பாடும் சந்தர்ப்பத்தைக் கூறுக.

இணைப்பு-

## நாட்டார் பாடல்
## மாவு இடித்தற்ப் பாடல்

இராகம் : வலஜி
தாளம் : சதுஸ்ர ஏகம்
ஸ்வரஸ்தானங்கள் : ஸட்ஜம், அந்தரகாந்தாரம், பஞ்சமம்
சதுஸ்ருதி தைவதம், கைஷிகி நிஷாதம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பாகா | ஸஸகா // | பா கா | ஸஸ கா // | பாகா | ஸஸகா// | | |
| லக்கை | லாலாக்கை | லக்கை | லாலாக்கை | லக்கை | லாலாக்கை | | |
| பாஸர் | ; | ; // | ; | ; | ; | ; | // |
| (உ)லக்கை | ; | ; // | ; | ; | ; | ; | // |
| ஸ் பா | ; | ; // | ; | ; | ; | ; | // |
| போடு | ; | ; // | ; | ; | ; | ; | // |
| கா ஸா | ; | ; // | ; | ; | ; | ; | // |
| போடு | ; | ; // | ; | ; | ; | ; | // |

1. பபகக ஸஸகக // பபகக ஸஸகக//
போடுபோடு நல்லாய்போடு பவுத்திரமாய் வைச்சுப்போடு

பபகக ஸஸகக // பபகக ஸஸகக//
கோலத்திற்கு கொஞ்ச மாவு வறுத்தெடுக்க கொஞ்ச மாவு

பாஸ்ா ; ; // ; ; ; ; //
போடு ; ; // ; ; ; ; //

ஸ்ா பா ; ; // ; ; ; ; //
போடு ; ; // ; ; ; ; //

கா ஸா ; ; // ; ; ; ; //
போடு ; ; // ; ; ; ; //

நீதபா கொஞ்சம் // நீதபா ; ; //

2. ஸகபக ஸகபக // ஸகபக ஸகபக //
பச்சரிசி பச்சரிசி பச்சரிசி பச்சரிசி

பாஸ்ா ; ; // ; ; ; ; //
போடு ; ; // ; ; ; ; //

ஸ்ா பா ; ; // ; ; ; ; //
போடு ; ; // ; ; ; ; //

கா ஸா ; ; // ; ; ; ; //
போடு ; ; // ; ; ; ; //

பபகக ஸஸகக // பபகக ஸஸகக//
பாக்குவெத்திலை எல்லிப் போல பச்சைப்பாக்கு எல்லிப்போல

பபகக ஸஸகக // பபகக ஸஸகக //
நாக்கிறுக்க எல்லிப்போல நல்லாவைச்சுப் பொத்தித்தா

பாஸ்ா ; ; // ; ; ; ; //
(உ_)லக்கை ; ; // ; ; ; ; //

ஸ்ா பா ; ; // ; ; ; ; //
போடு ; ; // ; ; ; ; //

கா ஸா ; ; // ; ; ; ; //
போடு ; ; // ; ; ; ; //

(போடு போடு நல்லாய்ப் போடு)

3. ஸகபக ஸகபக // ஸகபக / / ஸகபக //
ஒண்டும் ஒண்டும் ஒண்டும் ஒண்டும் ஒண்டும் ரண்டும் ஒண்டும் ரண்டும்

ஸகபத நிதபக // ஸகபத நீ பா
ஒண்டும் இரண்டும் மூண்டும் ஒண்டும் ரண்டும் மூண்டும் நாலுமே

பாஸ்ா; ; ; // ; ; ; ; //
(உ_)லக்கை ; ; // ; ; ; ; //

ஸ்ா பா ; ; // ; ; ; ; //
போடு ; ; // ; ; ; ; //

கா ஸா ; ; // ; ; ; ; //
போடு ; ; // ; ; ; ; //

பாகா ஸஸகா // பாகா ஸஸகா// பாகா ஸஸகா //
லக்கை லாலாக்கை லக்கை லாலாக்கை லக்கை லாலாக்கை

பாஸ்ா; ; ; // ; ; ; ; //
உலக்கை ; ; // ; ; ; ; //

ஸ்ா பா ; ; // ; ; ; ; //
போடு ; ; // ; ; ; ; //

கா ஸா ; ; // ; ; ; ; //
போடு ; ; // ; ; ; ; //

ஸ்க்ஸ் ஸ்நிநிப // க்ாஸ்ா ; ; //
மச்சானே அள்ளிக்கொட்டு ஏஹே ....

4. ,ஸ்க்ஸ் ஸ்நிநிப // நீபா ; ; //
மானம்பூ வெள்ளிப்பந்தல் ஓஹோ ....

,ஸ்க்ஸ் ஸ்நிநிப // க்ாஸ்ா ; ; //
அச்சாறை ஊத்திவைக்க ஏஹே ....

,ஸ்க்ஸ் ஸ்நிநிப // நீபா ; ; //
அம்பனைக்கு மதியம் போலப் போவோம் ....

,ஸ்க்ஸ் ஸ்நிநிப // க்ாஸ்ா ; ; //
கூவில் பனங்கட்டியும் ஏஹே ....

,ஸ்க்ஸ் ஸ்நிநிஸ் // நீபா ; ; //
கூத்தபிரான் எள்ளுப்பாகு ஓஹோ ....

,ஸ்க்ஸ் ஸ்நிநிஸ் // ஸ்க்ஸ் // பகஸ //
வாயிலே தேன்குடிக்க வருத்தம் வந்தால் சாறிடிக்க

,ஸ்க்ஸ் ஸ்நிநிஸ் // ஸ்க்ஸ் பகஸ //
வட்டுக்கோட்டை பாக்கெடுத்து நறுக்கிநறுக்கி வையுங்கடி

(நீதபா கொஞ்சம் / நீதபா : : /)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பாகா | ஸஸகா | // | பாகா ஸஸகா | // | பாகா ஸஸகா | // |
| லக்கை | லாலாக்கை | | லக்கை லாலாக்கை | | லக்கை லாலாக்கை | |
| பாஸ்ா | ; ; | // | ; ; ; ; | // | | |
| (உ_)லக்கை | ......... | | .......................... | | | |
| ஸ்ா பா | ; ; | // | ; ; ; ; | // | | |
| போடு | ......... | | .......................... | | | |
| கா ஸா | ; ; | // | ; ; ; ; | // | | |
| போடு | ......... | | .......................... | | | |

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 4.0 | : | இசை உருப்படிகளையும், நாட்டார் பாடல்களையும், சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார். |
| தேர்ச்சி மட்டம் 4.3 | : | நாட்டார் பாடல்களை இராக,தாளத்துடன் பாடுவார். |
| செயற்பாடு 4.3 | : | லக்கை லாலாக்கை என்ற நாட்டார் பாடலைப் பாடுவோம். |
| நேரம் | : | 02 மணித்தியாலங்கள் (03 பாடவேளைகள்) |
| தரஉள்ளீடு | : | சுருதிப் பெட்டி அல்லது ஆர்மோனியம்,ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி, பாடல் அட்டை, தாளம், செயற்பத்திரம் 4.3.2..4 |

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

படி 4.3.1 : நாட்டார் பாடல்கள் அடங்கிய ஒலிநாடாவை ஒலிக்கச் செய்தோ அல்லது ஆசிரியர் பாடிக் காட்டியோ மாணவர்களை செவிமடுக்கச் செய்க.

: பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் நாட்டார் பாடல்களின் தன்மை பற்றியும் பாடும் முறை பற்றியும் மாணவர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்துக.

- லக்கை, லாலாக்கை என்ற உலக்கைப் பாடல் இலகுவான மெட்டில் அமைந்திருக்கும் என்பதை குறிப்பிடுக.
- இலகுவான தாளநடையில் அமைந்திருக்கும் என்பதை குறிப்பிடுக.
- இப்பாடலை ஆசிரியர் முழுமையாகப் பாடிக்காட்ட மாணவர் நன்றாக செவிமடுக்க இடமளிக்குக.
- ஆசிரியர் பாடலைப் பகுதிபகுதியாகப் கற்பிக்க மாணவர் கேட்டுப்பாடுவதற்கு இடமளிக்குக.
- ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து பாடலை முழுமையாக சுருதி, தாளத்துடன் பாடுக.
- மாணவர்களைக் குழுக்களாகவும் எழுமாற்றாகத் தெரிவுசெய்து தனித்தனியாகவும் பாடக் கேட்க.

(30 நிமிடங்கள்)

படி 4.3.2 : மாணவரைக் குழுக்களாகப் பிரித்து சுருதி, தாளத்துடன் பாடப்பயிற்சி செய்க.

ஒவ்வொரு குழுவும் சரியாகக் பாடிப் பழகுகிறார்கள் என உறுதிப்படுத்துக.

(45 நிமிடங்கள்)

படி 4.3.3

: ஒவ்வொரு குழுவும் தமக்குக் கொடுக்கப்பட்ட பாடலைத் தனியாகவும், குழுவாகவும் பாட சந்தரப்பம் வழங்குக.

: குழுவாகவும் தனியாகவும் மாணவர் பாடுகின்ற போது, ஏனையவர்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிக்க இடமளிக்குக.

: கீழ்காணும் கருத்துக்களை மையமாகக் கொண்டு மீளவும் கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபடுக.

- லக்கை லாலாக்கை என்ற பாடல் ஏகதாளம் சதுஸ்ர நடையில் அமைந்துள்ளது என்பதை குறிப்பிடுக.
- இப்பாடலை ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து சுருதி, தாளத்துடன் முழுமையாகப் பாடுக.

(45 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

: லக்கை லாலாக்கை என்ற பாடலை முழுமையாக சுருதி, தாளபிடிப்புடன் பாடுவர்.

: வேலை செய்யும் போது இப்பாடலைப் பாடுவதால் களைப்புத் தெரியாது என்பதை எற்றுக் கொள்வர்.

**செயற்பத்திரம் 4.3.2.4**

பின்வரும் செயற்பத்திரத்தை நான்கு குழுக்களுக்கும் வழங்குக

* லக்கை லாலாக்கை என்ற பாடலை சுருதி, தாளப் பிடிப்புடன் முழுமையாகப் பாடுக.

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 5.0 | : | கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார். |
| தேர்ச்சி மட்டம் 5.1 | : | இசையின் அடிப்படை அம்சங்களை விளக்குவார். |
| செயற்பாடு 5.1 | : | கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களில் "தாளம்" பற்றி அறிந்து கொள்வோம். |
| நேரம் | : | 01 மணி 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்) |
| தரஉள்ளீடு | : | கைத்தாளம், தாளக்கருவி,செயற்பத்திரம் 5.1.2.6 |

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

படி 5.1.1 : ஆசிரியர் தாளத்தோடு ஓர் பாடலைப்பாடுக.

: பாடலிற்குரிய தாளத்தை கையினாலோ, கருவியினாலோ போட்டுக் காட்டி மாணவர் அதனை அவதானித்து இனங்கண்டு கூற இடமளிக்குக.

: தாளம் தொடர்பாக பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்க.

- பாட்டை ஒரே சீராகப் பாட உதவுவது தாளம் ஆகும்.
- தாளத்தைக் கையினாலோ, கருவியினாலோ போட்டுக் காண்பிக்க முடியும்
- சங்கீதத்திற்கு தாளம் தந்தையைப் போன்றது என்ற கருத்தினை வலியுறுத்துக.
- ஏகதாளம், ஆதி தாளம் இவற்றினை எடுத்துக் கொண்டால்
  - * ஏகதாளம் -1 தட்டும் 3 விரல் எண்ணிக்கைகளையும் கொண்டது இதன் அட்ஷர எண்ணிக்கை – 4, குறியீடு $1_4$ ஆகும்.
  - * ஆதி தாளம் - 1 தட்டும் 3 விரல் எண்ணிக்கை, தட்டுவீச்சு, தட்டு வீச்சினையும் கொண்டது. இதன் அட்ஷர எண்ணிக்கை -8, குறியீடு $1_{4\,0\,0}$ ஆகும்.

(20 நிமிடங்கள்)

படி 5.1.2 : வகுப்பிலுள்ள மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து செயற்படுத்திரங்களை வழங்குக.
ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்திலுள்ள அறிவுரைக்கேற்ப செயற்பாட்டில் ஈடுபடுகிறார்களா என்பதை உறுதிப்படுத்துக.

(30 நிமிடங்கள்)

படி 5.1.3 : ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்க சந்தரப்பம் வழங்குக.

: ஒரு குழு தமது பேறுகளைச் சமர்ப்பிக்கும் போது மற்றைய குழு அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளிக்குக.

: குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

: கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை வலியுறுத்துக.

- பாட்டை ஒரே சீராகக் கொண்டு செல்ல உதவுவது தாளம் ஆகும்.
- தாளம் இல்லாத பாடல் ஒரே வேக நடையில் அமையாது என்பதனை வலியுறுத்துக.
- சங்கீதத்திற்கு தாளம் தந்தையைப் போன்றது.
- ஆதிதாளம், ஏகதாளத்தில் அமைந்த சிறுவர் பாடல்களை மாணவர் தாளம் போட்டுப் பாட வழிப்படுத்துக.
- பாடலை ஒரே சீராக்கி கொண்டு செல்வது தாளம் என்பதனை மீளவும் வலியுறுத்துக.

(30 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- தாளம் என்றால் என்ன எனக் கூறுவர்.
- பாடல்கள் தாளத்துடன் பாடப்படுவதை ஏற்றுக் கொள்வர்.
- ஏகதாளம், ஆதிதாளம் போன்றவற்றைப் போட்டுக் காட்டுவர்.
- பாடலை ஒரே சீராகக் கொண்டு செல்வது தாளம் என்பதனை ஏற்றுக் கொள்வர்.

## செயற்பத்திரம் 5.1.2.6

குழு I

1. தாளம் என்றால் என்ன?
2. ஏகதாளத்தின் அட்ஷர எண்ணிக்கை, குறியீடு, செய்கைமுறை ஆகியவற்றைச் குறிப்பிடுக.

குழு II

1. தாளம் பற்றி மூன்று வசனங்கள் எழுதுக.
2. ஆதி தாளத்தின் குறியீடு, அட்ஷர எண்ணிக்கை, செய்கைமுறை ஆகியவற்றைக் குறிப்பிடுக.

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 5.0 | : | கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார். |
| தேர்ச்சி மட்டம் 5.1 | : | இசையின் அடிப்படை அம்சங்களை விளக்குவார். |
| செயற்பாடு 5.1 | : | கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களில் திஸ்ர, சதுஸ்ர நடைகள் பற்றி அறிந்து கொள்வோம். |
| நேரம் | : | 02 மணித்தியாலங்கள் (03 பாடவேளைகள்) |
| தரஉள்ளீடு | : | திஸ்ர, சதுஸ்ர நடையில் அமைந்த சிறுவர் பாடல், நாட்டார் பாடல்கள் ஒலிப்பதிவுகருவி, ஒலிப்பதிவு நாடாக்கள், செயற்பத்திரம் 5.1.2.7 |

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

படி 5.1.1 : திஸ்ர, சதுஸ்ர நடையில் அமைந்த சிறுவர் பாடல் , நாட்டார் பாடல்களைப் பாடிக் காட்டியோ ஒலிப்பதிவுக் கருவியில் ஒலிக்கச் செய்தோ மாணவரை செவிமடுக்கச் செய்க.

: பாடல்களில் இடம்பெற்ற தாளங்கள், தாளநடைகளை மாணவர் இனங்கண்டு கூற இடமளிக்குக.

: இனங்கண்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடலொன்றை மேற்கொள்க.

- பாடல்களின் நடை வேறுபாடுகளில் இருந்து திஸ்ர, சதுஸ்ர நடைகளை இனங்காணச்செய்க.
- திஸ்ர சதுஸ்ர நடைகளின் எண்ணிக்கை.
- இவற்றின் ஜதிச் சொல் திஸ்ரநடை "தகிட" என்றும் சதுஸ்ரநடை "தகதிமி" என்றும் அமைந்துள்ளதைக் கூறுக.
- திஸ்ர, சதுஸ்ர நடைகளின் ஜதிச் சொல்லை சொல்லி ஏக தாளத்தைப் போடுவதற்கு நெறிப்படுத்துக.

(30 நிமிடங்கள்)

படி 5.1.2 : மாணவர்களை இருகுழுக்களாகப் பிரித்து செயற்பத்திரங்களை வழங்குக.

: செயற்பத்திரத்திலுள்ள அறிவுரைக்கேற்ப ஒவ்வொரு குழுவும் செயற்பாட்டில் ஈடுபடுகிறார்களா என்பதை உறுதிப்படுத்துக.

(45 நிமிடங்கள்)

படி 5.1.3 : ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குக. அதனை மற்றைய குழுவும் அவதானித்துக் கருத்துக் கூற இடமளித்து அவர்களின் தவறுகளை அவ்வப்போது திருத்தி நெறிப்படுத்துக.

: மாணவரின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடலொன்றை மேற்கொள்க.

- திஸ்ர நடை மூன்று எண்ணிக்கைகளைக் கொண்டது. இதன் ஜதிச் சொல் "தகிட" ஆகும்.
- சதுஸ்ர நடை நான்கு எண்ணிக்கைகளைக் கொண்டது. இதன் ஜதிச் சொல் "தகதிமி" ஆகும்.
- திஸ்ர, சதுஸ்ர, நடையில் அமைந்த பாடலைப் பாட மாணவர் அவற்றிற்கான நடையைப் போடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குக.
- திஸ்ர, சதுஸ்ர நடைகளை மாணவர் விளங்கிக் கொள்ளச் செய்க.

(45 நிமிடங்கள்)

கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்

- திஸ்ர, சதுஸ்ர நடைகளை விளக்குவர்.
- திஸ்ர, சதுஸ்ர நடைக்குரிய ஜதிச் சொல்லை குறிப்பிடுவர்.
- திஸ்ர, சதுஸ்ர நடையிலமைந்த பாடல்களை இனங்காண்பர்.
- திஸ்ர, சதுஸ்ர நடைகளை போட்டுக் காட்டுவர்.

**செயற்பத்திரம் - 5.1.2.7**

குழு I

* திஸ்ர நடைக்குரிய ஜதியைக் கூறுக.
* திஸ்ர நடைக்குரிய அட்சர எண்ணிக்கையைக் குறிப்பிடுக.
* கற்ற பாடல்களில் திஸ்ர நடையிலமைந்த பாடல்களைக் குறிப்பிடுக.

குழு II

* சதுஸ்ர நடைக்குரிய ஜதியைக் கூறுக.
* சதுஸ்ர நடைக்குரிய அட்சர எண்ணிக்கையைக் குறிப்பிடுக.
* கற்ற பாடல்களில் சதுஸ்ர நடையிலமைந்த பாடல்களைக் குறிப்பிடுக.

தேர்ச்சி 6.0 : இசையை அடிப்படையாகக் கொண்டு சமூக, கலாசார பாரம்பரிய பண்புகளை வெளிப்படுத்துவார்.

தேர்ச்சி மட்டம் 6.2 : சமய, கலாசார நிகழ்ச்சிகள் தொடர்பான கலை அம்சத்தை வெளிக்கொணர்வார்.

செயற்பாடு 6.2 : நத்தார் தொடர்பான இசை, நடனம், சித்திரம், நாடகம் பற்றி அறிந்துகொள்வோம்.

நேரம் : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

தரஉள்ளீடு : நத்தார்ப் பாடல்கள், நத்தார் தொடர்பான படங்கள், மாதிரி வாழ்த்துப் மடல்கள், டிமை கடதாசி, நிறப்பேனாக்கள், ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி,செயற்பத்திரம் 6.2.2.3

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

படி 6.2.1 : நத்தார்ப் பாடல்களை ஆசிரியர் பாடிக்காட்டியோ, ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்தோ மாணவர் நத்தார் நிகழ்வினை இனங்காண வழிப்படுத்துக.

: சமய கலாசார நிகழ்ச்சிகளுள் ஒன்றான நத்தார்ப் பண்டிகை பற்றி பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை நிகழ்த்துக.

- நத்தார்ப்பண்டிகையானது கிறிஸ்தவ மதத்தவர்களால், மார்கழி மாதம் 25 ஆந் திகதியன்று கொண்டாடப்படுகிறது.
- அன்றைய நாள் இயேசுபாலனின் பிறந்த நாளாகும்.
- இயேசு பாலனின் பிறப்பின் கதை.
- நத்தார் காலத்தில் கிறிஸ்து பிறப்பின் பாடல்களைப் பாடுவார்கள். இப்பாடல்கள் "கரோல் கீதங்கள்" என அழைக்கப்படும்.
- நத்தார்ப் பண்டிகை தொடர்பான படங்களைக் காட்சிப்படுத்தி, இப்பண்டிகையின் பிரதான நிகழ்வுகளைக் குறிப்பிடுக.
  - நத்தார் அலங்காரங்கள்
  - நத்தார் மரம் (Christmas Tree) அலங்கரித்தல்.
  - நத்தார்த் தாத்தா
  - தேவாலயத்திற்குச் செல்லுதல்
  - கரோல் கீதங்களைப் பாடுதல்
  - குடும்பத்தினர் உறவினர், சுற்றத்தாருடன் பகிர்ந்துண்ணல்.
- மாதிரி வாழ்த்துமடல்களைக் காட்டி, நத்தார் வாழ்த்து மடலில் இடம்பெறக் கூடிய விடயங்களைக் கூறுக.

(10 நிமிடங்கள்)

படி 6.2.2 : மாணவர்களை நான்கு குழுக்களாக பிரிக்குக

: ஒவ்வொரு குழுவிற்குமான செயற்பத்திரங்களை வழங்குக.

: மாணவர்கள் செயற்பாட்டில் சரியாக ஈடுபடுகிறார்களா என்பதை உறுதிசெய்து, முழுமைப்படுத்துக.

(15 நிமிடங்கள்)

படி 6.2.3 : ஒவ்வொரு குழுவும் தத்தமது பேறுகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குக.

: ஒரு குழுவின் சமர்ப்பணம் தொடர்பாக ஏனைய குழுக்கள் தமது கருத்துக்களை முன்வைக்க இடமளிக்குக..

: பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை நிகழ்த்துக

- நத்தார்ப்பண்டிகையானது கிறிஸ்தவ மதத்தவர்களால்,இயேசுவின் பிறந்த நாளாகிய மார்கழி மாதம் 25 ஆந் திகதியன்று கொண்டாடப்படுகிறது.
- இயேசு பாலனின் பிறப்பின் கதையை மீளவும் நினைவுபடுத்துக.
- இக் காலத்தில் "கரோல் கீதங்கள்" பாடப்படுகின்றன.
- நத்தார் மரம் அலங்கரித்தல், தேவாலயத்திற்குச் செல்லுதல் பகிர்ந்துண்ணல் போன்றவை இவ்விழாவின் பிரதான நிகழ்வுகளாகும்.

(15 நிமிடங்கள்)

கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்: :

: நத்தார் பண்டிகையின் சிறப்புப் பற்றிக் கூறுவர்.

: கரோல்கீதங்களைப் பாடுவர்.

: நத்தார் பண்டிகையானது எம்மதத்தவர்களால், எப்போது கொண்டாடப்படுகிறது என்பதைக் கூறுவர்.

: நத்தார் தொடர்பான இசை, நடனம்,சித்திரம்,நாடகம் போன்ற அம்சங்களை வெளிப்படுத்துவர்.

**செயற்பத்திரம் 6.2.2.3**

குழு I

* நத்தார்ப்பாடல் (கரோல்) ஒன்றைப் பாடுக.

குழு II

* நத்தார்ப் பண்டிகை பற்றி 10 வசனங்கள் எழுதுக.

குழு III

* நத்தார் வாழ்த்துமடல் ஒன்றினைத் தயாரிக்குக.
* நத்தார் தொடர்பான நிகழ்வுகளை விளக்கும் வகையில் சித்திரம் வரைக.

குழு IV

* நத்தார்ப் பண்டிகையை விளக்கும் சிறு நாடகம் ஒன்றை நடித்துக் காட்டுக.

# பகுதி III

## கற்றல் - கற்பித்தலை மேலும் விரிவுபடுத்தலுக்கான கருவிகள்

# கணிப்பீடும் மதிப்பீடும்

## 08. கணிப்பீடும் மதிப்பீடும்

**8.1.**

கற்றல் - கற்பித்தற் செய்கையின் மூலம் எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறுகளைத் தெளிவாகப் பெற்றுக் கொள்வதற்கும், மாணவர்கள் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டத்தைப் பெற்றுக் கொள்வதுமாக, வகுப்பறையில் இலகுவாகச் செயற்படுத்த முடியுமான, ஒன்றுகொன்று தொடர்பட்ட இரண்டு வேலைத்திட்டங்களாகக் கணிபீட்டையும், மதிப்பீட்டையும் கருதலாம். கணீப்பீடு சரியான முறையில் நடைபெறுமெனின், வகுப்பில் கற்கும் ஒவ்வொரு பிள்ளையும் உரிய தேர்ச்சியின் (நிபுணத்துவத்தின்) அண்மிய மட்டத்தையாவது பெற்றுக் கொள்வது கடினமல்ல. மதிப்பீட்டின் மூலம் எதிர்பார்க்கப்படுவது பிள்ளைகள் பெற்று கொண்ட தேர்ச்சி எம்மட்டத்தில் காணப்படுகிறது என்பதைக் கண்டுகொள்வதாகும்.

கணிப்பீட்டைச் செயற்படுத்தும்போது ஆசிரியர்கள் மாணவர்களுக்கு இரண்டு விதமாக வழிகாட்டல்களை வழங்கலாம். இவ்வழிகாட்டல்கள் இரண்டும் பொதுவாக பின்னூட்டல் (Feed Back), முன்னோக்கிய ஊட்டல் (Feed Forward) என அழைக்கப்படுகின்றன. மாணவர்களின் பலவீனம், இயலாமை என்பவற்றை இனங்கண்டு கொண்ட பின், அவர்களிடம் காணப்படும் கற்றல் தொடர்பான பிரச்சினைகளை நீக்கிக் கொள்வதற்கு பின்னூட்டலையும், மாணவர்களின் பலம், இயலுமை என்பவற்றை இனங்கண்டு கொண்ட பின் அவற்றை மேலும் விருத்தி செய்து கொள்வதற்கு முன்னோக்கிய ஊட்டலையும் வழங்குவது ஆசிரியரின் கடமையோடு சார்ந்த பொறுப்பாகும்.

கற்றல் -கற்பித்தல் செய்கையின் வெற்றி பாடத்திட்டத்திலுள்ள தேர்ச்சிகளில் எத்தேர்ச்சிகளை மாணவர்கள் எந்த மட்டத்தில் அடைந்துள்ளனர் என்பதை அறிவதன் மூலம் இனங் காணப்படுகின்றது. கற்றல் - கற்பித்தல் செய்கையின் போது மாணவர்கள் அடைந்த தேர்ச்சி மட்டங்களை அளவிடுவது எதிர்பார்க்கப்படுவதோடு, அடைந்த தேர்ச்சி மட்டங்கள் பற்றிய விபரங்களை பெற்றோர் உள்ளிட்ட மற்றும் உரிய நபர்களுக்கும் தொடர்பாடல் செய்வது ஆசிரியரின் பொறுப்பாகும்.

உங்களிடம் முன்வைக்கப்பட்டுள்ள இப்பாடத்திட்டம் மாணவர் மையமாக (Student - Centered), தேர்ச்சி மட்ட (Competency-Based) செயற்பாடு சார்ந்த (Activity - Oriented) பிரவேசத்தைக் கொண்டது. வாழ்வைக் கருத்துள்ளதாக்கிக் கொள்வதற்கு, செயற்பாட்டினூடாகக் கற்றல் என்பது ஆசிரியரின் உருமாற்றப் பங்களிப்பில் காணப்படும் பிரதான அம்சமாகும்.

ஏற்கனவே தயாரிக்கப்பட்ட செயற்பாடுகளின் தொடரகத்தின் ஊடாகச் செயற்படுத்தப்படும் இப்பாடத்திட்டமானது, கற்றல்-கற்பித்தலை கணிப்பீடு - மதிப்பீடு என்பவற்றோடு ஒன்றிணைப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயற்பாட்டிலும் அதன் இரண்டாம் படியில் மாணவர்கள், குழுவாக ஆய்வில் ஈடுபடும்போது அவர்களை கணிப்பீடு செய்வதற்கும் செயற்பாட்டின் மூன்றாம் படியில் மாணவர்கள் தமது கண்டுபிடிப்புக்கள், பேறுகள் என்பவற்றைச் சமர்ப்பிக்கும்போது மாணவர்களை மதிப்பீடு செய்வதற்கும் ஆசிரியருக்கும் முடியுமாகின்றது. மாணவர்கள் குழுவாக ஆய்வில் ஈடுபட்டிருக்கும்போது அவர்களினூடே சென்று அவர்களது வேலைகளை அவதானிப்பதன் மூலம், மாணவர்கள் முகங் கொடுக்கும் பிரச்சினைகளை தீர்ப்பதற்குரிய வசதிகளையும், வழிகாட்டல்களையும் வழங்குவது ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படுகின்றது.

கணிப்பீடு, மதிப்பீடு என்பவற்றை இலகுவாகச் செய்துகொள்வதற்கு ஐந்து பொது நியதிகள் முன்வைக்கப்படுகின்றன. இந்நியதிகளில் முதன் மூன்று நியதிகளும் உரிய தேர்ச்சி மட்டத்தோடு தொடர்பான அறிவு, மனப்பாங்கு, திறன்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதாகவும், அடுத்த இரண்டு நியதிகளும் வாழ்க்கைக்குத் தேவைப்படும் முக்கியமான இரண்டு திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கானதாகவும் இருத்தல் வேண்டும். இந்த ஐந்து நியதிகளுடன் இணைந்ததான நடத்தை மாற்றங்கள் வகுப்பறையில் மாணவர்களிடம் காணப்படுகின்றதா என்பதைக் கண்டு கொள்வதற்கு ஆசிரியர் முயற்சி எடுக்க வேண்டியதோடு கணிப்பீட்டின் மூலம் கண்டு கொள்ளப்படும் மாணவர்கள் பெற்றுள்ள இத்திறன்களின் அளவை மதிப்பீட்டின் மூலம் ஆசிரியர் அளந்து கொள்ள வேண்டும்.

கணிப்பீடு தொடர்பான வேலைத் திட்டங்களை அபிவிருத்தி செய்து கொள்வதன் மூலம் கற்றல் - கற்பித்தற் செய்கையை விரிவுப்படுத்திக் கொள்ளலாம். இதற்காக முதலில் செயற்பாட்டுத் தொடரகத்தில் வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகளை கணிப்பீட்டு வகைகளை அடிப்படையாகக் கொண்டதான தொகுதிகளாக வேறாக்கிக் கொள்க.

மாணவர்களின் கற்றலை மலர செய்யக் கூடியதாக, உரிய பாடவிடயத்துடன் தொடர்பான செயற்பாட்டைத் தெரிவு செய்க. இனி, உரிய கற்றல் - கற்பித்தல் செய்கைக்கான சாதனங்களைத் தயாரித்துக் கொள்க. ஒவ்வொரு செயற்பாட்டின் ஆரம்பத்தில் உரிய உபகரணங்களைக் குழுக்களுக்கு வழங்க வேண்டும். கற்றல்-கற்பித்தல் செய்கையை விரிவாக்கும் போது அவை அமையக் கூடிய வகைகள் சில கீழே தரப்பட்டள்ளன.

- எண்ணக்கருப்படம் (Concept Maps)
- சுவர்ப்பத்திரிகை (Wall News Papers)
- புதிர்ப்போட்டி (Quizzes)
- வினாவிடைப் புத்தகம் (Question and Answer Books)
- மாணவர் செயற்பாட்டுக் கோவை (Portfolios)
- கண்காட்சி (Exhibitions)
- விவாதம் (Debates)
- குழுக் கலந்துரையாடல் (Panel Discussions)
- கருத்தரங்கு (Seminars)
- சமயோசிதப் பேச்சு (Impromptu Speeches)
- நடிபங்கு (Role Plays)
- இலக்கியக் கருத்துக்களையும், விமர்சனங்களையும் முன்வைத்தல் (Presentation of Litrature Review)
- வெளிக்களப் புத்தகம் / தினக் குறிப்புப் புத்தகம் / வேலைப்புத்தகம் (Field Books/ Nature Diaries)
- செய்முறைச் சோதனை (Practical Tests)

பாட வழிகாட்டியின் மூன்றாம் பகுதி, உத்தேச கற்றல் - கற்பித்தற் செய்கைகளை விரிவாக்கும் வகைகைளக் கொண்ட செயற்பாடுகளையும் அதற்கான கற்றல் - கற்பித்தல் சாதனங்களையும் அறிமுகஞ் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளினுள் கணிப்பீடு, அதனோடு தொடர்பான மதிப்பீடும் இணைக்கப்பட்டுள்ளதால் கற்றல் - கற்பித்தற் செய்கை மேலும் விரிவாக்கப்பட்டுள்ளதோடு மாணவர்கள் ஆரவத்தோடும் மகிழ்ச்சியோடும் கற்றலில் ஈடுபடுவதற்கு முடியுமாகின்றது.

8.2

- மாணவர் கற்றலில் உயர் அடைவைப்பெற வேண்டுமாயின் தொடர்ச்சியான கணிப்பீட்டிற்கு உட்பட வேண்டியது அவசியமாகும்.

- மாணவர் கற்றல் அடைவு கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின்போது, பாட அலகின் முடிவிலும், மாத முடிவிலும், தவணைமுடிவிலும், ஆண்டு இறுதியிலும் கணிப்பீடும் மதிப்பீடும் செய்யப்படும்.

- கர்நாடக சங்கீத கணிப்பீட்டில் அறிமுறை, செய்ம்முறை ஆகிய இரண்டும் இடம்பெற வேண்டும்.

- இப்புதிய பாடத்திட்டத்தில் கற்றல் செயற்பாடுகள் தனியாள் நிலையிலும் குழுநிலையிலும் இடம்பெறுவதால் இவ்விரு நிலைகளிலும் மாணவர் கணிப்பிடப்படல் வேண்டும்.

- இரசித்தல், ஆக்கத்திறன் என்பவை தொடர்பான கணிப்பீட்டிற்கு வகுப்பறையில் கூடிய சந்தர்ப்பங்களை வழங்க வேண்டும். அவற்றை அவதானிப்பதன் மூலம் மதிப்பீடு செய்தல் வேண்டும்.

- மாணவர்களின் அறிதல் ஆட்சித்திறன், மனவெழுச்சிப் பண்புகள், உளவியக்கத் திறன்கள், கற்றவற்றை நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்தும் ஆற்றல் என்பனவற்றை விருத்தி செய்வதற்கு உதவுவதோடு அவர்களின் பலம், பலவீனம் என்பவற்றை இனங்கண்டு அவர்களுக்கும் உதவும் வகையில் பாடசாலை மட்டக் கணிப்பீட்டுத் திட்டத்தை பாடசாலைகளில் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக முன்னர் கூறப்பட்ட மாதிரிக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட செயற்பாடுகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

## கருவி 01

1. கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் : முதலாம் தவணை
2. உள்ளடங்கும் தேர்ச்சி மட்டம் : 5.1
3. கருவிக்குரிய பாடப்பகுதிகள் :
   - சங்கீதம்
   - நாதம்
   - சுருதி

4. கருவியின் தன்மை : புதிர்ப்போட்டி
5. கருவியின் நோக்கம் :
   * கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களுள் சங்கீதம், நாதம்,சுருதி தொடர்பாகப் பெற்றுக் கொண்ட அறிவை வினாக்களை ஆக்குவதற்கு உபயோகிப்பார்.

   * குழு என்ற உணர்வுடன் புதிர்ப் போட்டிகளில் கலந்து கொள்வார்.

6. கருவியைப் பயன்படுத்தும் முறை பற்றிய ஆலோசனைகள்:

ஆசிரியருக்கு:

* செயற்பாட்டை ஆரம்பிக்கு முன்னர் இக்கருவி பற்றி வகுப்பிற்கு அறிமுகம் செய்க.
* மாணவர்களைப் பொருத்தமானவாறு குழுக்களாகப் பிரிக்குக.
* பின்வரும் அட்டவணையிற் காட்டியவாறு ஒவ்வொரு குழுவிற்கும் உரிய பாடப்பகுதியை வழங்குக.

| குழு I | குழு II |
|---|---|
| சங்கீதம் தொடர்பான பாடப்பகுதி | நாதம் தொடர்பான பாடப் பகுதி |

| குழு III |
|---|
| சுருதி தொடர்பான பாடப்பகுதி |

* ஒவ்வொரு குழுவும் உரிய பாடப்பகுதிகளில் 05 வினாக்கள் வீதம் தயாரித்து வினாப்பத்திரம் ஒன்றை அதற்குரிய விடைகளுடன் ஒரு கிழமைக்குள் ஒப்படைக்குமாறு அறிவுறுத்தல் வழங்குக.

* மாணவர்கள் தயார் செய்து வினாப்பத்திரங்களில் இருந்து புதிர்ப் போட்டிக்கு ஏற்ற பத்து வினாக்களைத் தெரிவு செய்க.

* மூன்று குழுவும் கொடுக்கப்பட்ட மூன்று பாடப்பகுதிகளிலும் போதிய அறிவினைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதனைக் கூறுக.

* பொருத்தமான நேரமொன்றில் இரு குழுக்களாகப் பிரித்து போட்டி ஒன்றினை நடத்துக.

மாணவர்களுக்கு :

* பாடம் முடிடைந்து ஒரு கிழமைக்குள் 05 வினாக்களடங்கிய வினாப்பத்திரம் ஒன்றையும் அவற்றிற்குரிய விடைகளையும் தயார் செய்து ஆசிரியரிடம் ஒப்படைக்கவும்.

* மூன்று குழுவும் கொடுக்கப்பட்ட மூன்று பாடப்பகுதிகளிலும் போதிய அறிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

* உங்கள் குழுவிற்கு வழங்கப்பட்டிருக்கும் பாடப்பகுதிகளைப் பயன்படுத்தியே வினாக்கள் தயார் செய்யப்பட வேண்டும்.

* சுருக்கமான வினா, விடைகளைத் தயார் செய்க.

* புதிர்ப்போட்டியில் உற்சாகத்துடன் ஈடுபடுக.

7. புள்ளிவழங்கும் நியதி :

* தயாரிக்கப்பட்ட வினாப்பத்திரம்
* வினாப்பத்திரத்திற்குரிய விடைகள்
* புதிர் போட்டியில் கேட்கப்பட்ட வினாக்களுக்கு அளிக்கப்பட்ட சரியான விடைகள்
* போட்டியில் வெற்றி தோல்விகளை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளும் தன்மை.
* போட்டியில் ஆர்வத்துடன் ஈடுபடுவார்.

8. புள்ளித்திட்டம் :

(நியதிகளுக்கேற்ப)

| | | | |
|---|---|---|---|
| * மிகவும் நன்று | - | 4 | புள்ளி |
| * நன்று | - | 3 | புள்ளி |
| * சாதாரணம் | - | 2 | புள்ளி |
| * அபிவிருத்தியடைய வேண்டும் | - | 1 | புள்ளி |

## கருவி 02

1. கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் : இரண்டாம் தவணை
2. உள்ளடங்கும் தேர்ச்சி மட்டம் : 4.1
3. கருவிக்குரிய பாடப்பகுதிகள் : சிறுவர்பாடல் ("கண்ணன் புரிந்தலீலை")
4. கருவியின் தன்மை : செய்ம்முறைப் பரீட்சை
5. கருவியின் நோக்கம் : "கண்ணன் புரிந்தலீலை" என்ற பாடலின் கருத்தினைக் கூறுவார்.
   : இப்பாடலை மனனம் செய்து இராக, தாளத்துடன் பாடுவார்.

6. கருவியைப் பயன்படுத்தும் முறைப்பற்றிய ஆலோசனைகள்:

ஆசிரியருக்கு :

- மாணவரைக் குழுவாகவோ, சோடி சேர்த்தோ, தனியாகவோ, பாடச் சந்தர்ப்பம் அளிக்குக.
- பாடும்போது மதிப்பீட்டிற்குரிய நியதிகளுக்கேற்ப கணிப்பீடு செய்க.
- குழுநிலையில் அல்லது சோடியாக ஆற்றுகைப்படுத்தும் போது தனித்தனியான ஒவ்வொரு மாணவரது திறனையும் அவதானித்து மதிப்பீட்டிற்குரிய நிபந்தனைகளுக்கேற்ப கணிப்பீடு செய்க.

மாணவர்களுக்கு :

- கண்ணன் புரிந்தலீலை – என்ற பாடலின் கருத்தினைக் கூறுவதற்குத் தயாராகுக.
- கண்ணன் புரிந்தலீலை – எனும் சிறுவர் பாடலை இராக, தாளத்துடன் பாடிப் பயிற்சி செய்க.
- சரியான உச்சரிப்புடன் பாடலை மனனம் செய்க.
- பாடலை இராக, தாளத்துடன் பாடுக.

07. புள்ளி வழங்கும் நியதி :

1. பாடலின் கருத்தினைக் கூறுவார்.
2. தெளிவாக உச்சரிப்பார்.
3. இராகத்தோடு பாடுவார்.
4. தாளத்தோடு பாடுவார்.
5. மனனம் செய்து சரியாக ஒப்புவிப்பார்.

08. புள்ளித்திட்டம் (நியதிகளுக்கேற்ப) :

| | |
|---|---|
| மிகநன்று | 04 புள்ளி |
| நன்று | 03 புள்ளி |
| சாதாரணம் | 02 புள்ளி |
| விருத்தியடைய வேண்டும் | 01 புள்ளி |

## கருவி 03

1. கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் : மூன்றாம் தவணை
2. உள்ளடங்கும் தேர்ச்சி மட்டம் : 6.2
3. கருவிக்குரிய பாடப்பகுதிகள் : சமய, கலாசார நிகழ்ச்சிகள் தொடர்பான கலை அம்சத்தை வெளிக் கொணர்வார்.
   * நத்தார் விழா
4. கருவியின் தன்மை : வெளிக்களப்புத்தகம்:
5. கருவியின் நோக்கம் :
   - நத்தார் விழா தொடர்பான இசை, நடனம், நாடகம், சித்திரம் தொடர்பான விளக்கத்தைப் பெறுவார்.
   - நத்தார் விழா தொடர்பான கலை அம்சத்தை வெளிக் கொணர்வார்.
   - "நத்தார் விழா தொடர்பான கலை அம்சங்கள்" என்ற தலைப்பில் வெளிக்களப்புத்தகம் ஒன்றினைத் தயாரிப்பார்.

6.கருவியைப் பயன்படுத்தும் முறைபற்றிய ஆலோசனைகள்:

ஆசிரியருக்கு :

- வெளிக்களப்புத்தகத்தின் அமைப்புப் பற்றி விளக்குக.
  உ.+ம்:-
  புத்தக அமைப்பு
- அட்டைப்படத்தினைத் தயர் செய்தல்
- உள்ளடக்கம்
- முகவுரை
- நன்றியுரை
- நத்தார் விழா தொடர்பான இசை, நடனம், நாடகம்,சித்திரம் போன்ற விடயங்களைச் சேரிப்பதற்கு ஆலோசனைகளை வழங்குக.
- ஒவ்வொரு மாணவரது தனி ஆக்கமாக இருத்தல் வேண்டும் என்பதனைக் கூறுக.
- கொடுக்கப்பட்ட கால எல்லைக்குள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதனைக் சுறுக.

மாணவருக்கு :

- "நத்தார் விழா தொடர்பான கலை அம்சங்கள்" - எனும் தலைப்பிற்கேற்ப எவ்வாறு தகவல்களைச் சேகரிக்க வேண்டும் என்பது பற்றிய ஆலோசனைகளை ஆசிரியரிடம் கேட்டறிக.
- வெளிக்களப்புத்தகத்தில் அமைப்புப் பற்றியும் கேட்றிக.
- கால எல்லையை ஆசிரியரிடம் கேட்டறிக.
- ஒவ்வொரு மாணவரும் தனித்தனியாக செயற்பாட்டில் ஈடுபடுக.
- கொடுக்கப்பட்ட கால எல்லைக்குள் "நத்தார் விழா தொடர்பான கலை அம்சங்கள்" என்ற தலைப்பில் வெளிக்களப்புத்தகம் ஒன்றினைத் தயாரித்துச் சமர்ப்பிக்குக.

7. புள்ளி வழங்கும் நியதி :
   - தலைப்பிற்கேற்ப தகவல்களின் பொருத்தமான தகவல்களை சேகரிப்பார்.
   - ஆர்வத்துடன் விடயங்களைத் தேடிக்கொள்வார்.
   - நேர்த்தியாகப் புத்தகத்தினை ஆக்குவார்.
   - குறித்த காலத்தில் சமர்ப்பிப்பார்.

8. புள்ளி திட்டம் (நியதிகளுக்கேற்ப) :

| | | |
|---|---|---|
| மிகவும் நன்று | - | 4 புள்ளி |
| நன்று | - | 3 புள்ளி |
| சாதாரணம் | - | 2 புள்ளி |
| விருத்தியடைய வேண்டும் | - | 1 புள்ளி |

කර්ණාටක සංගීතය - 6 ශ්‍රේණිය

ගුරු මාර්ගෝපදේශ සංග්‍රහය

2010/T/06/TIM/3000